www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஏப்ரல் - 2005
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



நேபாளம்:

## இமயத்தின் மீது சிவப்பு நட்சத்திரம்!

படிப்பகம்

www.padippakam.com



# தேனீக்கள் வெறுக்கின்றன...

ஊர் நிலைமையைக் குறிப்பாகச் சொல்வது போல "ஏதோ நகர்ந்து கொண்டிருந்தது மண்ணியாறு." கரையோரம் நடப்பவர்களைப் பார்த்துப் பளிச்செனச் சிரித்துத் தலையசைத்து நலம் விசாரிக்கும் நாணல் பூக்களைப் பார்ப்பது அபூர்வமாகி விட்டது. கரையெங்கும் மண்டிக் கிடக்கும் கருவச் செடிகளில் உரசி, உரசி உடல் புண்ணாகி மண்ணியாறு துவண்டு நெளிந்தது.

"சும்மா எறங்கி முங்குங்க, மாடு மடியக் கூட தண்ணி உரசுல, நீங்க என்னடான்னா? படியில நின்னுக்கிட்டே முங்குறீங்க. நடு ஆத்துக்குப் போங்க, கொஞ்சம் தண்ணி தெளிவு காட்டும்" - உரிமையோடு கூறியவரிடம் "மணலா இருக்குமா?" என்று கேட்க, கடகடவெனச் சிரித்தார். "நீங்க வேற, அஞ்சாறு வருசமா ஆத்துல தண்ணியே வரல, கொஞ்ச நஞ்சம் அடி மண்ணையும் ஆளுக்காளு கெளப்பிட்டான். ஒப்புக்குக் கல்யாணம் பண்ணிகிட்டு ஊருக்கு எளச்சவ கதயா மண்ணியாறு கெடந்து மளுமாறுது. எங்க பொண்டுக மண்ணியாத்துல மஞ்சக் குளிச்சு எவ்ளோ நாளாகுது தெரியுங்களா?" - பழுப்பு நிற வேட்டியில் பல வருசத்துக் கதையை முடிந்து வைத்திருந்தவர் போல உதறிக் காட்டினார்.

எதிர்த்த கரையில் மரத்தடியில் வெள்ளை வெளேர் வேட்டியுடன் கூட்டமாக ஆட்களும், தடித்த பூணூலுடன் மூன்று பார்ப்பனர்களும் கூடிக் கிடந்தனர். நான் உற்று நோக்குவதைக் கவனித்தவர், "தெவசம் கொடுக்குறாங்க தம்பி, கோபால் ராவுன்னு சுத்துப்பட்டு கோவிலு நிலமா கையில வச்சிருந்தான் மனுசன். தூத்துறப்ப காத்துல செதற மணியக் கூட காலால தள்ளி மூட்டக் கட்டுவான். செத்தப்ப ஒரு புள்ள கூடப் பக்கத்துல இல்ல. எல்லாம் பட்டாளத்துல இருக்கானுவ. பெரியவன் வந்துருக்காம்போல" என்றார். "பெரியவனா, அவன் அப்பனுக்கு மேல, இந்த வாழச் சருவெல்லாம் புடிச்சிப் பீறாய்ஞ்சு எச்செலை மாறி அத மெட்ராசுக்குக் கடத்திக்கிட்டுப் போறான் பாரு, யாராவது ரெண்டு கேட்டா, இது மெட்ராசுல என்ன வெல தெரியுமாங்குறான்" — இன்னொருத்தரும் சேர்ந்து கொண்டார்.

எதிர்க்கரை மரத்தடியில் கூடியிருந்த கூட்டம் திடீரென ஆ,ஊ என கலைந்து ஓடினர். திவசம் கொடுக்க குந்தியிருந்தவனும், பார்ப்பனரும் "அய்யோ... அய்யோ" என ஒரே அலறலும் ஓட்டமும் பார்க்க கலவரமாய்த் தெரிந்தது. "ஓடு, ஓடிடு ஏய் ஓடித்தொலடா!" அலறியபடியே ஓடிய பார்ப்பனர் வேட்டியையும், அவிழ்த்து தலையில் போட்டுக் கொண்டு ஓடி ஆத்துக்குள் பொத், பொத்தென்று விழ, பார்க்கவே பதட்டமானது. எதிர்க்கரை மரத்துக் கிளிகளும் பீதி ஒலி எழுப்பிச் சிதற சூழ்நிலை மோசமாகத் தெரிந்தது. ஆத்துக்குள் விழுந்தவர்களோ வெட்டுப் பட்டது போல விழுந்து புரண்டனர்.

குளித்துக் கொண்டிருந்த அனைவரும் பீதியாகி எதிர்க்கரைக்கு ஓடினோம். "என்னாங்க? என்னாங்க?" ரொம்பதூரம் தள்ளி நின்று ஒருத்தர் புலம்பிக் கொண்டிருந்தார்: "நம்ம கோபால்ராவ் திவசம்னு தெரியும் தம்பி. கொஞ்ச நேரம் முன்னாலதான் அய்யிருங்க தொபீர், தொபீர்னு ஒரே சத்தம், அப்புறம் என்னடான்னா அவனவன் வேட்டிய தலையில போட்டுக்கிட்டு ஓடி ஆத்துல வுழுவுறான், பதில் சொல்லமாட்டேங்குறான், அவனவன் ஓடுறான், ஒரு எளவும் புரியல..."

"நீ வேறய்யா வெவரம் புரியாம. இவுனுக எளவு பண்ண வந்துதானே இவ்வளவும். மொதல்ல தள்ளிப் போயா, தேனீ புடுங்கிரப் போவுது. மரத்தும் மேலே எத்தோசோடு தேன் கூடு தொங்குது? மெட்ராஸ்காரனுக்குத்தான் அறிவில்லே. மேல்லோகம், கீழ்லோகங்குறான், மிச்ச வெவரமெல்லாம் உனக்குத் தெரியாதுங்குறான், இந்த உள்ளூர் அய்யருங்களாவது மேல உள்ள தேன்கூட்ட பாக்க வேணாம்? இவனுக பாட்டுக்கும் கீழ சுள்ளியப் போட்டுக் கொளுத்த, தேன்கூடு கலைஞ்சு எல்லாம் கௌம்பிடுச்சுய்யா, போட்டுப் புடுங்குன புடுங்கல்ல அவனவன் அவுத்துப் போத்திக்கிட்டு ஓடுனாம்பாரு, நாங்கூட மொதல்லே அப்பனோட குத்தக பாக்கியே மனசுல வச்சிக்கிட்டு எவனோ பூந்து வெட்றான்னுதான் நெனச்சேன்... ஆத்தாள, கட்ட அய்யிரு கோவணத்தோட, தலயில வேட்டியப் போட்டுக்கிட்டு ஓடுனாம் பாரு, நாயி வேறு தொரத்த ஆரம்பிச்சிருச்சி... பாவம் பெரியவன்தான் சீரியஸாகி கும்மோணம் கொண்டு போயிருக்காங்க..: மேல தேன் கூட்ட வச்சிகிட்டு எவனாது செத்தயக் கொளுத்துவானா?.. இவங்களால எல்லாப் பயலும் ஓட வேண்டியதாயிடுச்சு, எளவெடுக்க!"

— விசயத்தைக் கேள்விப்பட்டவுடன் எல்லோரும் "நல்ல பயலுக" என்று பரிதாபத்திற்குப் பதில் குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருந்தனர். செய்தி அலைஅலையாய்ப் பரவி பார்ப்பனரின் 'ஞானத்தை' அறிந்து ஊரே சிரித்தது. முதல்முறையாக எல்லோருக்கும் புரியும் 'அம்மா அய்யோ' என்று மந்திரம்போலப் புலம்பிக் கொண்டே அய்யர்கள் கரையேற, என்னாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. உழைப்பதற்குப் பேர்போன தேனீக்கள் உழைக்காத கும்பலை விரட்டியவிதம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை.

● சுடர்விழி



படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்
- போர் : **22**
- குரல் : **9-10-11**
- பிப்ரவரி-ஏப்ரல், 2005

உள்நாடு
தனிஇதழ் : ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

*சந்தா படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 5 மணி வரை

அட்டை மற்றும் உள் ஓவியங்கள்:
முகிலன்

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# நரேந்திர மோடியே ஒரு ''தேசிய'' அவமானம்

குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு அமெரிக்க ''விசா'' (நுழைவுச் சீட்டு) மறுக்கப்பட்டதும் ஆத்திரம் பொங்கக் குரைக்கிறது இந்துமதவெறிப் பாசிசக் கூட்டம்; இந்தியாவுக்கே, இந்திய மக்களுக்கே, இதன் அரசியல் சட்டத்துக்கே அவமானம் நேர்ந்துவிட்டது, இந்தியாவின் இறையாண்மைக்கே, இதன் ஜனநாயக மரபுகளுக்கே ஆபத்து வந்துவிட்டது என்று கூச்சல் போடுகிறது; ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்சியின் இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டஸ், அமெரிக்க விமான நிலையத்தில் அம்மணமாக்கி சோதனையிடப்பட்டார். போபால் விஷவாயுப் படுகொலைகளுக்குக் காரணமான முதலாளி பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டான், இந்திய ஏழை விவசாயி மக்கள் மீது பூச்சி மருந்து தெளித்து பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. தினந்தோறும் இவ்வாறானவை நடக்கும்போது அவமானம் இழைக்கப்பட்டதாக இவர்கள் யாருமே கருதவில்லை.

நரேந்திர மோடிக்கு அமெரிக்க ''விசா'' மறுக்கப்பட்ட பிறகுதான் சில உண்மைகள் இந்துமதவெறி பாசிஸ்டுகளின் ஞானத்துக்கு உறைக்கின்றன. ஈராக் படுகொலைகளையும் ''அபுகிரைப்'' சிறைச் சித்திரவதைகளையும் சான்று காட்டி, மனித உரிமைகள் விஷயத்தில் அமெரிக்காவின் இரட்டைத் தரம்பற்றி இப்போது கதறுகின்றனர். இவர்கள் இதுவரை ''பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்காவின் போர்'' விஷயத்திலும் இரட்டை அளவுகோல் பின்பற்றப்படுவதாகக் கதறிவந்தார்கள். அது அமெரிக்காவுக்கு எதிராக அல்ல, ஆதரவாக. அதாவது இசுலாமிய சர்வதேச பயங்கரவாதம் என்று அறிவித்து அந்த பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவை (தன்னை) இளைய பங்காளியாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று மன்றாடினார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, மனித உரிமை மீறல்களைத் தடுப்பது, மதச் சுதந்திரத்தைப் பேணுவது, போதைப் பொருள் கடத்தல் குற்றங்களுக்கு எதிரான தேடுதல் வேட்டை, சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர், அணு ஆயுத மற்றும் பேரழிவு ஆயுதக் குவிப்பைத் தடுப்பது என்ற பெயர்களில் அமெரிக்கா உலகம் முழுவதும் உளவுப் படைகளையும் இராணுவ அதிரடிப் படைகளையும் ஏவி மேலாதிக்க, பயங்கரவாத வெறியாட்டம் போடுகிறது. உலக நாடுகளின் இறையாண்மையை மதியாத இந்த நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் இதுவரை இந்தியாவும் குறிப்பாக இந்து மதவெறி பாசிஸ்டுகளும் துணை போயிருக்கிறார்கள்.

குஜராத்தில் மதவெறிப் படுகொலைகள் நடந்தபோது சின்னஞ்சிறிய பின்லாந்து நாடு கூட கடும் கண்டனம் தெரிவித்தது. ஆனால் அமெரிக்காவோ மௌனம் சாதித்தது. இப்போது ஈராக் படையெடுப்பு அபுகிரைப் சித்திரவதை குறித்து நீலிக்கண்ணீர் வடிக்கும் மோடியின் அரசியல் குருவும் முன்னோடியுமான அத்வானி அப்போது அமெரிக்காவிற்கே போய் இந்தியப் படையை அனுப்பித் தருவதாக உறுதியளித்தார். பா.ஜ.க. மற்றும் காங்கிரசு அரசுகளின் வெளியுறவு மந்திரிகளும் கூட அவ்வாறே செய்தனர். இங்குள்ள எதிர்ப்பு காரணமாக தனியார் படை திரட்டி அனுப்பியுள்ளனர். இந்த வகையில் இந்துமதவெறிப் பாசிஸ்டுகளுக்கும் காங்கிரசுக்கும் பெரும் வேறுபாடு இல்லை. அரசியல் மற்றும் அரசுதந்திர காரணங்களுக்காக வேண்டியபோது அன்னிய பிரமுகர்களை அழைத்து விருதுகளும் கையூட்டுகளும் வழங்குவதும், வேண்டாதபோது விசா மறுப்பு உட்பட எதிர் நடவடிக்கைகள் எடுப்பதும் புதிதல்ல. விசா வழங்குவது அல்லது மறுப்பதை அரசுதந்திர ஆயுதமாக இந்தியா அமெரிக்கா உட்பட பல நாடுகளும் பயன்படுத்துகின்றன. விடுதலைப்புலி கிட்டு, பாலசிங்கம் மட்டுமல்ல, உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்த கார்த்திகேசு சிவத்தம்பிக்குக் கூட விசா மறுக்கப்பட்டது. சமீபத்தில் அசாம் மற்றும் வடகிழக்கிந்தியா குறித்த சிறப்பு ஆராய்ச்சியாளரான டச்சு பேராசிரியருக்கு விசா மறுக்கப்பட்டிருக்கிறது.

மோடி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்; இந்தியக் குற்றவியல் சட்டத்தால் குற்றவாளி என்று நிரூபித்து தண்டிக்கப்படாத அவருக்கு விசா மறுப்பது சரியல்ல என்று காங்கிரசு உட்பட போலி தேசபக்தர்களும் மதச்சார்பற்றவாதிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இட்லர் கூடத்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; ஜெர்மன் சட்டத்தால் தண்டிக்கப்படவில்லை. மதவெறிப் படுகொலைகளுக்குத் தலைமையேற்ற மோடி இன்னமும் தண்டிக்கப்படாமல் இருப்பது இந்தியாவும் அதன் அரசியல் சட்டமும் தனக்குத்தானே அவமரியாதை செய்து கொள்வதாகும். வெட்கித் தலைகுனிய வேண்டியதாகும். நரேந்திர மோடிக்கு விசா மறுப்பு இந்துமத வெறியர்களுக்குக் கிடைத்த தக்க தண்டனை, அவர்கள் கன்னத்தில் விழுந்த அறை என்று சிலர் ஆறுதல் அடைகின்றனர். இது அநீதி, அக்கிரமங்களை எதிர்த்து போராடி வீழ்த்துவதற்குத் துணிவு கொள்ளாதவர்கள் ''கடவுளாகப் பார்த்துக் கூலி தருவான்'' என்று தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் கையாலாகாத்தனம்தான். மோடிகள் இந்த நாடே, இந்தச் சமூகமே வெறுத்து அழித்தொழிக்கப்பட வேண்டியவர்கள். •

படிப்பகம்

www.padippakam.com

# நேபாளம்: இமயத்தின் மீது சிவப்பு நட்சத்திரம்!



**நே**பாளம் - **ப**ற்றியெரிகிறது கபிலவாஸ்து. புத்தன் பிறந்த அதே மண் தான். அடிமைச் சமூகத்தின் கொடுங்கோன்மைக்கு எதிரான பண்டைப் பொதுவுடைமைச் சமூகத்தின் குரலாய், ஒரு சமத்துவச் சமுதாயத்தை விழையும் ஏக்கப் பெருமூச்சாய், பெருமைமிக்க பார்ப்பன எதிர்ப்பு மரபின் வரலாற்றுச் சின்னமாய்த் திகழ்ந்த பவுத்தம் எந்த மண்ணில் பிறந்ததோ, அந்த மண் பற்றி எரிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பவுத்தத்தை வீழ்த்திய பார்ப்பனக் கொடுங்கோன்மையின் புதிய அவதாரத்தை எதிர்த்து இன்று களத்தில் நின்று கொண்டிருப்பவர்கள் கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் — நேபாளத்தின் மாவோயிஸ்டுகள். கபிலவாஸ்துவில் செங்கொடி. நேபாளத்தின் பெரும்பான்மையான மாவட்டங்களில் எங்கும் மாவோயிஸ்டுகளின் செல்வாக்கு!

தனது அதிகாரத்தின் நாட்கள் எண்ணப்படுவதைப் புரிந்து கொண்ட நேபாளத்தின் ஆளும் வர்க்கம், தனக்கு அடிமையாக வாழச் சம்மதிக்காத மக்களை வேட்டையாடுகிறது. கபிலவாஸ்துவின் கிராமப்புறங்களில் மட்டும் 800 வீடுகள் எரிகின்றன. நூற்றுக்கணக்கான வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கிறார் மாவோயிஸ்டு மத்தியக் கமிட்டியின் தகவல் தொடர்பாளர் கிருஷ்ணபகதூர்மகாரா.

கபிலவாஸ்து ஒரு உதாரணம். பிரதமர் நீக்கப்படுவதாகவும் அடுத்த 3 ஆண்டுகளுக்கு மன்னராட்சி அமல் செய்யப்படுவதாகவு ம் கடந்த பிப்ரவரி 1-ஆம் தேதியன்று நேபாள மன்னர் ஞானேந்திரா தொலைக்காட்சியில் அறிவித்துக் கொண்டிருந்த அந்தக் கணமே வெளிப்படையான இராணுவ அடக்குமுறை தொடங்கிவிட்டது. நேபாளத்தின் எல்லாத் தொலைபேசிகளும், இணையத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் அனைத்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, அமைதியாகக் கூடும் உரிமை அனைத்தும் தடை செய்யப்பட்டன. ''மன்னரையும், இராணுவத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ விமர்சிப்பவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்படுவர்; சொத்துக்கள் உடனே பறிமுதல் செய்யப்படும்'' என்கிறது மன்னரின் அவசரச் சட்டம்.

முன்னாள் பிரதமர்கள் 5 பேர் உள்ளிட்டு எல்லா கட்சித் தலைவர்களும், மனித உரிமை அமைப்பினரும், பத்திரிக்கையாளர் சங்கத் தலைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர்.

மாவோயிஸ்டுகள் மீதும் அவர்களை ஆதரிக்கின்ற மக்கள் மீதும் நேபாள இராணுவம் செலுத்தும் அடக்குமுறை புதியதல்ல; மாவோயிஸ்டுகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் கடத்திச் சென்று தடயம் ஏதுமின்றிக் கொன்றொழிப்பதை தனது செயல்தந்திரமாகக் கொண்டிருக்கிறது நேபாள இராணுவம்.

''இனி மன்னருக்கு எதிராகப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மாவோயிஸ்டுகள் என்று அழைக்கப்படுவார்கள்; அவ்வாறே நடத்தப்படுவார்கள்'' என்கிறது *நியூயார்க் டைம்ஸ்*. எல்லா முதலாளித்துவக் கட்சிகளும் தடை செய்யப்பட்டிருப்பது இதற்கான சான்று. ''வர்க்க முரண்பாடுகள் கூர்மையடையும்போது இடைநிலை என்பது சாத்தியமற்றதாகும்'' என்ற வரலாற்று உண்மைக்கும் இது இன்னொரு நிரூபணம்.

**ஜனநாயகத்தை உருவாக்க முடியாட்சி!**

''மாவோயிஸ்டுகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு பிரதமர் தவறிவிட்டார்; நிலைமையைக் கையாளும் திறமை அரசியல் வாதிகளுக்கு இல்லை'' என்பதுதான் இந்த மன்னராட்சிப் பிரகடனத்தை நியாயப்படுத்த மன்னர் ஞானேந்திரா முன்வைக்கும் நியாயம்! ''அமைதியும் பாதுகாப்பும் இன்றி தேர்தல் நடத்த முடியாது; தேர்தல் நடத்தாமல் ஜனநாயக அரசை நிறுவ முடியாது; எனவே அமைதியை நிலைநாட்டத்தான் இந்த மன்னராட்சிப் பிரகடனம்'' என்று விளக்கம் தருகிறார் மன்னரால் நியமிக்கப்பட்ட வெளியுறவுத்துறை அமைச்சர் ரமேஷ் நாத் பாண்டே. அதாவது, ஜனநாயகத்தை நிலைநாட்டும் பொருட்டுதான் சர்வாதிகாரத்தைப் பிரகடனம் செய்திருக்கிறாராம் மன்னர்!

இரண்டாவது முறை அதிபராகப் பதவியேற்ற ஜார்ஜ் புஷ் தனது 21 நிமிட தொலைக்காட்சி உரையில் 27 முறை 'சுதந்திரம்' என்ற சொல்லை ஜெபித்தாராம். மன்னர் ஞானேந்திரா தனது தொலைக்காட்சி உரையில் 'பல கட்சி ஜனநாயகம்' என்ற சொல்லை 11 முறை பயன்படுத்தி ஜனநாயகத்தின் பால் தான் கொண்டிருக்கும் விசுவாசத்தை உறுதி செய்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

நேபாளத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பித்து டெல்லி வந்திருக்கும் சுஜாதா கொய்ராலாவோ (நேபாள காங்கிரசு கட்சித்தலைவர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவின் மகள்) ''நேபாள மன்னராட்சியை 60 ஆண்டுகளாக நாங்கள் பாதுகாத்தோம். எங்களுக்கு இந்தக் கதியா?'' என்று புலம்பியிருக்கிறார்.

ஜனநாயகத்தைக் கொண்டு வரத் 'துடிக்கும்' மன்னர்! மன்னராட்சியைப் பாதுகாத்ததாக வாக்குமூலம் தரும் 'ஜனநாயக வாதி'! குடியரசுக்கும் முடியரசுக்கும் ஓர் எழுத்துதான் வேறுபாடு என்பதென்னவோ உண்மைதான். அதற்காக இப்படியா?

அப்படித்தான். நேபாள 'ஜனநாயகத்தின்' வரலாறே அப்படித்தான். 'அரசியல் நிர்ணய சபை' என்பது 1950-இல் அன்றைய நேபாள மன்னர் திரிபுவன் ஷா மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி. 1990 வரை பலவிதமான பித்தலாட்டங்கள் மற்றும் அடக்குமுறை மூலம் நேபாளத்தின் நிலப்பிரபுத்துவச் சக்திகள் மன்னராட்சியைத் தக்கவைத்துக் கொண்டன. 1990-இல் கிளம்பிய ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம், சில சீர்திருத்தங்களுக்கு இணங்குவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலையை மன்னர் பிரேந்திராவுக்கு உருவாக்கியது. அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், அரசியல் சட்டம் இயற்றப்பட்டது. மன்னராட்சி, 'அரசியல் சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி'யாக அவதாரம் எடுத்தது. தோற்றத்தில் இங்கிலாந்தின் அரசமைப்பை ஒத்திருந்த போதும் உள்ளடக்கத்தில் நாடாளுமன்றத்தை விஞ்சும் அதிகாரத்தை மன்னனுக்கு வழங்குவதாகவே இந்த அரசியல் சட்டம் அமைந்திருந்தது.

1990 அரசியல் சட்டத்தை இயற்றும் குழுவின் உறுப்பினராயிருந்த துங்கனாவின் சொற்களில் கூறுவதானால், ''ஓட்டைகளை அடைக்க நினைத்தோம்; ஆனால் அவை பெரிதாகிவிட்டன.''

**முடியாட்சியின் கோவணமாக ஜனநாயகம்!**

ஓட்டைகள் தம்மைத்தாமே பெரிதாக்கிக் கொள்வதில்லை. சமூகத்தில் நிலப்பிரபுத்துவச் சுரண்டலும், சாதி ஆதிக்கமும் இம்மியளவும் மாறாமல் பாதுகாத்துக் கொண்டே, முடியாட்சிக் கொடுங்கோன்மையின் அம்மணத்தை மறைக்கும் கோவணத் துணியின் பாத்திரத்தைத்தான் நேபாள ஜனநாயகம் ஆற்றியிருக்கிறது.

1991 தேர்தலில் நேபாளத்தின் போலி கம்யூனிஸ்டு கட்சி பிரதான எதிர்க் கட்சியாக வந்தது. மாவோயிஸ்டுகளோ 9 தொகுதிகளில் வென்றிருந்தனர். ஆளும் கட்சியான நேபாள காங்கிரசை ஆதரித்துக் கொண்டே முடியரசுவாதக் கட்சியையும் ஊட்டி வளர்த்தார் மன்னர் பிரேந்திரா. மாவோயிஸ்டுகள் வென்ற தொகுதிகள் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டன.

1994 தேர்தல் போலி கம்யூனிஸ்டுகள் தனிப்பெரும்பான்மை பெற்றுவிடுவார்கள் என்ற நிலையில் மன்னரும், நேபாளி காங்கிரசும் இணைந்து வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மை கிடைக்கவிடாமல் முடக்கினர். போலி கம்யூனிஸ்டுகள் அமைத்த கூட்டணி ஆட்சி ஒன்பதே மாதங்களில் கவிழ்க்கப்பட்டது.

**நேபாளத்தில் முடியாட்சியை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதென்ற கோரிக்கையை உலகமே ஆதரிப்பதுபோலத் தோன்றலாம். தோற்றம் உண்மையல்ல. பலகட்சி ஜனநாயகம் என்ற முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஜிகினா வேலைப்பாட்டை மீட்பதுதான் இவர்களது நோக்கம்!**



1996-இல் மாவோயிஸ்டுகள் இரு குறைந்தபட்சக் கோரிக்கைகளை முன்வைத்தனர். ''1. மன்னராட்சியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் 2. நேபாளம் ஒரு இந்து தேசம் என்பதை மாற்றி 'மதச்சார்பற்ற குடியரசு' என அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்.'' இந்த இரு கோரிக்கைகளும் கூட ஏற்கப்படாத நிலையில் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை அறிவித்தனர்.

2001-இல் மன்னர் பிரேந்திராவின் குடும்பம் முழுதும் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டபின் கொலைச் சதியில் சந்தேகிக்கப்பட்ட அவரது தம்பி ஞானேந்திரா அடுத்த மன்னரானார். அவருக்கு நற்சான்று வழங்கினார் நேபாளி காங்கிரஸ் தலைவர் கொய்ராலா. 2002-இல் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து நான்கு பிரதமர்களைப் பந்தாடியிருக்கிறார் ஞானேந்திரா. இந்த வெட்கங்கெட்ட கேலிக் கூத்தில் பதவிக்காக முண்டியடித்த நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்கள் மாவோயிஸ்டுகளின் அறைகூவலை மட்டும் வேண்டுமென்றே புறக்கணித்தனர். முடியாட்சி ஒழிப்பு ஐக்கிய முன்னணியில் அவர்களுடன் இணைய மறுத்தனர். மாவோயிஸ்டு அபாயத்தை எதிர்கொள்ள, மன்னருடன் அனுசரித்துப் போகுமாறு அமெரிக்காவும் இந்தியாவும் வழங்கிய ஆலோசனையை சிரமேற்கொண்டு செயல்பட்டனர்.

பேச்சுவார்த்தையின் போது ''வட்ட மேசை மாநாடு, இடைக்கால அரசு, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்'' ஆகிய கோரிக்கைகளை மாவோயிஸ்டுகள் முன்வைத்தனர். இந்த மையமான கோரிக்கைகளைப் பற்றிப் பேசவே கூடாது என்று தனது பிரதிநிதிகளுக்குத் தடை விதித்ததன் மூலம் பேச்சுவார்த்தையை முறித்த ஞானேந்திரா, இப்போது தன்னால் நியமிக்கப்பட்ட பொம்மைகளான பிரதமர்களை 'லாயக்கற்றவர்கள்' என்று குற்றம் சாட்டுகிறார்.

**கிழிந்தது கோவணம்!**

தனது கோரத் தோற்றத்தை மறைத்துக் கொள்ளத் தேவைப்பட்ட நாடாளுமன்ற ஜனநாயகக் கோவணம் கிழிந்து கந்தலாகிவிட்டதால் அதைக் கழற்றி வீசிவிட்டு அம்மணமாக நின்று மக்களை அச்சுறுத்துகிறது நேபாளத்தின் முடியாட்சி. மாவோயிஸ்டு கட்சித் தலைவர் தோழர் பிரசண்டாவின் வார்த்தைகளில் சொல்வதெனில், ''இது நிலப்பிரபுத்துவக் கும்பலின் கடைசிக் கிறுக்குத்தனம்.''

முடியாட்சியை ஒழித்து நேபாளத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதென்ற கோரிக்கையை இன்று உலகமே ஆதரிப்பது போலத்தான் தோன்றுகிறது. தோற்றம் உண்மையல்ல. ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்பதன் உண்மையான பொருள் என்ன?

மன்னராட்சியையும் அதனைப் பதுகாக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளையும் ஒழிப்பது, நிலச்சீர்திருத்தத்தை அமல்படுத்துவது, முடியரசு வாதக் கட்சிகளைத் தடை செய்வது, மன்னரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ராயல் நேபாள இராணுவத்தைக் கலைப்பது, அதன் கொடிய அதிகாரிகளைத் தண்டிப்பது, நேபாளத்தை மதச்சார்பற்ற

www.padippakam.com

குடியரசாக அறிவித்து பார்ப்பன இந்து மதத்தின் மேலாதிக்க நிலையை ஒழிப்பது, நிலப்பிரபுத்துவ சாதி-தீண்டாமை உறவுகளையும் ஆணாதிக்கக் கொடுமையையும் ஒழித்துக் கட்டுவது, சிறுபான்மை பழங்குடி மக்கள்மீது செலுத்தப்படும் ஒடுக்குமுறைகளைத் தடுத்து நேபாளி தேசிய உணர்வை உருவாக்குவது, தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைத்து ஏகாதிபத்தியங்கள் மற்றும் இந்திய ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்கத்தையும் சுரண்டலையும் ஒழிப்பது - இவை நேபாள ஜனநாயகப் புரட்சியின் அடிப்படைக் கடமைகள்.

**மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் தந்திரமாக ஜனநாயகம்!**

இன்று நேபாளத்தில் ஜனநாயகத்தை 'மீட்க' விரும்பும் நாடாளுமன்றக் கட்சியெதுவும் மேற்கூறிய முறையில் அந்தச் சமூகத்தையும் அரசமைப்பையும் மாற்றியமைப்பதைத் தம் நோக்கமாகக் கொள்ளவில்லை. பேச்சுரிமை, எழுத்துரிமை, வாக்குரிமை, பல கட்சி ஜனநாயகம் என்ற முதலாளித்துவ ஜனநாயகத்தின் புறத்தோற்றத்தை - அதன் ஜிகினா வேலைப்பாட்டை - மீட்பதுதான் இவர்களது நோக்கம்.

ஜனநாயகம் என்பது சமூக, அரசியல் புரட்சிக்கான முழக்கமாக அல்லாமல், மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்கான நியாயவுரிமையை வழங்கும் தந்திரமாகவே நேபாளத்தின் 'ஜனநாயக'க் கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது. ஒருபுறம் மன்னரின் இராணுவ ஒடுக்குமுறை; மறுபுறம் அதனை எதிர்த்துப் போர் நடத்தும் மாவோயிஸ்டுகள் - என்று இருகூறாகப் பிரிந்து நிற்கும் நேபாளத்தில் இதேநிலை தொடர்ந்தால் தமது சமூக அடித்தளத்தை முற்றிலுமாக இழந்துவிடுவோமென்ற அச்சம் நாடாளுமன்றக் கட்சிகளை வாட்டுகிறது.

அதனால்தான் மாவோயிச 'அபாயத்தையும்' மன்னராட்சிக் கொடுமையையும் சமமாகச் சித்தரிக்கிறார்கள். ''மாவோயிச அபாயத்திலிருந்து நாட்டைக் காக்க ஜனநாயகமே முன்நிபந்தனை'' என்று கதறுகிறார்கள். ஞானேந்திராவோ, ''மாவோயிஸ்டுகளை ஒழிப்பதுதான் 'ஜனநாயகத்தை' அறிமுகப்படுத்துவதற்கான முன்நிபந்தனை'' என்கிறார். நோக்கத்தில் ஒற்றுமை! வழிமுறையில் வேற்றுமை!

மாவோயிஸ்டுகளை ஒழிப்பது என்பதன் பொருள் சில ஆயிரம் கட்சி ஊழியர்களைக் கொன்றொழிப்பது என்பது மட்டுமல்ல. நேபாளத்தின் ஆகப் பெரும்பான்மையான கிராமப்புறங்களில் நிலப்பிரபுக்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு உழுபவனுக்கு மட்டுமே நிலம் என்ற விதி அமலாக்கப்பட்டுள்ளது. சாதி, தீண்டாமை, பெண்ணடிமைத்தனம், பழங்குடிகள் மீதான ஒடுக்குமுறை அனைத்தும் தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. நிலப்பிரபுத்துவப் பஞ்சாயத்துகள் ஒழிக்கப்பட்டு 'விவசாயிகளின் கமிட்டிகள்' அதிகாரம் செலுத்துகின்றன. இவை மாவோயிஸ்டுகளின் சாதனைகள். *(பார்க்க: பெட்டிச் செய்தி)*



நேபாள மன்னன் ஞானேந்திர ஷா, இளவரசன் பரஸ் ஷா - அப்பன் கொலைகாரன், மகனோ குடிகாரன்!

இந்த ஜனநாயகத்தை ஒழிப்பதைத்தான் 'மாவோயிஸ்டுகளை ஒழிப்பது' என்று ஒளித்துப் பேசுகிறார்கள். ''சமூகத்தில், உடைமை உறவுகளில் நிலைநாட்டப்பட்டிருக்கும் இந்த ஜனநாயகத்தை ஒழிப்பதுதான் உங்களுக்கு அரசியல் ஜனநாயகம் வழங்குவதற்கான முன்நிபந்தனை'' என்று நாடாளுமன்றக் கட்சிகளிடம் வெளிப்படையாகச் சொல்கிறார் மன்னர். கட்சிகளோ, ''அரசியல் ஜனநாயகம் வழங்குங்கள்; மாவோயிஸ்டுகள் சமூகத்தில் நிறுவியிருக்கும் ஜனநாயகத்தை நாங்கள் ஒழித்துக் கட்டுகிறோம்'' என்று நாசூக்காகத் தெரிவிக்கிறார்கள்.

**அலங்காரச் சொல்லாக ஜனநாயகம்!**

ஒரு ஜனநாயகப் புரட்சியை தலைமையேற்று நடத்தி நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டும் தகுதியை முதலாளி வர்க்கம் வரலாற்று ரீதியில் ஏற்கெனவே இழந்துவிட்டது என்ற உண்மை நகைக்கத்தக்க முறையில் இன்னொரு முறை நிரூபிக்கப்படுகிறது.

ஜனநாயகம் என்ற கோரிக்கைக்காக ஒரு வர்க்கம் போராட வேண்டுமானால், நிலப்பிரபுத்துவ ஒழிப்பை அந்த வர்க்கத்தின் நலன் **உண்மையிலேயே** கோரவேண்டும்.

உள்நாட்டுத் தொழில்வளர்ச்சியே இல்லாத ஒரு நாட்டில், மன்னராட்சியுடன் பல்வேறு இழைகளால் பிணைக்கப்பட்டிருக்கும் வணிகர்களும் வர்த்தகச் சூதாடிகளும் தரகர்களுமே முதலாளி வர்க்கமாக நிலவும் நாட்டில், நிலப்பிரபுத்துவக் கோமான்களே முதலாளிகளாகவும் அறிவுத்துறையினராகவும் முதலாளித்துவ அரசியல்வாதிகளாகவும் மாறுவேடத்தில் தோன்றும் நாட்டில், மன்னர் குடும்பத்தின் ஒரு பிரிவுக்கு எதிராக இன்னொரு பிரிவிடம் தன்னை விற்றுக் கொள்வதையே 'முடியாட்சி எதிர்ப்பு நடவடிக்கை'யாகக் காட்டிக் கொள்ளும் நாடாளுமன்றக் கட்சிகள் நிறைந்த நாட்டில் - முதலாளித்துவ வர்க்கத்தைப் பொறுத்தவரை 'ஜனநாயகம்' என்பது ஒரு அலங்காரச் சொல்லாக மட்டுமே இருக்க முடியும். அல்லது படித்த நடுத்தரவர்க்கத்தின் கருத்தியல் ரீதியான ஆவேசமாக மிதக்கத்தான் முடியும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியம் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகம் என்ற பிரிக்கவொண்ணாத இரண்டு இலட்சியங்களை எதிரெதிராக நிறுத்தி சித்து விளையாடுகின்றன நேபாள ஆளும் வர்க்கங்கள். ஏகாதிபத்தியத்தை நத்திப் பிழைக்கும் தரகு முதலாளித்துவ வர்க்கம் தன்னை மன்னருக்கெதிரான ஜனநாயக சக்தியாகச் சித்தரித்துக் கொள்கிறது. ஜனநாயகத்தை மறுக்கும் நிலப்பிரபுத்துவக் கும்பலோ தேசத்தின் இறையாண்மையைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்துக்காகத்தான் அரியணையில் அமர்ந்திருப்பதாகக் கூறிக் கொள்கிறது.

புரட்சிப் பாதையில் முன்னேறி வரும் மாவோயிஸ்டுகள் இந்த நாடகத்தை அதன் கடைசிக் காட்சிக்கு இழுத்து வந்துவிட்டார்கள். ''வட்ட மேசை மாநாடு, இடைக்காலப் புரட்சிகரக் கவுன்சில், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்'' - என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய முன்னணிக்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

**'பழைய' ஜனநாயகம் இனி சாத்தியமா?**

நாடெங்கும் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள இந்தக் கோரிக்கைகள்,


படிப்பகம்

www.padippakam.com

போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட நாடாளுமன்றக் கட்சிகளை நடுங்கச் செய்துள்ளன. பெரும்பான்மையான கிராமப்புறங்களில் நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் வீழ்த்தப்பட்டு, மக்கள் அதிகாரம் நிலைநாட்டப்பட்டுள்ள சூழலில், வர்க்க ரீதியாகவும் சாதி ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட விவசாயிகளும், பெண்களும் ஆயிரக்கணக்கில் ஆயுதமேந்தி நிற்கும் சூழலில் உருவாக்கப்படும் ஜனநாயக அரசு பழைய வகைப்பட்ட ஜனநாயக அரசாக இருக்கவோ, நிலைக்கவோ முடியாது. அது ஆளும் வர்க்கங்களைத் தூக்கியெறியும் புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னேறியே தீரும் என்ற உண்மை அந்தக் கட்சிகளை அச்சுறுத்துகிறது.

மன்னராட்சிக்கும் மாவோயிஸ்டு புரட்சிக்குமிடையில், கருதப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகம் ஒரு கானல்நீர் என்பது இதோ, நிரூபணமாகி விட்டது.

மூன்று நூற்றாண்டுகள் முன்னரே முதலாளித்துவப் புரட்சியைத் தொடங்கி மன்னராட்சியதைத் துடைத்தெறிந்த மேற்குலக நாடுகளிலேயே ஜனநாயகம் என்பது இன்று பாசிசமாகவும் மேன்மக்கள் ஆட்சியாகவும் நிலைமறுப்படைந்து வருகிறது.

வரலாற்றில் பின்தங்கிப்போய் மன்னராட்சி என்னும் மலத்தை இன்னமும் தலையில் சுமந்து கொண்டிருக்கும் நேபாளத்தின் நாடாளுமன்றக் கட்சிகளோ 'ஜனநாயகம் ஜனநாயகம்' என்று இமயத்தின் மீது நின்று கூவுகிறார்கள்.

### ஜனநாயகமா, காலனியாதிக்கமா?

புனித புஷ் அவர்களின் வேத வசனத்தில் ஜனநாயகம் என்ற சொல் காலனியாதிக்கம் என்பதற்கான இடக்கரடக்கல். ''மாவோயிஸ்டுகளுடன் கூட்டணி சேராதீர்கள். நேபாளத்தில் ஜனநாயகத்தை ***இறக்க வேண்டியது*** எங்கள் பொறுப்பு'' என்கிறது அமெரிக்கா.

''இறங்குமய்யா'' என்று விசுவாசிகள் யாரும் ஜெபிக்காதபோதிலும், காட்மண்டுவில் உடனே ***வந்து இறங்குகிறார்*** காலின் பாவெல். அமெரிக்க இராணுவ விமானங்களோ கடந்த இரண்டாண்டுகளாக நேபாளத்தில் தரையிறங்கிய வண்ணமுள்ளன. அதிநவீன ஆயுதங்கள் வந்திறங்குகின்றன. அமெரிக்கா 22 மில்லியன் டாலர், பிரிட்டன் 40 மில்லியன் டாலர் என்று மன்னருக்கு மொய் எழுதுகின்றனர். ஒரு டஜன் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேபாள மன்னரின் இராணுவத்திற்குப் பயிற்சியளிக்கின்றனர்; இராணுவத்தைக் களத்தில் நின்று வழி நடத்துகின்றனர்.

இரண்டாண்டுகளுக்கு முன் மாவோயிஸ்டுகளை நசுக்க முயன்று தோற்று, அவர்களை அழைத்து மன்னர் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே, ''உங்கள் சார்பில் நாங்களே பேச்சுவார்த்தை நடத்தித் தருகிறோமே; உங்கள் ஆட்களுக்குப் பேசத் தெரியவில்லை'' என்று பகிரங்கமாக அறிக்கை விட்டார் நேபாளத்துக்கான பிரிட்டிஷ் தூதர் ஜெஃப்ரி ஜேம்ஸ். ''பேச்சுவார்த்தை நடத்தாதே'' என்று மறைமுகமாக மிரட்டும் நோக்கில் மாவோயிஸ்டுகளை ''சர்வதேச பயங்கரவாதிகள்'' என்று அறிவித்தது அமெரிக்க அரசு. அதைத் தொடர்ந்து அமெரிக்க - நேபாள பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**மாவோயிஸ்டுகளுடன்**
**ஐக்கிய முன்னணியா அல்லது**
**மன்னனின் கூலிப்படையணியா**
**என்பதை ஒவ்வொரு**
**ஜனநாயகவாதியும் உடனே**
**முடிவு செய்தாக வேண்டும்.**
**மூன்றாவது அணி போன்ற**
**அரசியல் பித்தலாட்டங்களுக்கோ,**
**'தீர்ப்புகளைத் தள்ளிப் போடுதல்',**
**போன்ற**
**தத்துவார்த்தச்**
**சொல்விளையாட்டுகளுக்கோ**
**அங்கே இடமில்லை**
**'வெளி 'யுமில்லை**



''நேபாளத்தில் கம்யூனிஸ்டு புரட்சியைத் தடுப்பது எப்படி?'' என்ற தலைப்பில் வாஷிங்டனில் மாநாடு நடத்துகிறது அமெரிக்க அரசு.

ஜனநாயகத்திற்காகக் கூப்பாடு போடும் நேபாளத்தின் நாடாளுமன்றக் கட்சியெதுவும் இந்த அமெரிக்க, பிரிட்டிஷ் தலையீட்டை எதிர்க்கவில்லை. தமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு தேசத்தின் இறையாண்மையையும் கவுரவத்தையும் கேலிப்பொருளாக்கும் ஏகாதிபத்தியங்களைக் கண்டிக்கவில்லை.

நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையை நிலைநாட்டுகின்ற முடியரசின் அடியாட்படைக்கு - நேபாள இராணுவத்திற்கு - ஆயுதமும் பயிற்சியும் அளித்து ஜனநாயகத்தை நசுக்குவதற்குத் துணை நிற்கும் அமெரிக்காவை எதிர்த்துப் போராடவில்லை. மாறாக, அமெரிக்கத் தூதருக்குத் தனது அலுவலகத்தில் வரவேற்பு கொடுத்திருக்கிறது நேபாளத்தின் நாடாளுமன்ற கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.என். (யு.எம்.எல்). மற்ற முதலாளித்துவக் கட்சிகளைப் பற்றி சொல்லத் தேவையில்லை.

### இந்திய ஜனநாயகக் குருகுலம்!

நேபாளத்தின் இந்த நாடாளுமன்றக் கட்சிகளை ஜனநாயகக் கலையில் பயிற்றுவிக்கும் குருகுலம் இந்தியா. இந்திய ஓட்டுக்கட்சிகள்தான் அவர்களது குருநாதர்கள். ஏகாதிபத்திய அடிமைத்தனத்தையும் நிலப்பிரபுத்துவக் கும்பலுடன் நல்லிணக்கத்தையும் பேணிக் கொண்டே 'ஜனநாயகம் பேசுவது' எப்படி என்ற கலையை இவர்கள் தில்லியிடமிருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள்.

பிப்ரவரி முதல் தேதியன்று மன்னர் ஞானேந்திராவின் இராணுவ ஆட்சி அறிவிப்பைத் தொடர்ந்து இந்திய அரசின் அதிகாரபூர்வ அறிக்கை கீழ்க்கண்டவாறு கூறியது: ''மன்னராட்சியும் ஜனநாயகமும் நேபாளத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள். எனவே ஜனநாயக உரிமைகளை மீண்டும் வழங்கவேண்டும்.''

இதன் பொருள் என்ன? ''மாவோயிஸ்டுகளின் தாக்குதலிலிருந்து மன்னராட்சியை அரசியல் ரீதியாகக் காப்பாற்றிக் கொண்டிருந்த இடிதாங்கிகளான நாடாளுமன்றக் கட்சிகளைத் தடை செய்ததன் மூலம் முதலுக்கே மோசமாகி விட்டதே'' என்ற கவலைதான் இந்த அறிக்கையின் உட்கிடக்கை.

''நேபாளத்தில் முடியாட்சி அகற்றப்பட்டு (பலகட்சி) ஜனநாயகம் நிறுவப்படுவதை இந்தியா ஆதரிக்கிறதா?'' என்ற கேள்விக்கு இந்திய அரசின் வெளியுறவுத்துறைச் செயலர் அளித்துள்ள பதில் இதனைத் தெளிவுபடுத்துகிறது. ''மன்னராட்சியா, ஜனநாயகமா என்பது அவர்களுடைய உள்நாட்டு விவகாரம். ஜனநாயகத்தை யாரும் ஏற்றுமதி செய்ய முடியாது'' என்கிறார் வெளியுறவுத்துறைச் செயலர்.

### முடியரசுக்கு ஆயுதம் குடியரசுக்கு 'ஆதரவு'!

ஆனால் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யலாமாம். நேபாள மன்னரின் இராணுவத்துக்கு 4 பில்லியன் டாலர் (சுமார் 20,000 கோடி ரூபாய்) மதிப்புள்ள அதிநவீன ஆயுதங்களை வழங்

www.padippakam.com

கியிருக்கிறது இந்திய அரசு (பிரண்ட்லைன், 20.6.03). நேபாள இரா ணுவமே இந்திய இராணு வத்தால்தான் பயிற்றுவிக் கப்படுகிறது. மாவோ யிஸ்டுகளையும் இதர ஜனநாயக சக்திகளையும் ஒடுக்குவதற்காகவே வழங்கப்படும் இந்த உதவி, ஞானேந்திராவின் முடியாட்சியைக் காப் பாற்றுவதற்காகச் செய் யப்படும் உதவியே யன்றி வேறென்ன?



நேபாளத்தின் பெரும்பான்மையான கிராமங்களில் செல்வாக்கு செலுத்தும் மாவோயிஸ்டு செம்படை!

நிராயுதபாணிகளான மக்களை ஆயிரக்கணக் கில் கொலை செய்தது, ஆள்கடத்தல், கற்பழிப்பு கள் போன்ற நேபாள இராணுவத்தின் கிரிமினல் குற்றங் களை ஆதாரபூர்வமாகப் பட்டியலிட்டு ஜெனிவாவில் உள்ள மனித உரிமைக் கமிஷன், மார்ச் 2004-இல் நேபாள அர சின்மீது கண்டனம் தெரிவிக்க முயன்ற போது, அதைத் தடுத்து நிறுத்திய நாடு கள் இந்தியாவும் அமெரிக்காவும்!

தனது மேலாதிக்கப் பிராந்தியத்துக் குள் அமெரிக்கா நேரடியாக நுழைவது இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு ஒரு உறுத்தலாக இருந்தபோதிலும் இதற் காக இந்திய அரசு அமெரிக்காவுடன் முரண்படப் போவதில்லை. 'கம்யூனிச அபாயம்' அவர்களை ஒன்றுபடுத்தும்.

இதுதான் இந்திய அரசின் யோக்கி யதை. தற்போது ஞானேந்திரா அரசுக் கான இராணுவ உதவிகளை நிறுத்தியி ருப்பதாக இந்திய அரசு கொடுத்திருக் கும் அறிவிப்பும், ஜனநாயகத்திற்கு வழங்கப்படும் ஆதரவல்ல; தன்னு டைய ஆணைக்குக் கட்டுப்பட மறுக் கும் மன்னனுக்கு ஒரு பிராந்தியத் துணை வல்லரசு விடுக்கும் மிரட்டல் - அவ்வளவுதான்.

இறையாண்மையும் தற்சார்பும் கொண்ட ஒரு ஜனநாயக நாடாக நேபாளம் மாறுவதை இந்திய ஆளும் வர்க்கங்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது. 1990-இல் நேபாளத்தில் நடந்த ஜனநாயகத்திற்கான இயக்கத் திற்கு இந்தியா வழங்கிய ஆதரவும், இன்று நேபாள நாடாளுமன்றக் கட்சிக ளுக்கு வழங்கிவரும் ஆதரவும் அன்று ஈழப் போராளிகளுக்கு இந்தியா வழங் கிய 'ஆதரவுக்கு' ஒப்பானது. நேபாள நாடாளுமன்றக் கட்சிகளிலேயே தனது கையாட்களை உருவாக்கிக் கொள்வ தும், 'ஜனநாயகக் கட்சிகளை'க் காட்டி முடியாட்சியை மிரட்டிப் பணியவைப் பதும்தான் இந்திய ஆளும் வர்க்கங்க ளின் நோக்கம்.

1950 இந்திய - நேபாள நட்புறவு ஒப்பந்தம் என்பது அந்நாட்டின் நெற்றி யில் இந்தியா பொறித்திருக்கும் அடி மைச்சாசனம். இந்த ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளுக்கும் இடையில் கடவுச் சீட்டு தேவையில்லையென்று இந்த ஒப்பந்தம் வழங்கும் 'சுதந்திரம்', ஆயி ரக்கணக்கான ஏழை நேபாளிப் பெண் களை பம்பாய் சிவப்பு விளக்குப் பகு திக்குக் கடத்துவதற்குப் பயன்பட்டிருக் கிறது; நேபாள இளைஞர்களை இந்தி யப் பணக்காரர்களின் வீட்டு வாயிலில் அற்பக்கூலிக்குக் காவல் காக்க வைத்தி ருக்கிறது.

'சுங்கவரி இல்லை' எனும் சுதந்தி ரமோ இந்தியத் தரகுமுதலாளிகள் நேபாளத்தின் சந்தை முழுவதையும் கைப்பற்றிக் கொண்டு அதை இந்தியா வின் இன்னொரு மாநில மாகவே நடத்துவதற்கும், நேபாளத்தின் தொழில் வளர்ச்சியை நிரந்தரமாக முடக்குவதற்கும் பயன் பட்டு வருகிறது.

> ''மாவோயிச அபாயத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற ஜனநாயகமே முன்நிபந்தனை'' என்று கதறுகின்றன ஓட்டுக்கட்சிகள். மன்னரோ ''மாவோயிஸ்டுகளை ஒழிப்பதுதான் ஜனநாயகம் வழங்குவதற்கு முன்நிபந்தனை'' என்கிறார்.
> நோக்கத்தில் ஒற்றுமை! வழிமுறையில் வேற்றுமை!



நேபாள மக்க ளைப் பொருத்தவரை இந்தியா, சிந்துபாத்தின் தோளில் ஏறிய கடற்க ரைக் கிழவன். மூன்று புற மும் நேபாளத்தைச் சூழ்ந் திருக்கும் இந்திய நிலப்ப ரப்பையே தனது மேலா திக்கக் கிடுக்கிப் பிடியாக மாற்றியிருக்கிறது இந் திய ஆளும் வர்க்கம்.

**முடியாட்சிக்குப் பெண் கொடுத்த 'ஜனநாயகம்'!**

குவாலியர், மேவார் முதலான இந் திய அரச பரம்பரைகளுக்கும் நேபாள மன்னர் பரம்பரைக்கும் இடையிலான இரத்த உறவின் அடிப்படையில் பார்த் தால் இது ஒரு பாசப்பிணைப்பு. (செத் துப் போன இளவரசன் தீபேந்திராவுக் கும் குவாலியர் அரச வம்சத்தின் தேவ யானிக்குமிடையிலான காதல், வாசகர் அறிந்ததே. தற்போதைய இளவரசன் பாரஸ் ஷாவின் மனைவி ஹமானி, மேவார் இளவரசி.)

அரியணை இழந்த மேற்படி மன் னர்களையும் இளவரசிகளையும், முதல்வர்களாகவும் மத்திய அமைச்சர் களாகவும் வாழ வைத்திருக்கும் காங்கி ரசு, பாரதிய ஜனதா போன்ற கட்சிக ளுக்கும் நேபாள மன்னர் பரம்பரைக்கு மிடையிலான உறவு — சம்பந்தி உறவு. (விஜயராஜே சிந்தியா, வசுந்தரா ராஜே சிந்தியா, மாதவராவ் சிந்தியா, இன்ன பிறர்; மற்றும் குவாலியர் மன்னன் சோறு போட்டு வளர்த்த வாஜ்பாயி.)

சங்கரராமன் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சகோதரனின் குடும்பத் தையே கொன்றொழித்ததாகக் குற்றம் சாட்டப்படும் நேபாள மன்னன் 'ஞானேந்திர சரஸ்வதி' சுவாமிகளிடம் தஞ்சம் புகத் திட்டமிட்டதைக் கணக் கில் கொண்டால் இது ஒரு ஆன்மீகப் பிணைப்பு! (அசோக் சிங்கால் நேபாளம் சென்று, உலகின் ஒரே ஹிந்து நாட்டை அழிக்கும் மாவோ யிஸ்டுகளைக் கண்டித்துவிட்டு, மன் னர் ஞானேந்திராவுக்கு உலக ஹிந்துக்க ளின் ஆதரவைத் தெரிவித்துவிட்டு உயிரோடு திரும்பி விட்டார்.)



படிப்பகம்

www.padippakam.com

நேபாளத்துடன் இத்தகைய எண்ணிறந்த பிணைப்புகளைக் கொண்டிருக்கும் இந்திய ஆளும் வர்க்கம், இந்திய - நேபாள பாட்டாளி வர்க்க அமைப்புகளுக்கிடையிலான பிணைப்பைக் கண்டு பதறுகிறது. மாவோயிஸ்டுகளின் வெற்றி நேபாள ஜனநாயகத்துக்கு மட்டுமல்ல, இந்திய ஜனநாயகத்துக்கே ஆபத்தானதென்று அலறுகிறது.



மாவோயிஸ்டு தாக்குதலை எதிர்பார்த்து எல்லா நகரங்களிலும் இராணுவம்!

### நேபாளத்தில் புரட்சி இந்திய ஜனநாயகத்துக்கு ஆபத்து!

வெறும் இரண்டேகால் கோடி மக்கள்தொகை கொண்ட சின்னஞ்சிறு நாட்டில் முன்னேறும் புரட்சி, உலகிலேயே 'மிகப் பெரிய ஜனநாயகத்தை அச்சுறுத்துகிறதாம்! விந்தை, எனினும் உண்மை.

இராணுவ உதவியை நிறுத்துவதாக இந்திய அரசு அறிவித்த மறுகணமே நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவித்தார், ''மன்னராட்சி அல்லது மாவோயிஸ்டு புரட்சி - இதுதான் நேபாளத்தின் நிலை'' என்றார். இது வீழ்ச்சியின் விளிம்பில் நிற்கும் மன்னராட்சியின் அலறல் மட்டுமல்ல; இந்தியாவுக்கும் உலக முதலாளித்துவ வர்க்கத்துக்கும் ஞானேந்திரா விடும் மிரட்டல்! உளுத்து உதிர்ந்து கொண்டிருக்கும் நேபாளத்தின் நிலப்பிரபுத்துவக் கும்பல் ஒரு ஏளனப் புன்னகையுடன் உலக முதலாளித்துவத்தைப் பார்த்துக் கேட்கிறது ''ஒரு கம்யூனிசப் புரட்சியைச் சகித்துக் கொள்ள **நீங்கள்** தயாரா?''

மாவோயிஸ்டுகளுக்கெதிராகத் தன்னுடைய கரத்தை ஏகாதிபத்தியங்கள் வலுப்படுத்தியே தீரும் என்பது ஞானேந்திராவுக்குத் தெரியும். மாட்சிமை தங்கிய மன்னனின் இராணுவத் திடம் உதைவாங்கி ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்கும் நேபாளத்தின் நாடாளுமன்ற ஜனநாயகவாதிகளை அமெரிக்கா நாளை சொடக்குப் போட்டு அழைக்கலாம்; ''மன்னரின் பின்னால் அணிவகுத்து நின்று ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்!'' என்று அவர்களுக்கு ஆணையிடலாம்; இந்திய அரசும் இதையே கொஞ்சம் பக்குவமாக எடுத்துச் சொல்லும். இப்படியாக, மன்னரால் கழற்றியெறியப்பட்ட 'ஜனநாயகக் கோவணம்' தனக்குரிய இடத்தில் தானே வலியச் சென்று ஒட்டிக் கொள்ளும்.

மாவோயிஸ்டுகளுடன் ஐக்கிய முன்னணியா மன்னரின் கூலிப்படையணியா என்பதை ஒவ்வொரு 'ஜனநாயக'வாதியும் அங்கே முடிவு செய்துதான் ஆகவேண்டும். ''மூன்றாவது அணி, முற்போக்கு ஜனநாயகக் கூட்டணி'' போன்ற அரசியல் பித்தலாட்டங்களுக்கோ, ''தீர்ப்புகளைத் தள்ளிப் போடுதல், அதிருப்தியைப் பதிவு செய்தல், மையத்திலிருந்து தப்பியோடுதல்'' போன்ற தத்துவார்த்தச் சொல்விளையாட்டுகளுக்கோ அங்கே இடமுமில்லை; 'வெளி'யுமில்லை.

நேபாளம் சிவப்பதை ஏகாதிபத்தியவாதிகளாலும், இந்திய ஆளும் வர்க்கங்களாலும் சகித்துக் கொள்ளவே முடியாது. தெற்காசிய மேலாதிக்கம், நேபாளத்தின் சந்தை போன்ற தனது உடனடி நலன்களை மாவோயிஸ்டுகளின் வெற்றியானது கேள்விக்குள்ளாக்கி விடும் என்ற அச்சத்தினால் மட்டுமல்ல, அத்தகைய வெற்றி இந்தியப் புரட்சிகர இயக்கத்திற்கு வழங்கக் கூடிய உந்துதலை எண்ணித்தான் இந்திய ஆளும் வர்க்கம் நடுங்குகிறது. நேபாளம், பீகார், ஒரிசா, ஆந்திரம் என்று ஒரு பிச்சுவாக்கத்தியைப் போல, தனது இதயத்தில் இறங்கும் சிவப்புப் பிராந்தியம் இந்திய அரசின் இரத்தத்தை உறையச் செய்கிறது.

**தோண்டிப் புதைத்துவிட்டதாக ஏகாதிபத்தியவாதிகள் இறுமாந்திருந்த தருணத்தில், கம்யூனிச பூதம், இதோ எவரெஸ்டின் மீதேறி நின்று எக்காளமிடுகிறது. எதிரிகளால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?**



தனியார்மயச் சுரண்டலால் வெடித்துக் கிளம்பும் வர்க்க முரண்பாடுகளின் மீது ஒரு அசட்டு இறுமாப்புடன் அமர்ந்திருக்கிறது சீனத்தின் போலி கம்யூனிச அதிகார வர்க்கம். சீனத்தின் இளந்தலைமுறையை மாவோ இன்னொருமுறை வென்றெடுத்து விடுவாரோ என்ற கவலை அவர்களைப் பிடித்தாட்டும்.

பாசிச இராணுவச் சர்வாதிகாரிகளின் படுகொலைகள் மூலமும், தன்னார்வக் குழுக்களின் ஐந்தாம்படைச் சேவை மூலமும் லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்களைக் கருக்கியும் நமத்துப் போகவும் வைத்த அமெரிக்கா, அடுத்த எரிமலை தெற்காசியா தான் என்பதை ஏற்கெனவே அடையாளம் கண்டிருக்கிறது. அதனைத் தணிக்க ஏராளமான தொண்டு நிறுவனங்களை ஏவியும் விட்டிருக்கிறது.

### மீண்டும் கம்யூனிச பூதம்!

அதற்குப் பிறகும் வெடித்துக் கிளம்புகிறது நேபாளப் புரட்சி. இங்கே இராக்கைப் போல எண்ணெய் வயல்களில்லை. ஆனால் அதனினும் எளிதில் தீப்பற்றக் கூடிய கம்யூனிசம் எனும் எரிபொருள் இருக்கிறது. உலகமயமாக்கத்தால் தீவிரமடைந்திருக்கும் வர்க்க முரண்பாடுகள் தன்னெழுச்சியான முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்களாக மேற்குலகமெங்கும் தலையெடுத்து வரும் வேளையில், கண்டம் விட்டுக் கண்டம் தாவக் கூடிய இந்தத் தீ அமெரிக்க மேலாதிக்கவாதிகளை அச்சம் கொள்ள வைக்கிறது.

என்ன செய்வார்கள் எதிரிகள்? இனவாத இயக்கங்களையோ, மதவாத இயக்கங்களையோ விலைக்கு வாங்குவதைப் போல மாவோயிஸ்டுகளை விலைக்கு வாங்க முடியாது. இராணுவத்தை அனுப்ப இந்தியா முனையலாம். ஆனால் அதற்கு முன் ஈழத்திலும்



படிப்பகம்

www.padippakam.com

காசுமீரிலும் வாங்கிய அடியைக் கன வென்று கருதி மறக்கும் மனப்பக்குவம் இந்திய அரசுக்கு வேண்டும்.

''நேபாள அரசு, ஒரேயொரு மாவட்டத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கே நேபாளத்தின் மொத்த இராணுவமும் தேவைப்பட டும்'' என்கிறார் நேபாள மனித உரிமை அமைப்பின் சர்மா.

நேபாளத்தின் ஆகப் பெரும்பான் மையான பகுதி - மாவட்டங்கள் - மாவோயிஸ்டுகளின் செல்வாக்கில் இருக்கிறது என்கிறார் அண்டை நாடான பூடானின் மன்னர்.

''அரசியல் தீர்வுக்குப் பதிலாக இரா ணுவத் தீர்வுதான் என்று முடிவு செய்து விட்டால், மாவோயிஸ்டுகளைத் தோற் கடித்தாக வேண்டுமென்றால் ஒரு முழு மையான உள்நாட்டுப் போருக்கு நேபாளம் தயாராக வேண்டும்'' என்கி றார் நேபாளத்திற்கான முன்னாள் இந் தியத் தூதர் அர்விந்த் தியோ.

''மாவோயிஸ்டுகள் நேபாளத்தின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் அபாயம் உண்மைதான்'' என்கிறது மார்ச் 3-ஆம் தேதி வெளியிடப்பட்ட அமெரிக்க அரசின் அறிக்கை.

இந்த 'அபாய அறிவிப்பு', தெற் காசியாவில் கால் வைக்கத் துடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் ஒரு உபாயமும் கூட. வியத்நாமின் காடுக ளுக்கும் இராக்கின் பாலைவனத்திற் கும் தீ வைத்த அமெரிக்கக் குண்டுகள் இமயத்தின் மீதும் இறங்கலாம். அதி நவீன ஆயுதங்கள், விதம் விதமான கூலிப்படைகள், மதுப்புட்டிகள், டாலர் நோட்டுகள், ஆணுறைகள் ஆகியவற் றின் துணையுடன் உலகின் ஒரே ஹிந்து தேசத்தைக் காப்பாற்ற புனித புஷ் காட் மண்டுவில் கால் வைக்கலாம்.

பத்துவிரல்களால் பத்து ஈக்களைப் பிடிக்க விரும்பும் அமெரிக்காவின் ஆசையை, மரணத்தை முத்தமிடத் துடிக்கும் அதன் இயல்பான உந்து ணர்வை எந்த புத்தனால் தெளிவிக்க முடியும்?

தோண்டிப் புதைத்துவிட்டதாக இறுமாந்திருந்த தருணத்தில், கம்யூனி சப் பூதம் எவரெஸ்டின் மீது ஏறி நின்று எக்காளம் செய்யும்போது ஏகாதிபத்தி யவாதிகளால் அதை எங்ஙனம் சகித் துக் கொள்ள முடியும்?

எதையும் செய்வார்கள் எதிரிகள். நாம் என்ன செய்யப் போகிறோம்?

இது ஏதோவொரு நாட்டின் மன்ன னுக்கு எதிராக யாரோ நடத்திக் கொண் டிருக்கும் போராட்டமல்ல; போராடிக் கொண்டிருப்பது நமது வர்க்கம். தொழி லாளர்கள், ஏழை விவசாயிகள், பார்ப் பனியத்தால் ஒடுக்கப்படும் தலித் மக் கள், பழங்குடியினர், பெண்கள்! எதிர ணியில் மன்னன், பார்ப்பன மதவெறி யர்கள், இந்திய ஆளும் வர்க்கம், அமெரிக்க மேலாதிக்கம், இவர்கள னைவரையும் நத்திப் பிழைக்கும் நாடா ளுமன்றக் கட்சிகள்!

அமெரிக்க இராணுவமும் இந்திய ஆயுதமும் இறங்குவதைத் தடுக்காத தேசிய எல்லை நம்மை மட்டும் எப்ப டித் தடுக்க முடியும்? வெற்றியை நோக்கி நேபாள மக்கள் ஓரடி எடுத்து வைத்தால் ஒரு வர்க்கம் என்ற முறை யில் உலகப் பாட்டாளி வர்க்கம் ஓரடி முன்னே செல்கிறது - வெற்றியை நோக்கி.

ஜனநாயகம் என்பது ஐந்தாண்டுக ளுக்கு ஒருமுறை தகரப் பெட்டியில் இரகசியமாய்த் திணிக்கும் காகிதமா கவோ, அறிவாளிகளின் வாயில் உரு ளும் பொருள் விளங்கா உருண்டையா கவோ இல்லாமல் மக்கள் தம் சொந்தக் கரங்களில் ஏந்திச் சுழற்றும் அதிகார மாக மாற வேண்டும்; நாம் மாற்ற வேண்டும்.

இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக நாம் தொடுக்கும் போராட்டம், இமயத்தின் உச்சியில் செங்கொடி உயர் வதற்கு நாம் செலுத்தும் பங்களிப்பு. எவரெஸ்டின் உச்சியில் செங்கொடி உயரும். உலகத்தின் கூரைமீது தம் பாதங்களைப் பதித்துப் பழகிய நேபாள மக்கள் இதுகாறும் அங்கே பல வண்ணக் கொடிகளையும் நட்டு வைத் திருக்கிறார்கள். இந்த முறை அங்கே செங்கொடியை நாட்டுவார்கள்.

உயர்ந்த செங்கொடி தாழாமல் தாங் கிப் பிடித்து நிறுத்த வேண்டியது உல கப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை. நம் கடமை.

● மருதையன்

## தலித் இளைஞர்களின் கையில் துப்பாக்கி! உழுபவனுக்கு மட்டுமே நிலம்!

**சோ**மாலியாவுக்கு நிகரான வறுமை; எழுத்தறிவின்மையோ 50 சத வீதம்; கிராமப்புறத்தில் சாதிய ஒடுக்கு முறைக்கு ஆளாகும் 25 சதவீத மக்கள் - அவர்களில் தீண்டாமைக்கு ஆட்படுத் தப்படும் தலித்துகள் 7 சதவீதம்; 13 வய தில் சிறுமிகள் மணமுடித்துக் கொடுக் கப்படும் இளம்பருவத் திருமணக் கொடுமை; இவையன்றி சிறுபான்மை பழங்குடி மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் - இதுதான் 'உலகின் ஒரே இந்து அரசான' நேபாளத்தின் யோக்கி யதை!

1990-இல் இயற்றப்பட்ட அரசியல் சட்டம் தீண்டாமையை சட்டப்படிக் கூட குற்றமாக அறிவிக்கவில்லை. 205 பாராளுமன்ற உறுப்பினர்களில் சுவாஷ் தர்னால் மட்டும்தான் தலித். ''மாவோயிஸ்டுகள் தீண்டாமை மற் றும் எல்லாச் சாதி ஒடுக்குமுறைகளை யும் தண்டனைக்குரிய குற்றமாக்கியி ருக்கிறார்கள். சாதி ஒடுக்குமுறை செய் வோரை உண்மையிலேயே தண்டிக் கிறார்கள். தலித் மக்களுக்கு நிலம் வழங்கியிருக்கிறார்கள். அவர்களு டைய செல்வாக்கிற்குக் காரணம் இது தான்'' என்கிறார் தர்னால்.

''நகரங்களில் மன்னரின் அரசு, மாவோயிஸ்டுகள் என இரண்டு அதி கார மையங்கள் உள்ளன. கிராமங் களில் மாவோயிஸ்டுகள் மட்டும்தான்'' என்கிறார் நேபாள் கஞ்ச் நகரின் ஒரு பத் திரிக்கையாளர். முதலாளித்துவ ஊட கங்களின் மதிப்பீட்டின்படியே மாவோ யிஸ்டு படையின் எண்ணிக்கை 29,000. கிராமப்புறங்கள் முழுவதிலும் மக்கள் கமிட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கின்றன. பலதார மணம், சாராய உற்பத்தி, கந்துவட்டி, குத்தகை விவ சாயம் ஆகிய அனைத்தும் ஒழிக்கப் பட்டு விட்டன. செம்படையின் வீரர் களில் கணிசமானோர் பெண்கள். கிரா மங்கள் தலைகீழாகப் புரட்டிப் போடப் பட்டுவிட்டன.

''மாவோயிஸ்டு இராணுவத்தின் வீரர்கள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சாதியினர்தான். ஒரு தலித் இளைஞ னின் கையில் துப்பாக்கி! கிராமப்புறத் தின் அதிகார உறவுகளில் இது ஏற்படுத் தும் மாற்றத்தைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை'' என் கிறார் தர்னால்.

''மாவோயிச எழுச்சி பழைய சமூ கக் கட்டுமானங்கள் அனைத்தையும் தகர்த்து விட்டது. கிராமப்புறங்களில் இனி நிலப்பிரபுத்துவ அதிகாரம் திரும் பவே முடியாது'' என்கிறார், நாடாளு மன்ற கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஹரி ரோக்கா.

இதுதான் ஜனநாயகப் புரட்சி! இந்தப் புரட்சியை ஒழித்து 'ஜனநாய கத்தை' நிலைநாட்டத்தான் இந்தியா வும் அமெரிக்காவும் அரும்பாடு படுகின்றன. ●


படிப்பகம்

www.padippakam.com

# இப்படிக் கூட சொரணையற்று இருக்க முடியுமா?

*மக்கள் எப்படி எல்லாம் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி வேதனைப்படுகிறோமே,*

*மக்கள் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள் என்பதைப் பற்றி எவ்வளவு சொரணையற்று இருக்கிறோம்?*

நாகப்பட்டினம்: சுனாமியால் சேதப்பட்ட வீடுகள் 30,300. மும்பையில் காங்கிரசு - தேசியவாத காங்கிரஸ் கூட்டரசால் தரைமட்டமாக்கி அழிக்கப் பட்ட வீடுகள் 84,000.

மக்கள் எப்படி எல்லாம் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி வேதனைப்படுகிறோமே, மக்கள் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள் என்பதைப் பற்றி எவ்வளவு சொரணையற்று இருக்கிறோம்?

''எந்த ஒரு முதலமைச்சருமே தங்களுக்குப் பிறகு புகழ்மிக்க பாரம்பரியத்தை விட்டுவிட்டுச் செல்லவே விரும்புகிறார்கள்'' என்று சொல்கிறார் மகாராட்டிர முதலமைச்சர் விலாஸ் ராவ் தேஷ்முக்; அதாவது, மும்பையைச் சுத்தமாக்கி அழகுபடுத்தி வைத்திருப்பதையே தான் விரும்புவதாக அவர் சொல்கிறார். திருவாளர் தேஷ்முக் ஏதோ ஒரு விதத்தில்தான் மக்களால் நினைவு கூறப்படுவதை விரும்புகிறார்.

நிச்சயம் அவர் நினைவில் வைக்கப்படுவார். ஒரே நாளில் 6,300 வீடுகளை அவரது அரசாங்கம் துடைத்து அழித்திருக்கிறது. தாங்கள் அத்துமீறிக் கைப்பற்றி வைத்திருக்கும் எல்லைப் புற நகரங்களின் மீது, பரபரப்பான சந்தடி மிகுந்த ஒரு பிற்பகல் பொழுதில், இசுரேலிய இராணுவம் பெரிய சாதனையாக எண்ணி எடுக்கின்ற நடவடிக்கையை மட்டுமே இதனோடு ஒப்பிட முடியும்; டாங்கிகள் மற்றும் விமானப் படைத் தாக்குதலின் பின்பலத்தோடு அவர்களின் புல்டோசர்கள் இடித்துத் தள்ளக் கூடிய வீடுகளின் எண்ணிக்கை, இன்னமும் கூட இந்த மும்பை எண்ணிக்கையைத் தொட முடியவில்லை.

மும்பையில் கூட்டம் கூட்டமாக மக்கள் வெளியேற்றப்பட்டிருப்பது தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது; பிறகு தொடரும்; இது குடிசைப் பகுதிகளை அகற்றுவது என்பதை விட மிகப் பெரிய விசயம். வாழ்வு மறுக்கப்பட்ட ஏழைகளை எப்படி மேட்டுக்குடியினர் பார்ப்பார்களோ அப்படிப்பட்டப் பார்வையே அவர்களுடையது; அந்தப் பார்வை 1990-ஆம் ஆண்டுகளில் தான் முழுதாக வளர்ந்தது. ஏழைகளை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதே அந்தப் பார்வை; ஏழை எளியவரின் உரிமைகளையும் துயரங்களையும் வெறுப்புடன் பார்க்கும் கண்ணோட்டத்துடன் அது தொடர்பு கொண்டது; அதிலும் கூட, மற்றவர்கள் அத்துயரம் உண்மையானதுதான் என்று அங்கீகரிக்க வேண்டும்.

அப்படிச் 'சில' வீடுகள் இடிக்கப் பட்டதுகூட 'விபத்து' என்கிறார் தேஷ்முக். அதாவது, வேண்டுமென்றே செய்யப்படவில்லையாம். ஒருவேளை, இவ்வாறான 'விபத்து'க்களே கூட இவருடைய அரசாங்கத்தை 'இயற்கையின் சீற்றத்'தால் பாதிக்கப்பட்ட மாநிலம் என்ற பட்டியலில் சேர்க்கக் கூடும். எது எப்படி இருந்தாலும், அநேகமாக மும்பையின் எல்லா அழகான நபர்களுமே தங்களின் முதலமைச்சர் பக்கம் வலுவாக நிற்கிறார்கள்; அதிலேயே ஒரு சிலர் 'இடிப்புகள்' நடத்தப்படுவதை திருப்தியோடு வரவேற்று நகரின் பல பகுதிகளில் நடந்த 'சுனாமி நிதியளிப்பு விருந்துகளிலும்' கலந்து கொண்டார்கள்.

ஆனால், அவர்களில் ஒரே ஒரு ஆள் கூட இடிக்கப்பட்ட எந்த ஒரு குடிசைப் பகுதியையும் தத்து எடுக்க முன்வரவில்லை; ஒளி உமிழும் கேமராக்களின் முன்னால் 'போஸ்' அடிக்கவும் முன்வரவில்லை; வீடிழந்த மக்களுக்கு உதவி செய்யவோ, மிகமோசமான பனிக்குளிரில் உறைந்துபோய் ஒண்டக் குடிசை இல்லாமல் நடுங்கித் தவித்த சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தைகளுக்குக் கூட உதவி செய்யவோ - அவர்களில் யாருமே முன்வரவில்லை.

மும்பையின் மேட்டுக்குடி வேறு விதமாகத்தான் யோசித்தது; நகரை அழகுபடுத்தும் திட்டத்தை வேகமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசரத் தேவை இருப்பதாகக் கருதியது.

கடந்த ஆண்டு, 11 மகாராட்டிர முக்கியப் பிரமுகர்கள் ''சேரி மக்கள் ஓட்டுப் போடுவதைத் தடுக்க வேண்டும்'' என்று மும்பை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். இந்த ஆண்டு இடிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளின் மக்களை ஓட்டுப் பட்டியலிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நகராட்சி நிர்வாகமே தலைமைத் தேர்தல் அதிகாரியை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறது. (குடியுரிமை அற்ற அயல்நாடு வாழ் இந்தியர்களுக்கும், அதாவது, என்.ஆர்.ஐ-களுக்கும் அயல்நாடுகளில் உள்ள இந்திய மரபுவழியினருக்கும் - அதாவது, பி.ஐ.ஓ-க்களுக்கும் ஓட்டுரிமை வழங்குவது பற்றிப் பரிசீலிக்கும் ஒரு சமுதாயத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவது விந்தை தானே?) ஆனால் ஓட்டுப் போடும் தகுதியிலிருந்து நீக்குவது - வாக்குரிமையைப் பறிப்பது என்ற உண்மையான சொல்லை யாருமே பயன்படுத்துவதில்லை; உண்மையில், இதைத்தான் அவர்கள் சொல்ல வருகிறார்கள்: ''எப்படியாவது அவர்களிடமிருந்து ஓட்டுக்களைப் பறித்துவிடுங்கள்; 'நம்மிடையே அவர்கள் வாழக் கூடாதென்பதை' அதுவே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்.''

இது - ஏழை இந்தியரிடம் உள்ள, ஏழை இந்தியர் பயன்படுத்தும் ஒரே ஒரு ஆயுதத்தையும் கூர் மழுங்கச் செய்யும். அமெரிக்காவில் உள்ள ஏழைகள் போல அல்லாமல், ஏழை இந்தியர்கள் தங்கள் ஓட்டுக்களால் பல மாற்றங்களைச் செய்ய முடியுமென நம்புகின்ற துணிச்சலை தங்கள் வசம் வைத்திருக்கிறார்கள்; இங்கே இதைச் செய்தும் காட்டியிருக்கிறார்கள். 2004 சட்டமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி - சிவசேனைக் கூட்டணியை மண்ணைக் கவ்வச் செய்ததில் இவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

அப்படி ஏராளமான பேரை ஓட்டுப் போட விடாமல் செய்துவிட்டாலும் அது அடிப்படை அரசியல் உரிமைகள் பற்றி குறைந்தபட்ச அளவே பிரச்சினைகளை எழுப்பும். ஆனால், அதைச் சமாளிப்பதற்கும் மேட்டுக்குடியின் முன்னணிப் படை வழி வைத்திருக்கிறது. அதாவது, அப்படிப்பட்டவர்களைக் கிரிமினல்மயமாக்கி விடுவது; அடுத்தது, ''பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்க முயற்சி செய்தார்கள் என்று ஜெயிலுக்குள்ளே பிடித்துப் போடுவது''. இடித்துத் தள்ளப்பட்ட தங்கள் வீடுகளின் முன்னால் செய்வதறியாது திகைத்து முழித்துக் கொண்டிருப்பவர்

www.padippakam.com

மீது, அத்துமீறி அந்த இடங்களில் சுற்றிக் கொண்டிருந்ததாகச் சொல்லி கிரிமினல் வழக்குகள் போட்டு உள்ளே தள்ளிவிடலாம் என்று மும்பை போலீசு உடனே தயாராக வாக்குறுதியும் கொடுத்தது. மேட்டுக்குடியினருக்கு இது திருப்திதான்; ஆனால், அந்த மக்களிடம் ஓட்டுப் போடும் உரிமை இன்னமும் மீதமிருக்கிறதே - அதையும் தீர்த்துக் கட்ட மூன்றாவது வழிமுறையும் அவர்களுக்குத் தேவைப்பட்டது.



குடிசையை இடித்தது சுனாமியா, புல்டோசரா?

ஒருவேளை, அதைச் சமாளிக்க, இந்தியா - மற்றெல்லா விசயங்களிலும் செய்வதைப் போலவே - அமெரிக்க மாதிரியைப் பின்பற்றக் கூடும். மனித உரிமைகள் கண்காணிப்புத் தீர்ப்பாய ஆய்வறிக்கை ஒன்றின்படி, மொத்த அமெரிக்க வாக்காளர்களில் 13 சதவீதமான ஆப்பிரிக்க மரபுவழி அமெரிக்கர்களுக்கு (அதாவது, 14 லட்சம் பேருக்கு), அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் இருந்ததால், ஓட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளது; கிட்டத்தட்ட 15 அமெரிக்க மாகாணங்களில், அப்படிப்பட்ட கிரிமினல் வழக்குகளில் சிக்கியவர்கள் தண்டனைகளை அனுபவித்து முடித்த பின்னரும் கூட அவர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்பட்டது.

அமெரிக்கா ஏறக்குறைய 20 லட்சம் மனித உயிர்களை சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைத்து வைத்திருக்கிறது. உலகில் எந்த ஒரு நாட்டில் இருப்பதையும்விட அதிகமான எண்ணிக்கை இது. அவர்களில் 63 சதவீதம் பேர் ஆப்பிரிக்க மரபுவழி அமெரிக்கர்களும், லத்தீன் அமெரிக்க அல்லது ஸ்பானிய மரபுவழி சேர்ந்தவர்களும் ஆவர். மனதில் வைத்துக் கொள்ளுங்கள் - இந்த இரு பகுதியினரும் சேர்ந்து மொத்த மக்கள் தொகையில் 25 சதவீதம் பேர் தேறுவார்கள். வேறுவிதமாகச் சொல்வதானால், நீங்கள் ஆப்பிரிக்க - அமெரிக்கர்கள் என்றால் - எந்த வகையிலாவது சிறைக்குப் போவீர்கள்; ஓட்டுக்களையும் இழப்பீர்கள். ஆப்பிரிக்க மரபுவழி அமெரிக்கர்கள் என்ற இடத்தில் ஏழைகளை வைத்துப் பாருங்கள்; இதுதான் இந்திய - மும்பை மேட்டுக்குடியினர் வருங்காலத்தில் செயல்படுத்தப் போகும் திட்டம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஓர் எதிர்காலம் உண்டு என்பதையே கூடப் பார்க்காத அலட்சியம் - இது அந்த மேட்டுக்குடி மனோபாவத்தின் மற்றோர் அம்சம். ஐ.நா.வின் மக்கள் குடியிருப்புப் பிரச்சினை குறித்த ஓர் ஆய்வறிக்கையின்படி, 2030-க்குள் உலக மக்கள் தொகையில் மூன்று நபருக்கு ஒருவர் வீதம் சேரிகளில் வாழும்படி விரட்டப்படுவார்கள்; அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியராக இருப்பார்கள். சேரியில் வசிக்கப் போகும் அம்மக்கள் கிரிமினல்மயப்படுத்தப்படுவார்களானால், எத்தனையோ கோடி இந்தியர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து தூக்கி எறியப்படுவார்கள். முதலில் அதற்கான சட்டச் சீர்திருத்தங்கள் வரும்; மும்பை மாதிரியை நாடு முழுக்க அமல்படுத்துவார்கள்; பிறகு, இந்தியா, தான் இதுவரை கட்டிய வீடுகளை விட இடித்துத் தரைமட்டமான வீடுகளே அதிகமாக இருக்கும்.

மகாராட்டிர முதலமைச்சர் சொல்கிறார்: ''மும்பை நகரம் வளர வேண்டுமானால் மக்கள் சிரமங்களைத் தாங்க வேண்டும்; தியாகங்கள் செய்துதான் தீரவேண்டும்!'' நகரின் கட்டுமானக் கம்பெனிகளோ அல்லது ரியல் எஸ்டேட் மாஃபியாக் கும்பலோ இதனால் சிரமத்துக்குள்ளாகப் போவதில்லை. எல்லாத் தியாகங்களையும் ஏழைகள் தான் செய்யவேண்டும். அந்த நிலைமைக்கு ஏழைகளை விரட்டுகிற சக்தி லேசுப்பட்டதல்ல, அது அதிகாரம் படைத்த சக்தி. குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் தெரிவிக்கின்ற எல்லா எதிர்ப்புக்களும், எல்லாக் கோரிக்கைகளும் கால் விரல் நுனியால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன; குடிசைவாழ் மக்களின் சங்கங்கள், வீட்டுவசதி - உரிமை மற்றும் மனித உரிமை அமைப்புகள், அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்று 28 அமைப்புக்கள் அடக்கி வாசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மக்களிடையே கட்சிக்குள்ள ஆதரவு எங்கே சரிந்துவிடுமோ என்ற பீதி (குறிப்பாக, புதுடெல்லி உயர்மட்ட காங்கிரஸ் தலைவர்களிடையே உள்ள பீதி) காரணமாக 'இடிப்பு வேலைகளின்' வேகம் கொஞ்சம் மட்டுப்பட்டிருக்கிறது; மேலும் நடந்ததே கூட 'ஒன்றிரண்டு இடங்களில் தற்செயலான விபத்து போல் நடந்திருக்கலாம்' என்பதாக திருவாளர் தேஷ்முக்கைப் பேச வைத்தது.

> சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்னவெல்லாம் உரிமைகளாகச் சேர வேண்டுமோ, அவை அத்தனையுமே நமது கருணைப் பண்டங்களாக உருமாற்றப்பட்டு அவர்களிடமே வீசப்படுகின்றன.

இங்கேயுள்ள பெரிய கட்சிகளின் வர்க்க நலன்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு உறுதியாகச் சேர்ந்து கொண்டன. காங்கிரஸ் கட்சியின் மேட்டுக்குடி உறுப்பினர்கள், பீதியடைந்துள்ள தங்கள் தொண்டர்களோடு நிற்பதைவிட பால்தாக்கரேவோடுதான் அதிக நெருக்கமாக இருக்கிறார்கள். குடிசைப்பகுதி மக்கள் மீது நடத்தப்படும் பகிரங்க பயங்கரவாத ஆக்கிரமிப்பை சிவ சேனைத் தலைவன் தாக்கரே வெளிப்படையாகவே புகழ்ந்து தள்ளுகிறான். ஓயாத நாய்ச் சண்டையிலிருக்கும் காங்கிரஸ் - தேசியவாத காங்கிரசு கட்சிகளிடையே கூட இவ்விசயத்தில் அவ்வளவு நெருக்கம். இந்த நடவடிக்கையை எதிர்க்கும் பல அமைப்புக்கள் ஒரு குடையின்கீழ் ஐக்கியப்பட்டுள்ளன - பாதிப்புக்குள்ளான குடிசைப்பகுதி மக்களுக்கு நிவாரணம் கிடைக்க, போராட்ட வேகம் கிடைக்க அந்த ஐக்கியமே ஒரு அடிப்படையாக அமையலாம்; இதுதான் தற்போதுள்ள

www.padippakam.com

நம்பிக்கை.

இந்த மேட்டுக்குடி மனோபாவத்தின் முக்கியமான மையப்பகுதி - "ஏழைகளுக்கு வாக்குறுதிகள் கொடுப்பதில் எந்தப் பொருளும் இல்லை" என்ற வாதம். யாருடைய ஓட்டுக்கள் இல்லாது போயிருந்தால் காங்கிரஸ் சர்வ நிச்சயமாக மண்ணைக் கவ்வி அழிந்து போயிருக்குமோ, அப்படிப்பட்ட பல லட்சம் மக்களின் பங்களிப்பு அவ்வளவு இளக்காரமாகப் போய்விட்டது. மத்தியிலே கூட தேசிய ஜனநாயகக் கூட்டணி மீதான வெகுமக்களின் கோப அலைகளின் மீது சவாரி செய்து தான் காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது. அதே வீச்சிலேயே 'இந்தியா ஒளிர்கிறது' என்ற பாரதிய ஜனதா கட்சியின் முழக்கத்தை எதிர்த்த தன் பிரச்சாரத்தையும் காங்கிரஸ் குழி தோண்டிப் புதைத்தது. இன்று, ஒரு மான்டேக்சிங் ஆலுவாலியா கொஞ்சமும் தயக்கமில்லாமல் தண்ணீர் தனியார்மயமாவதை ஆதரிக்க முடிகிறது; "நலிந்தவர்களின் வாழ்க்கை மோசமாகி விடாதபடி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று முன்பு அவர்கள் பேசியதெல்லாம் வெற்றுவாய்ச் சவடால்கள். அது, ஒரு தேர்தல் காலம்; இது, ஒரு நடைமுறை எதார்த்தம்.



இடம் பெயர்தல்: துரத்துவது சுனாமியா, அரசா?

அதனால்தான் குறைந்த அளவேயான பங்களாவாசிகள், பணக்காரர்கள் ஓட்டுப் போடுவதேயில்லை; அவர்கள் வேறு வழிகளில் அரசாங்கத்தை நடத்திக் கொள்கிறார்கள் - தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து அல்ல. கடந்த 15 ஆண்டுகளாக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதாக வாக்குறுதியளித்த அரசாங்கங்கள் அதிலிருந்து நழுவி ஓடியபோது, அதையே "சாத்தியமான செயல்பாடு" என்று ஊடகங்கள் மெச்சிப் புகழ்ந்தன. ஏழைகளிடம் பொய் சொல்வதும் கதைவிடுவதும்தான் இவர்களது நடைமுறைச் சாத்தியமான செயல்பாடு; அதேபோல, குடிசைகளை வலிய அப்புறப்படுத்துவது "மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுவதாகும்" என்ற 1993 ஐ.நா. தீர்மானத்தை உறுதியாகக் காப்பாற்றுவதாகச் சொன்னதைக் காலில் போட்டு மிதிப்பதுதான் அவர்களது நடைமுறைச் சாத்தியமான செயல்பாடு போலும்!

அவர்கள் கூற்றுப்படியே சாத்தியமான புதிய உலகத்தின் பளிச்சென்ற தெளிவான அடையாளம் - சுனாமிதாக்கிப் பேரழிவு நடந்து கொண்டிருந்த போது 'சென்செக்ஸ்' பங்குச் சந்தை எப்போதுமில்லாத அளவு பெரிய சீற்றத்தோடு உச்சத்துக்கு ஏறியதுதான். எந்தெந்த நாடுகளிலெல்லாம் சுனாமி மிக மோசமாகத் தாக்கியதோ அங்கெல்லாம் சந்தை உச்சத்துக்குப் போனது. என்ன காரணம்? அந்த இடங்களிலெல்லாம் மறு கட்டுமானப் பணிகளில் கிடைக்கக் கூடிய கொள்ளை லாபத்தை 'சந்தை' 'ஊகித்து'க் கொண்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை - மீனவரை - நாம் நடத்துகின்ற விதத்தில் அந்த மனோபாவம் பச்சையாக வெளிப்பட்டுவிட்டது. அந்த மக்களுக்கு என்னென்னவெல்லாம் உரிமைகளாகப் போய்ச் சேர வேண்டுமோ, அவை அத்தனையுமே நமது கருணைப் பண்டங்களாக உருமாற்றப்பட்டு அவர்களிடமே வீசப்படுகின்றன; சுகாதாரம், சுத்தமான குடிநீர், துப்புரவு - கழிப்பிடங்கள், பள்ளிக்கூடங்கள் அனைத்துமே நமது தயாள குணங்களின் காரணமாக நடக்கின்றன; மனிதனாய்ப் பிறந்தவனுக்கு இவற்றைப் பெற உரிமை உண்டு என்பதனால் அல்ல. உனக்கு ஒரு வீடு கூடக் கிடைக்கலாம், எதனால்? உன் குடும்பத்தில் பாதிப்பேர் சுனாமியால் கொல்லப்பட்டதால்; ஒரு பண்பாடுள்ள தேசத்தின், கண்ணியமான சமூகத்தின் குடிமகனாக அங்கீகரிக்கப்பட்டுக் கிடைக்கின்ற உரிமையால் அல்ல.

**கிரிமினல்களாக்கப்படும் பலகோடி சேரி மக்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து தூக்கி எறியப்படுவார்கள்; இந்தியா, இதுவரை கட்டியிருக்கக் கூடியவற்றை விட அதிக எண்ணிக்கையிலான வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியிருக்கும்.**

திருவாளர் தேஷ்முக்கினுடைய புல்டோசரைவிட வலிய பெரிய விஷயம் ஒன்றுண்டு; அதுதான் புதிய செயல்திட்டம் — கிராமத்திலிருந்து பல லட்சம் மக்கள் வேரோடு பிடுங்கி எடுக்கப்பட்டு அருகில் உள்ள நகரங்களுக்கு விரட்டப்படும் செயல்திட்டம். இந்தியா கட்டியமைத்து வளர்ப்பது வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் அல்ல; வேலை பறிப்பு உறுதித் திட்டம். விவசாயம் சுருண்டு படுத்துவிட்டது; மக்கள் தங்கள் கோபத்தையும் கொந்தளிப்பையும் — ஏராளமாக ஓட்டுப் போடுவதன் மூலமோ அல்லது ஒரேயடியாகப் புறக்கணிப்பதன் மூலமோ — அதாவது, தங்கள் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்கிறார்கள். இப்படிப்பட்ட காலத்துக்கு ஏற்ற ஒரே அற்புதம் 'தேஷ்முக்கின் தத்துவம்'தான் - அது, தண்ணீர்க் குழாய்களை முழுவதுமாகத் திறந்துவிட்டு தொடர்ந்து தரையைத் துடைத்துக் கொண்டேயிருப்பது.

எப்போதோ, என்றோ வரப்போகிற, ஊகித்துச் சொல்லக் கடினமான நிகழ்ச்சிகளை எதிர்கொள்ள மிகச் சரியான, முன்கூட்டிய திட்டங்களை வகுக்க நாம் துடிக்கிறோம். ஆனால், 'சந்தைக்கு'ச் சலாம் போடுகிறோம்; உடனடி எதிர்காலத்துக்காகத் திட்டமிடுவதை ஒதுக்கி விடுகிறோம்.


இயற்கையிலேயே செழித்து வளரக்கூடிய சதுப்புநிலக் காடுகளையும், மணற்குன்றுகளையும் சிதைத்து அழித்துவிட்டு, கடற்கரை நெடுகிலும் கடலுக்கு எதிராகச் சுவர்களைக் கட்டி எழுப்பத் திட்டம் தீட்டுகிறோம்.

அடுத்ததாக, மும்பையைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பத் திட்டம் போடலாம் - நாகரிகமில்லாத, நலிந்து போன ஏழைகளை வெளியே துரத்துவதற்காக. அப்போது தேஷ்முக்கின் மரபுரிமைச் செல்வமும், நினைவுகளும் பாரம்பரியம் மிகுந்த பாதுகாப்போடு காப்பாற்றப்பட்டுவிடும்.

**- 'இந்து' நாளேட்டில் (5.2.05) திரு. சாய்நாத் எழுதிய கட்டுரை. தமிழில்: புதூர் இராசவேல், திலீபன்.**

www.padippakam.com





# இருள் மனிதர்கள்

**எஸ். இலட்சுமணப் பெருமாள்**

நடந்து நடந்து இரண்டு பேரும் அய்யனார் கோயிலைத்தான் தாண்டியிருக்கிறார்கள். இன்னும் கரைப் பாதையேறி ஒரு கல் தொலைவு நடந்து கல்வெட்டாங் கிடங்கிற்குள் இறங்கி மேடேறி பனைக்கூட்டம் தாண்டி அப்பண்டு முதலாளி தோட்டங் கடந்து பைபாஸ் ரோடு போக வேண்டும். அங்கிருந்து டவுன் ஆஸ்பத்திரிக்கு குறுக்கும் நெடுக்குமாய் தெருக்களுக்குள் நுழைந்து போனாலும் அந்த தூரம் மட்டும் ஒரு மைல் தாராளமாய் இருக்கும்.

அக்னி நட்சத்திரம் முன்னேழு பின்னேழு முடிந்து ஒரு ஏழுநாள் ஆனபின்னாலும் வெயிலின் உக்கிரம் தீயாய் உடம்பில் விழுந்து எரிந்தது. அறுபதைத் தாண்டிய வயதாகிப் போன பங்கஜத்தம்மாளுக்கு ஈழை நோய் கண்டிருந்தது. முந்திச் சேலையால் தலையை முக்காடிட்டு கூன் விழுந்த உடம்பைத் தாங்கிப் பிடிக்கிற மாதிரி கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு அடியை எண்ணி எண்ணி வைத்து நடந்தாள். போய்ச் சேர வேண்டுமே என்ற அந்த நடைதான் அவளுக்கு விரசல்.

நெஞ்செலும்புகளின் இடையில் தோல்படிந்து எண்ணி விடும்படியாக அவை வெளித்தெரிந்தன. இடுப்பில் இருந்த கைகளை இறக்கி இரண்டு தொடைகளிலும் ஊன்றி கரைப்பாதையில் ஏறி பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

தூரத்தில் வந்து கொண்டிருந்த வயித்துப் பிள்ளைச் சூலி முனிச்சிக்கு ரொம்பவும் முடியவில்லை. வாயிலிருந்து நாக்கு லேசாக வெளித்தள்ள கிந்தி கிந்தி நடந்து வந்து கொண்டிருந்தாள். வெயிலும் தூரமும் வயிறு பருமனும் அவளைக் கிறங்கடித்து விட்டது. முழு ஊனமான எலும்புத்தாக்கம் மட்டுமே உள்ள சிறிய இடது காலை ஊன்றும்போது இடப்பக்கமாய் ஒரு முழத்திற்கு அவள் உருவம் கீழே சாயும். நேர்த்தியான வலது காலை ஊன்றும் போது நேராய் நிமிர்ந்து மேல்நோக்கி எகிறிய உருவம் அடுத்த வினாடி தொபுக்கென்று கீழே விழப்போவது போல இடதுகாலை ஊன்றுவாள்.

அவளின் கர்ப்ப வயிறு அவளை யெங்கே பின்னோக்கிக் கவிழ்த்து விடுமோ என்பது மாதிரி இட வலப்புறமாய் ஆடிக் கொண்டேயிருந்தது.

ஆத்தா எதிர்பார்த்து கரையின் மேலே வெயிலில் நிற்பதைப் பார்த்த முனிச்சி கொஞ்சம் வேகமாய் நடப்பதைப் போல உணர்ந்த கொண்டாளே தவிர நடை விரைவு கொள்ளவில்லை. கரையின் மேட்டில் ஏற சிரமப்பட்ட முனிச்சி, தடாலென கைகளை தரையில் ஊன்றி ஒரு பிராணியைப் போல ஊர்ந்து மேல் நோக்கிப் போனாள். அப்போது அவளின் சூம்பிய இடதுகால் சேலைக்குள் தறிக்கால்களைப் போல தனியாக அந்தரத்தில் ஆடிக் கொண்டிருந்தது. ஒருகால் பலத்தில் மேலே தாவித் தாவி வந்த முனிச்சியை பங்கஜத்தம்மா மெல்ல நடந்து வந்து தூக்கிவிட குனிந்தாள்.

அவள் கைகளைத் தட்டி மறுத்து தானாக ஊன்றி எழுந்தாள். ''நீங் முங்நாடி போ... நாங் நடங்ந்து பிங்நாடியே வந்திருவேங்'' ஆத்தாளுக்கு மூக்கின் வழியே அவள் எப்போதும் பேசும் பாசையில் தைரியம் சொன்னாள். நாக்குதான் பேசியதானாலும் ஒலி மூக்கின் வழியேதான் வந்தது. புறா முட்டை மாதிரியான அவள் கண்கள் பங்கஜத்தம்மாவிடம் பேசிய போது எங்கோ வானத்தைப் பார்த்தபடி இருந்தது. பிடறி வரை படிந்திருந்த தலை முடி வேர்வையில் நசநசத்தது. ''பேச்சு அரைகுறைதான். காலு ஒண்ணு ஊனந்தான். புண்ணியவாட்டி பதினஞ்சு வருசமா என்னை பெத்த தாய் மாதிரி வச்சுப் பாக்காளே! உலகத்துலே நானும் பாக்கேன் பெத்து வளத்தது கூட தாய் தகப்பனை கடைசி காலத்துல பாக்கிறதில்லை. எங்கிருந்தோ வந்தா எங்காலம் சென்றிருச்சி. இவளை நான் கண்டெடுக்கலையோ நான் நாறித்தான் செத்திருப்பேன்''

பங்கஜத்தம்மாவின் மனசு நினைத்ததை கண்ணீர் வெளிக் கொணர்ந்தது. சாயங்காலம் ஆறுமணிவரையிலும் தீப்பெட்டி ஆபீசில் கிடந்து லோல் பட்டு விட்டு ஊருக்கு மேற்கே ஆற்றின் வடகரையில் ஒதுக்குப்புறமாயுள்ள மண்டகப்படி கட்டிடத்துக்கு வருவாள் முனிச்சி. ஒரு காலத்தில் சாஸ்திரிகள் நிறைந்த அக்ரஹாரமாக இருந்த இடம் அது. கிழக்கேயுள்ள சாத்தூர் நகரத்திலிருந்து சாத்தூரப்பன் என்ற திருவேங்கடேசப் பெருமாள் அக்ரஹார வாசிக



படிப்பகம்

www.padippakam.com

ளுக்காக இந்தக் கட்டிடத்திற்கு ஆற்றின் வழியாகப் பல்லக்கில் வந்து இந்த மண்டகப்படியில் எழுந்தருளி மறுநாள் யானை வாகனத்தில் திரும்பி வழியில் மற்ற ஜாதிக்காரர்களுக்கும் அருள் பாலித்துச் செல்லும் இரண்டு நாள் ஆனித்திருவிழா நடக்கும் என்று சொல்கிறார்கள்.

சாஸ்திரிய குடும்பங்கள் பல வருசங்களுக்கு முன்னமே அரசாங்க வேலை சம்பந்தமாய் ஒன்றன்பின் ஒன்றாய்க் குடிபெயர்ந்த பின்னால் இந்தக் கட்டிடம் மட்டும் எஞ்சி கல் பெயர்ந்து பாசி பிடித்துக் கேட்பாரற்றுக் கிடக்கிறது. அங்குதான் பங்கஜத்தம்மாவின் சட்டடியான படுக்கை.

குடத்தை எடுத்துக் கொண்டு காலடி மறையுற நேரத்தில் தெற்கே ஆற்றிற்கு வந்த காலையும் வராத காலையும் இழுத்துக் கொண்டு ஊற்றில் தண்ணீர் மொண்டு வந்து அரக்கப் பரக்க சமையல் செய்து கட்டிலில் படுத்திருக்கும் பங்கஜத்தம்மாவிற்கு வெந்நீர் வைத்துக் குளிப்பாட்டி சாப்பிட வைத்து நாலைந்து வருடமாய் முடியாமல் கிடந்தவளை இப்பொ கொஞ்சம் தெம்பாக நடக்க வைத்திருக்கிறாள்.

ஒத்தக்காலில்லாத அந்த சின்னஞ் சிறிசு மூணு ஆள் வேலையைச் செய்கிறாள். இந்தப்பாடுகளில் தனக்கிருக்கும் ஊனமே அவளுக்குத் தெரியவில்லை. அது அவளுக்கு ஒரு குறையாகப் படவில்லை. அது பற்றி யாராவது பேசினாலும் அவள் மூக்கின் வழியே கோபித்துச்சிணுங்குவாள்.

அப்படித்தன் குறைபற்றிய பிரக்ஞையேயில்லாத முனிச்சியின் மேலே தெரிந்தே ஒரு சுமையை ஏற்றி வைத்து விட்டாள் பங்கஜத்தம்மா.

''நான் தப்பு செய்திட்டனா? என்னை காலம்போனகாலத்துல உசிருல தூக்கிச் சுமந்தவளுக்கு வஞ்சனை பண்ணிட்டனா? அவளுக்கு நல்லது செய்ற மாதிரி அந்தப் பச்சை மண்ணை உயிரோட இம்சுபட வச்சிட்டனா? ஏ! பெருமாளே! வெங்கடேசா! விவரம் தெரியாத குழந்தை உயிரோட தபதாயப்படுறது சகிக்கலையே. இந்த வாயில்லா சீவனை என் சின்னப் புத்திக்கி தக்க பலி கொடுத்திட்டனா? ஒம்புள்ளையா இருந்தா இப்படிச் செய்வியான்னு நெத்தியிலெ ஒன் நாமந் தரிச்ச ஒரு பெரிய மனுசி நித்தமும் கனவுல வந்து சினந்து சினந்து பேசி காறித் துப்புறாளே பெருமாளப்பா!''

இந்த ஊருக்கு அவள் சிறுமியாய் வந்தபொழுது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். யானை கட்டிச் சாவடிக்குப் பக்கத்தில் சிறுவர்களெல்லாம் கூடி அந்தச் சிறுமியைச் சுற்றி நின்று எகடாசி பேசி கோட்டா செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் பங்கஜம் அந்தப் பக்கமாய் வந்தாள். பிள்ளைகளை விலக்கி எட்டிப் பார்த்தாள். அந்தப் பெண் பிள்ளையின் தோற்றத்திலேயே இவளுக்கு இரக்கம் வந்து முகம் வாடிப் போனாள்.

''ஏ சின்னப் பைய புள்ளைகளா போங்க அந்தப் பக்கம். பாவம் யாரு பெத்த பிள்ளையோ, எங்ஙன தப்ப விட்டுட்டாகளோ!''

பக்கமாய்ப் போய் சிறுமியின் முகநாடியைப் பிடித்து தூக்கி ''ஓம்பேரென்னம்மா'' என்றாள்.

''முனிச்சி!''

''ச்சொ... ச்சொ...'' என்ற பங்கஜம் ''சாப்பிட்டயா'' என்றாள்.

சாப்பிட்டேனென்றோ, சாப்பிடவில்லையென்றோ அர்த்தமாகாத ''ஙங்காயா சாப்கிட்டே'' என்று ஙொணஙொணத்த பேச்சைப் பேசிக் கொண்டே அந்தச் சிறுமி எழுந்து நடக்க முயன்றாள். கிழிந்த பாவாடையினுள்ளே அவளின் ஒரு கால் தன் கை முழ அளவிற்குச் சூம்பிக் கிடந்தது.

பங்கஜத்திற்கு கண்களில் நீர் ததும்பி நின்றது. ''அடப்பாவமே அப்படிச் சொல்லு பிள்ளையை சுமைன்னு தான் விட்டுட்டுப் போயிட்டாக. இந்தா பாரு பாப்பா உங்க அம்மா எங்கே? அம்மா பேரென்ன சொல்லு.''

> ஒத்தைக் காலில்லாத
> அந்த முனிச்சி
> மூணு ஆள் வேலையைச்
> செய்கிறாள்.
> இந்தப் பாடுகளில்
> தனக்கிருக்கும் ஊனமே
> அவளுக்குத் தெரியவில்லை.
> தன்குறை பற்றி
> பிரக்ஞையே இல்லாத
> முனிச்சி மீது -
> தெரிந்தே ஒரு சுமையை
> ஏற்றி வைத்து விட்டாள்
> பங்கஜத்தம்மா.

அந்த சிறுமியின் முகம் அடுத்த விநாடி பிரகாசமாய் சந்தோஷித்தது. அவள் பிரியத்துக்குரிய அந்த முகம் தோன்றித் தோன்றி மறைகிறது. அவளை மறக்கவோ சொல்லவோ முடியவில்லை. திட்டுத் திட்டாய் மேகங்கள் சூரியனைக் கடந்து செல்லும்போது அலை அலையாய்ப் பூமியில் புரளும் நிழல்கள் வருடிக் கொண்டு செல்கிற மாதிரியான நினைவு. துளசி வாசனையுடன் வழுக்கைத் தலையில் சிவந்த ஒற்றைச் சிவப்பு நாமம் தரித்த அந்த சிவந்த கிழட்டு மனிதர் வந்துவிட்டால் அம்மா இவளை எங்காவது ஒளித்து வைப்பாள். வாய் பேச முடியாதவளாயிருந்தாலும் எப்பவாவது அப்பா என்று அழைத்து விடுவாளோ என்ற பயம் அவளுக்கு. 'அங்மா' என்றாலே ஓடி வந்து வாய் பொத்தினாள். சில நேரம் அந்த நாமதாரிக் கிழவரை எதிர்பாராமல் பார்வையில் படநேர்ந்தால் ''எங்காவது கொண்டு ஒழின்னு சொன்னேன்ல சின்னச்சாதிப்பய மகளே.''

சுற்றி நின்றவர்களைப் பார்த்தும் பங்கஜத்தைப் பார்த்தும் உதட்டைப் பிதுக்கி 'ஙே' என்று விக்கிவிக்கிக் கண்களைக் கசக்கிக் கொண்டு அழுதாள்.

பங்கஜம் முந்தானையில் மூக்கையும் கண்ணையும் தொடைத்தவாறு இரண்டு கைகளையும் அவளை நோக்கி நீட்டி ''வா'' என்று தலையை ஆட்டிச் சிரித்தவாறு கூப்பிட்டாள். அனாதையாய்த் தான்படும் பாடுகள் மனதுக்குள் இருளாய்ச் சுற்றி எழும்பி அந்தச் சிறுமியின் மேல் இரக்கமாய்க் கவிந்தது.

மெல்ல மெல்லக் கால்களைச் சாய்த்து ஊன்றி எழுந்து ஒரு சிறு அலையைப் போல பங்கஜத்தோடு வந்து சேர்ந்து கொண்டாள்.

முனிச்சி பங்கஜத்தின் பின்னாடியே திரிவாள். ரெண்டு பேரையும் ஊருக்குள் தனித்தனியே பார்ப்பது அரிது. 'ஏ முனிச்சி இதாபாரு இது எங்க பங்கஜத்தம்மா என்று யாராவது மேலே கை வைத்து விட்டால் நா என்று எழுந்து நொண்டி நொண்டி நாக்கைத் துருத்திக் கொண்டு தெருவில் கிடக்கும் கற்களை எடுத்து வீசுவாள்.

பங்கஜத்தம்மா முதலாளி வீடுகளில் வீட்டு வேலைகளைச் செய்தது போக வயசுப் பெண்களின் மாதாந்திர துணிமணிகளை ஆற்றில் போய் அலசி வருவாள். பழையதும் சில நேரம் பலகாரங்களும் கிடைக்கும். பழைய துணிமணிகளையும்கேட்டு வாங்கி வந்து

www.padippakam.com

முனிச்சிக்குப் போட்டு அழகு பார்ப்பாள். கடந்து போகும் நாட்கள் இருவரின் வடிவங்களையும் காலத்தின் போக்குக்கும் மூப்புக்கும் தகுந்த மாதிரி மாற்றிக் கொண்டேயிருந்தது.

தெற்றிய பற்களும் மேல்நோக்கிப் பார்த்த உருண்டைக் கண்களும் கீழிறங்கி மேலெழும்பி சாய்ந்து சாய்ந்து நடக்கும் அகோரச்சர வடிவமாயிருந்தாலும் உடல் வாளிப்பும் பருவமும் முனிச்சியை இளந்தாரிகளிடமிருந்து அவளால் காப்பாற்ற முடியவில்லை.

தினசரியும் வந்து உட்கார்ந்து அழுதுகொண்டு இருப்பாள். எவ்வளவு ரோசம் அவளுக்கு.

●●

**ப**ங்கஜத்தம்மாளுக்கும் அழுகை வந்தது. நலிந்து போன நெஞ்சு தாங்க மாட்டாமல் கனத்தது. கவலையுடன் முனிச்சியைத் திரும்பிப் பார்த்து மீண்டும் ஒருச் சாய்ந்து கொண்டாள். தான் அனாதையாய் அலைகிறபோது இப்படியான பயம் இல்லாமல் அநேக ஆம்பளைகளுடனான சிநேகிதம் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் திரிந்தாள். ஊர்க்காரர்கள் தன்னை 'தர்மக் கப்பல்' என்று ஏளனம் செய்தது இப்போது முனிச்சியின் ரோசத்தைப் பார்த்தும் உடம்பு இற்றுப் போனதை எண்ணியும் நினைத்து அசிங்கப்படுகிறாள். அந்தச் சண்டாளன் மட்டும் அந்த ருசிப்பைக் காட்டாமலிருந்தால்... இன்னொரு பசியைக் கிளப்பாமலிருந்திருந்தால்...

அன்றைக்குப் பாவாடை தாவணி போட்டு தங்கப் பதுமை மாதிரி இருந்த நேரம். முதலியாரம்மா வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்து கவலையற்று வயிறு கழுவிக் கொண்டிருந்த காலத்தில் அந்த மனிதர் வந்தார். அசதியில் தூங்கிக் கொண்டிருந்தவளை முதலியாரம்மா வந்து எழுப்பினாள்.

"ஏ கழுதே எந்திரி யாரு வந்திருக்கா பாரு. தூங்கு மூஞ்சிக் கழுதை! ஒஞ் சொந்தக்காரர் வந்திருக்காரு போய்ப் பாரு"

சொந்தமா? அவளுக்கு எல்லாமே முதலியார் வீடுதான். தனக்கென்று யாருமேயில்லை என்று விபரந்தெரிய எல்லோரும் சொல்லிச் சொல்லி தான் 'அநாதி' என்று தெளிவடைந்திருந்தாள். இப்போ சொந்தக்காரர் யாரு? கண்களைக் கசக்கிக் கொண்டு வந்தாள்.

முதலியாரய்யாவின் நாற்காலிக்கு எதிரில் நாற்காலிபோட்டுச் செக்கச் செவேலென்று நிறத்தில் லேசான முன் வழுக்கையில் சிவப்பு ஒற்றை நாமம். பட்டு வேட்டியும் பைஜாமாவுமாக சிரிக்கச் சிரிக்கப் பேசினார்.

"இந்தாடி குழந்தே! இந்தப் புடவையைக் கட்டிக்கோ. அந்த அட்டைப் பெட்டியிலே ஸ்வீட் இருக்கு" என்று கொடுத்தார். "இந்தாப்பா' என்று மண்டகப்படியின் சாவியை முதலியார் ஞாபகமாய்க் கொடுத்தார். அதை வாங்கி 'இந்தா மண்டகப்படி பக்கம் போயிருக்கியோ' என்றார் வந்தவர். இல்லையென்று தலையை ஆட்டினாள். 'இடமாவது தெரியுமோ' என்றார். தெரியும் என்று தலையை ஆட்டினாள். 'திறந்து இடத்தை நல்லா சுத்தம் பண்ணி வை வர்றேன்'

அன்றிலிருந்துதான் அவள் அசிங்கத்தைச் சுமந்தாள். ஆள் நடமாட்டமே வெகு நாட்களாய்க் கண்டிராத மண்டகப்படிக்கு அன்று ஒற்றைத் தடம் விழுந்தது. கொஞ்ச நாட்களில் அந்தத் தடம் மறைந்து மீண்டும் அங்கு புல் முளைத்தது. பலநாள் பாதையை வெறித்து வெறித்துப் பார்த்த பங்கஜம் ஏமாந்து போனாள். மண்டபப்படியே அவளுக்குக் கதியானது. அவளின் வயதும் வாலிபமும் வனப்பும் கூடக் கூட ஏக்கமும் தேவையும் கட்டாயமாகியது. மண்டபப்படியைச் சுற்றிப் பல பாதைகள் முளைத்தன.

அந்த மறக்க முடியாத சில இரவுகளை விதவிதமான பல இரவுகளால் மறக்க முயன்றாள். அதுவே வாழ்க்கையாகவும் ஆகிப்போனது.

முளைச்சு மூணு இலை விடாத பயல்களும் வயசுப் பையன்களும் முனிச்சி வேலைக்குப் போன நேரத்துல வந்து "ஏ கிழவி முனிச்சியைக் கொஞ்சம் ஏற்பாடு பண்ணு. இந்தா இந்த ரூபாயைப் பிடி. ரொம்பவும் கிராக்கி பண்ணாதே" என்று தினசரி நச்சரிப்புகள். அதட்டல்கள்.

வெளியே அழுது கொண்டு உட்கார்ந்திருந்த முனிச்சியை 'ஏட்டி' என்று கூப்பிட்டாள்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு லப்பியபடியே உள்ளே வந்து பக்கமாய் உட்கார்ந்தவளை ஆதரவாய்த் தடவிச் சொன்னாள்.

"இருந்தாலும்டி இந்தா பாரு. என்னமோ என் தாய் தகப்பன் செய்த புண்ணியம். எனக்கு நீ கடைசி காலத்துல வந்து உதவணும்னு அந்த பகவான் உன்னை அனுப்பிச்சிருக்காரு. சரி என் காலம் எப்படியோ செல்லுபடியாயிருச்சி. நீ இந்த ஒச்சக் காலு உடம்பை வச்சிக்கிட்டு ஒம் உசிரை இவ்ளநா காப்பாத்திட்டே. இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கந்தக மருந்துல கிடந்து மாரடிப்பே. நாளைக்கு என் கண்ணுக்கப் பிறகு உன் வயசு போன காலத்துல என்ன மாதிரி ஒரு சீக்கு நொடின்னு படுத்துக்கிட்டா உனக்குன்னு யாரிருக்கா?"

"ஒரு ஆதரவு உண்டுமா. ஒரு வெந்நி தண்ணி வெக்கெ முடியுமா? கேப்பாரில்லாம கிடக்க வேண்டியதுதான். ஆத்தா ஒன் நல்லதுக்கு சொல்றேன். தனக்குன்னு இருந்தாதான் அவக்குன்னு உதவும். ஒன்னும் தப்பில்லை... ஒரு பிள்ளையைப் பெத்துக்கோ. துட்டுக்குத் துட்டும் ஆச்சி. பார்த்தையில்லே யாரையாவது கேட்க முடியுதா... இந்த ஊர்ல யாரும் கேட்டுக் கொடுப்பாகளா நமக்கு?"

வெயிலான வெயிலின் சூட்டையும் தாண்டி கார், பஸ் இரு சக்கர வாகனங்கள் நெரிசலான பஜாரில் மனிதர்களுக்குள் போய்க் கொண்டிருந்த பங்கஜத்தம்மாளுக்கு நினைவுகள் வெயில் அலைகளோடு அலைகளாய்க் கரைந்து கொண்டிருக்க பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

பேர்ப் பாதி ரோட்டை மறித்து மறித்து விலகுகிற மாதிரி முனிச்சி பாவமாய் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

"ஐயோ பாவம்... ஆம்பளை கள்ளா முகஞ்சுளிச்சவளை லொங்குனவளை தூர விலகி ஓடினவளை அச்சுறுத்தி நயந்து பேசி ஒத்துக் கொள்ளச் செய்துட்டமே. அது நெசம்மாவே அவளோட பிற்காலத்துக்கான ஏற்பாடா, இல்லை காசுக்காக அப்பொ நானா ஏற்படுத்திக்கிட்ட சமாதானமா? எத்தனை ஜென்மம் எடுத்தாலும் எனக்கு இந்தப் பர்வம் தொலையுமா?" கண் கலங்கியது. முடியவில்லை. தாங்க மடியவில்லை. யம்மா. சாலையின் இடது பக்கம் உயர்ந்திருந்த சர்ச் கேட்டருகேயிருந்த வேப்ப மரத்து நிழலில் ஒதுங்கி உட்கார்ந்தாள்.

"இப்படிவாம்மா முனிச்சி..." இரைப்பு அதிகமாய் இருந்தது.

"என்னாலே இனிமே ஒரு எட்டு எடுத்து வெக்க முடியாது. அந்தா அந்தப் பக்கம்... நாலு கடை தள்ளி பெரிய மஞ்சக்கட்டடம் இருக்கு பாரு. அதான் தர்மாஸ்பத்திரி. போ, இந்த மாதிரி இதான் மாசம், இடுப்பு நின்னு நின்னு

www.padippakam.com

வலிக்குன்னு சொல்லு....என்னால துப்புரவா நடக்க முடியல... போ...''

••

''இந்தா இடுப்பு வலிக்குல்லே... வலிதாங்க மாட்டாம கண்ணீர் விடுறயில்லே.. இப்பக் கூட புருசம் பேரு சொல்ல மாட்டேன்னா அப்படியென்ன திமிரு'' என்றாள் நர்ஸ்.

முனிச்சியின் உருண்டைக் கண்கள் நாலாபுறமும் சுழன்றன. 'அங்மா' 'பங்ஹநம்' என்ற இரண்டு பெயர்கள் தவிர உலகத்தில் அவளுக்கு வேறு பெயர்கள் கிடையாது. வலியில் ங்ஙோ... ங்ஙோ... என்று வாய் திறந்து மூக்கின் வழியே தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தாள்.

''இந்தா அடுத்தாளுக்கு வழிவிட்டு விலகி நில்லும்மா பிடிவாதம் பண்ணிக்கிட்டு'' நர்சின் அதட்டலில் கிந்தி கிந்திப் போய் அருகிலிருந்த ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டாள் முனிச்சி. ரொம்ப நேரம் ஊமையாய் அழுதாள்.

வந்திருந்த பெரும்பாலான கிராமத்து ஜனங்கள் ''ஐயோ பாவமே அது உசிருக்கு எப்படி வருதோ'' என்று சூழ்ந்து நின்றது.

இரண்டு நர்சுகள் டூட்டிக்கு மாறினார்கள். 'என்ன வெளியே கூட்டம்' என்று கேட்டுக் கொண்டே வந்தார்கள்.

''டெலிவரி கேஸ். பேருகேட்டா முனிச்சின்னா. புருசம்பேரு கேட்டா வாயைத் திறக்க அடம் பிடிக்கிறா?'' புதிய நர்சுகள் அவளிடம் வந்தார்கள்.

''இந்தா துணைக்கு யாரும் இருக்காங்களா. இல்லேன்னா வெளியே கொண்டு போய் விடு. இந்த மாதிரி ஹாண்டிகேப் டெலிவரியெல்லாம் கண்டிப்பா பிரச்சினையாத்தான் இருக்கும். ஏதாவதுன்னா யார் பதில் சொல்றது? ரெண்டு பேரா பிடிச்சு வெளியே கொண்டு போய் விடுங்கம்மா.''

ரெண்டு பேர் என்ன செய்வதென்று பாவமே என நினைத்து இருபுறமும் தாங்கினார்கள். முனிச்சியின் வாயிலும் மூக்கிலும் இளங்கன்றின் மூக்கிலிருந்து வருகிற மாதிரி விளக்கெண்ணெய் மாதிரி வெள்ளை திரவம் சுரந்து கொண்டேயிருக்க ங்கே... ங்கே... ங்கே என்று திகராயப்பட்டு அடிகளை எடுத்து வைத்தாள்.

நர்சுகளின் அடுத்த வேலைகள் துவங்கின.

••




ரெண்டு பெண்கள் அழுத மாதிரியான முகத்தை வைத்துக் கொண்டு ''தாயி தாயி அந்தக் காலு ஒச்சமான பொண்ணு நடக்கமாட்டாம கிறங்கிருச்சி. கன்னிக் குடம் உடைஞ்சி போச்சும்மா. நீங்கதான் அதக்காப்பாத்தணும். வயித்துலயிருக்கிற உசிரு அக்கியை குடிச்சிருச்சினா ரெண்டு உசிருக்கும் ஆபத்துதாயி. நீங்கதா கொஞ்சம் தயவு பண்ணனும்.''

''பாத்தீங்கல்ல நாங்க எத்தென கேசுக்கு பதில் சொல்லணும். இப்படி இடத்துல வந்து புருசன் பேரைச் சொல்லாம பிடிசாதனை பண்ணுனா என்ன அர்த்தம்? டாக்டரம்மா வேற இன்னைக்கி மூடு சரியில்லாம இருக்காங்க.''

''என்னமோ தாயி நாங்களும் சத்தம் போட்டு வைது கேட்டுப் பார்த்தோம். ஒரு வடியய்யா முழிக்கா. இடுப்பு வலியில புத்தி மிரண்டு போச்சோ என்னமோ. நீங்கதான் அந்த விவரங் கெட்டதைக் காப்பாத்தணும் நாங்க துணைக்கு நிக்கிறோம்மா.''

''சரி சரி கூட்டிட்டு வாங்க.''

அந்த ரெண்டு பெண்களும் முனிச்சி சாய்ந்து கிடந்த ஜன்னல் அருகே ஓடினார்கள். அவள் அங்கே இல்லை.

••

நெரிசலான மெயின் ரோட்டில் போக்குவரத்துக்கு நடுவிலே கொஞ்ச நேரம் நடக்கிறதும் பிறகு உட்கார்ந்து தவழ்றதுமாய் முனிச்சி உச்சி வெயிலில் நகர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தாள். எதிர்ப்படுகிற ஆளுகளை உச்சியில் அண்ணாந்து பார்த்து 'எங் புருசங் பேரு எஞ்ன' 'எங் புருசங் பேரு எஞ்ன' என்று கேட்டுக் கொண்டே வெயில் தரையில் ஊர்ந்தாள்.

''அடியேய்... அடியேய்... ஏ முனிச்சி ஆத்தா இங்கெ இருக்கன்டி. ஏ... முனிச்சி அட பாதகத்தி'' — சர்ச்சின் முன்னால் வேப்பமரத்தடியில் சாய்ந்து கிடந்த பங்கஜத்தம்மா சத்தமிட்டு சத்தமிட்டு அடக்க முடியாத இருமலில் இரண்டு கைகளையும் நீட்டி அழைத்தாள். எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. ஆத்தாளை ஒரு மூன்றாம் மனுஷியைப் பார்க்கிற மாதிரி பார்த்துவிட்டுத் திரும்பவும் ஊர்ந்து எதிர்ப்படுகிறவர்களிடம் 'எங் புருசன் பேரு எஞ்ன' என்று தலையை ஆட்டி ஆட்டிக் கேட்டுக் கொண்டே நெடுக நிற்காமல் நடந்து கொண்டேயிருந்தாள் முனிச்சி.

மீசை முளைக்காத வயசுப் பையன்கள். அரும்பு மீசை வைத்த அப்பச்சிமார்கள். வெள்ளை வேட்டி நேரியல் துண்டணிந்த முதலாளிமார்கள். கோட்டு சூட்டு அணிந்த துரைமார்கள் ஆகிய புருசர்கள் அவள் எதிரில் வந்து பின்னால் மறைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஏற்ற வித்தியாசமான மனிதர்கள் பிடித்த சவப்பாடை சாய்ந்தபடியும் ஆடியபடியும் மயானத்தை நோக்கி விரைவதைப்போல முனிச்சி போய்க் கொண்டிருந்தாள்.

•

www.padippakam.com




# குஜராத் படுகொலை: ஆவணப்படம்

நிறையப் படித்துவிட்டோம். குஜராத்தில் இந்து மத வெறி சங்கப் பரிவாரக் குரங்குகள் நடத்திய கொடூரத்தை. எழுத்துக்களாய் நீங்கள் படிக்கும் போது உங்களுக்குள் உருவகப்படுத்திக் கொண்ட காட்சிகளால் அல்லது வார்த்தைகள் தந்த உணர்ச்சிகளால் தாக்குண்டு, வெகுண்டெழுந்த உங்களது கோபம், இப்போது ஒருவேளை மட்டுப் பட்டிருக்கலாம். இந்துமத வெறியர்களின் கொலைவெறித் தாண்டவத்திற்கு உதாரணமாகக் குஜராத்தைச் சொல்லிச் சொல்லி உங்களையறியாமலேயே சலிப்படைந்து சடங்குத்தனமாய் வார்த்தைகள் உங்களிடமிருந்து வந்து கொண்டிருக்கலாம்.

உணர்ச்சி வசப்பட வைக்கும் எழுத்துக்களின் தீவிரம் நம்மை ஆட்கொள்ளும் காலத்தின் அளவு குறித்த வரையறை எதுவுமில்லைதான். ஆனால், அது நிச்சயமாகக் காட்சி ஊடகத்தின் தீவிரம் நம்மை ஆட்கொள்ளும் காலத்தின் அளவை விடக் குறைவுதான்.

சங்கப் பரிவாரக் குரங்கு ஒன்று இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு வெறியோடு அலறும் புகைப்படத்தையும், இசுலாமியர் ஒருவர் இரு கைகளையும் கூப்பி வணங்கி கண்ணில் நீர் மல்க, மரண பீதியுடன் நிற்கும் புகைப்படத்தையும், ஏற்கெனவே பத்திரிக்கைகளில் பார்த்திருந்ததால், குஜராத் படுகொலை குறித்த ஆவணப்படம் ஒன்றைப் பார்த்தபோது, ஆரம்பத்தில் ''ஒரே அழுகுரல், எங்கும் புகை, ஆங்காங்கே ஏதேதோ எரிந்து கொண்டிருக்கின்றன, வெட்டிச் சாய்க்கப்பட்ட பிணங்களாக மனிதர்கள், அலறி ஓடுகின்ற மக்கள், துரத்தி வரும் இந்து மதவெறியர்கள்....'' — இப்படித்தான் கற்பனை செய்து கொண்டிருந்தேன். ஆனால் படத்தில் அப்படி ஏதுமில்லை. பிஜேபியின் சித்தாந்தம் பாசிசம்தான் என்பதையும், பிஜேபி, விஎச்பி, ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் உள்ளிட்ட இந்து மதவெறிக் கும்பலெல்லாம் பாசிசக் கூட்டம்தான் என்பதையும், மிகத் தெளிவாக, ரத்த சாட்சியங்களாக நம்முன் வைக்கிறது இந்த ஆவணப்படம், நாம் இனிமேல் குஜராத்தை என்றென்றைக்கும் மறந்து விட முடியாதபடி. இப்படத்தின் பெயர்: ஃபைனல் சொல்யூஷன் - ***இறுதித் தீர்வு.*** படத்தை எடுத்தவர் ராகேஷ் சர்மா.

## இந்து நஞ்சு

படத்தின் துவக்கத்திலேயே, படுகொலையினால் பாதிக்கப்பட்ட, படுகொலைகளை நேரில் பார்த்த முசுலீம் குடும்பத்துச் சிறுவன் இஜாஜ் உடன் நேர் காணல் வருகிறது. ஒரு நொடியில் நாம் அதை உணர்ந்து விடுவதால் ஓடிச் சென்று, கள்ளங்கபடமில்லாமல் மலங்க மலங்க விழித்தபடி பேசும் அவனைக் கட்டியணைத்து ஆதரவாக நாங்கள் இருக்கிறோம் எனச் சொல்ல வேண்டும் என மனம் துடிக்கிறது. படம் இரண்டரை மணி நேரம் ஓடுகிறது.

பக்தியை, கடவுளை, மதத்தை, மதவெறியை, கலவரம் மூலமாக, படுகொலைகள் மூலமாக, பாலியல் வன்முறை மூலமாக, தேர்தல் வெற்றியாக மாற்ற முடியும் என்பதைப் பாசிஸ்டுகள் நிரூபித்துக் காட்டுகிற விதத்தை தெளிவாக நாம் புரிந்து கொள்ளும்போது, படம் முடியப் போகும் நேரத்தில், மீண்டும் அதே சிறுவன் இஜாஜ் உடன் நேர் காணல் வருகிறது. கேள்விகளுக்கு அவன் பதில் சொல்வதைக் கேளுங்கள். இஜாஜ் படித்துக் கொண்டிருப்பது யூ.கே.ஜி.

இஜாஜ்: 1... 2... 3... எனக்கு எல்லா எண்களும் தெரியும். வீடு... பூக்கள் எல்லாம் செய்யத் தெரியும்.

கேள்வி: பெரியவனான பிறகு என்ன ஆவாய்?

இ: சோல்ஜராவேன்! பிறகு அவர்களைச் சுடுவேன்!

கே: யாரை?

இ: இந்துக்களை!

கே: ஏன்?

இ: ஏன்னா, அவர்களும் இதைத்தான் செய்தார்கள்!

கே: நீ ஏன் அவர்களை மோசமானவர்களாக நினைக்கிறாய்?

இ: .....கட்டாயம் அவர்களைக் கொல்வேன்!

கே: ஏன்?

இ: நான் அவர்களைச் சேதப்படுத்துவேன்!

கே: எல்லா இந்துக்களும் மோசமானவர்களா?

இ: அவர்கள் கெட்ட வார்த்தைகளைப் பேசினார்கள்!

கே: எந்த மாதிரி?

இ: நான் அந்தக் கெட்ட வார்த்தைகளைப் பேசமாட்டேன்.

www.padippakam.com

கே: நான் ஒரு இந்து. நான் மோசமானவன்னு நெனக்கிறியா?

இ: (யோசித்து) இல்லை.

கே: நீ ஒரு சோல்ஜர். என்னைக் கொல்லணுமல்லவா?

இ: (தலையசைத்து) ஆமா, நா வேற யாரையும் தாக்க மாட்டேன். இந்துக்களை மட்டும்தான் கொல்வேன்.

கே: சரி! நா ஒரு இந்து.

இ: இல்லை. நீங்கள் அவர்களில்லை.

கே: நான் அவர்களைப் போல இல்லையா?

இ: (இல்லையெனும்படித் தலையசைக்கிறான்)

கேள்வி: அப்புறம்?

இஜாஜ்: நீங்கள் ஒரு முசுலீம்.

— குஜராத்தில் நடத்தப்பட்ட படுகொலைகள், இசுலாமிய இளைஞர்கள், பெண்கள், குழந்தைகளிடம் என்ன எதிர்விளைவுகளை உண்டாக்கும்? அவைகள் எதிர்வன்முறைகளாக அமைந்தால், அது இந்துவெறியர்களுக்குத்தான் சாதகமானதாக இருக்கும் என்பதை எப்படி அவர்களிடம் விளக்கலாம் என்பதும்; கொழுந்துவிட்டு எரியும் இவர்களின் கோபத் தீக்கு என்ன சமாதானம் சொல்வது? எம்மாதிரியான தண்டனைகளை இந்து மத வெறிக் கும்பலுக்கு வழங்கினால், இவர்களின் ஈடு செய்ய முடியாத இழப்புகளைச் சமன் செய்ய முடியும் என்கிற கேள்வியும் — படத்தின் இடையிடையே அலைபோல எழும்பியெழும்பித் தணிந்து கொண்டிருந்தபோது இறுதியில் வரும் இஜாஜின் சொற்கள் நம்மை அதிர வைக்கின்றன.

இந்துக்கள் என்றாலே கொடூரமானவர்கள் என்கிற ஆழமான வடுவை இஜாஜ் போன்ற குழந்தைகளின் மனதில் பதித்து விட்டார்கள், ராமபக்தர்களான இந்துப் பாசிஸ்டுகள். தம்மை இந்துக்கள் என்று நம்பிக் கொண்டும், சொல்லிக் கொண்டும் திரிபவர்கள் இஜாஜின் கேள்விக்கு என்ன பதில் சொல்வார்கள்?

அது யாரோ வெறியர்கள் செய்தது என்றால், உங்களின் பெயரைப் பயன்படுத்தித்தான் அவர்கள் இதைச் செய்தார்கள் என்பதால் அவர்களுக்கு நீங்கள் என்ன தண்டனை வழங்கப் போகிறீர்கள்? பிஞ்சு மனதில் நஞ்சைக் கலந்து என்பார்களே, அதை அப்படியே பார்க்க முடிகிறது. அதுவும் இது இந்து நஞ்சு.

### பிரச்சாரம் - பயம் - வெற்றி

பிஜேபியின் தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்களுடன் படம் துவங்குகிறது. முசுலீம்களை இழிவாகத் திட்டும் சிறுவர்கள். இஜாஜின் நேர்காணல். முசுலீம் முகாம்கள் - இடிக்கப்பட்ட வீடுகள் — "போலீசு பஜ்ரங்தளுடன் சேர்ந்து கொண்டனர்" என ஆவேசப்படும் முசுலீம்கள். போலீசு சுடும் காட்சி - கலவரத்தை அடக்க போலீசால் சுடப்பட்டுச் செத்த 40 பேர்களில் 36 பேர் முசுலீம்கள். பாதிக்கப்பட்டவர்களின் நேர் காணல்கள். மோடியின் மத வெறியூட்டும் தேர்தல் பிரச்சாரப் பேச்சு. எல்லா இடங்களிலும் கோத்ரா பற்றியே பேச்சு.

கோத்ரா ரயிலில் இறந்த ஒரு பெண்ணின் இரண்டு புகைப்படப் பிரதிகளை வாங்கிக் கொண்டு போய், ஒன்றை விஎச்பி அலுவலகத்தில் கரசேவத் தியாகிகள் என கட்டம் போட்டும், இன்னொன்றை, வில்லோடும் வெறியோடும் சீறும் 'ராம்'போவின் படத்துடன் இணைத்து லேமினேட் செய்தும் கொடுத்துள்ளார்கள். "எங்கம்மா கரசேவகர் இல்லை. விஎச்பிக்காரர்கள் அப்படி மாற்றி விட்டார்கள்" என்று அவரது மகள், ஒரு சிறுமி சொல்கிறார்.


தேர்தல் பிரச்சாரம் - ராவணனால் வாலில் தீ வைக்கப்பட்ட ஹனுமான் குஜராத்திற்கு வந்திருந்தார் எனப் பிரச்சாரம். நடக்கும் தேர்தல் பிஜேபிக்கும் காங்கிரசிற்குமல்ல; இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் - பாகிஸ்தானே நமது எதிரி - முஸ்ரஃபே எச்சரிக்கை - இந்து வன்முறையாளர்கள் என்று சொல்கிறார்கள், இந்துக்களுக்கு வன்முறையில் நம்பிக்கையில்லை, இந்துக்கள் வன்முறையில் இறங்கினால் உலக வரைபடத்தில் பாகிஸ்தான் இல்லாமல் போகும் — பிரச்சாரம், இந்துமதவெறிப் பாசிசத்தின் உச்சகட்டப் பிரச்சாரம்.

இடையில் இந்துக்களுக்கு ஆதரவாகச் சிலர், ஒரு டாக்ஸி டிரைவர், இளம்பெண், கிரிக்கெட் விளையாடும் சிறுவர்கள்... எனப் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவது பொய்தான் என்பதையும், உண்மையைச் சொல்ல வரும் போது அவர்கள் தடுமாறுவதையும் பேச்சை நிறுத்திக் கொள்வதையும், அவர்கள் மறைக்க நினைக்கும் இந்துத்துவச் சார்பை, டாக்ஸியில் இருக்கும் கண்ணாடிப் பிள்ளையார், பிரார்த்தனையை வலியுறுத்திப் பேசி, ஊதுபத்தி காட்டி, போலீசுக்குக் கும்பிடு போடும் இளம்பெண்... போன்றவைகளைக் கவனமாகக் காட்சிப்படுத்தியிருப்பதன் மூலமும் சிறப்பாக அம்பலப்படுத்தியிருக்கிறார் இயக்குநர்.

ஒரு ஆவணப்பட இயக்குநருக்கு அவசியம் இருக்க வேண்டிய 'கருத்துக்களின் சார்பை வெளிக் கொணருதலை' - ராகேஷ் சர்மா இதில் முழுமையாகச் செய்திருக்கிறார்.

ஒரு இந்துக் கோயிலில் குண்டைத் தேடியும், தீவிரவாதிகளைச் சுட்டதாகவும் காட்டும் ராணுவ நடவடிக்கைகளைக் காண்பித்து 'சான்சூய் டிவி'யின் விளம்பரத்தைக் காண்பித்திருப்பது பொருத்தமான அம்பலப்படுத்துதலோடு கிண்டலாகவும்இருக்கிறது.

படத்திலுள்ள செய்திகள் ஏராளம், ஒரு நூல் எழுதுமளவிற்கு. மந்திரம், வேதம், புனிதம், பக்தி, கடவுள், தியானம், யோகம், ஆன்மீகம், காவி, துறவு, பூஜை, தேசபக்தி, ஸ்ரீராம், காளி, கணபதி... இன்னும் தான் அணிந்திருக்கிற எல்லாவிதமான முகமூடிகளையும் கழற்றி எறிந்து விட்டு, தான் ஒரு பாசிசம்தான்




இந்துக்கள் என்றாலே
கொடூரமானவர்கள் என்கிற
ஆழமான வடுவை
இஜாஜ் போன்ற குழந்தைகளின் மனதில்
பதித்து விட்டனர் இந்துப் பாசிஸ்டுகள்.
தம்மை இந்துக்கள் என்று
சொல்லிக் கொண்டு திரிபவர்கள்
இஜாஜின் கேள்விக்கு
என்ன பதில் சொல்வார்கள்?

www.padippakam.com

என முழு அம்மணமாய் குஜராத்தில் நின்றிருக்கிறது இந்துத்துவம். அதற்கு ஆதாரம் இப்படம்.

•••

சுகானா, அவரது மகள்கள் ரேஷ்மா, சபானா மூன்று பேரும் வன்புணர்ச்சிக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்படுகின்றனர். பறிகொடுத்த உறவினரின் நேர் காணலுக்குப் பிறகு, அவர்கள் சீரழிக்கப்பட்ட, கொல்லப்பட்ட இடங்களையும், பார்வையிட்ட பிறகு, அத்தொகுதியின் பிஜேபி எம்.பி. பிரபலமான வக்கீல், கோபால்சிங் சோலங்கியிடம் அவரோடு காரில் பயணித்துக் கொண்டே நேர்காணல் துவங்குகிறது:

கே: நீங்கள் வழக்கறிஞராகச் செயல்பட்டு வருகிறீர்கள்.

எம்.பி: ஆம்! நான் முதலில் வக்கீல், அரசியல்வாதி பிறகுதான். அரசியல் என்னோடு கூடவே ஓடிவந்து கொண்டிருக்கிறது.

(கார் வக்கீல் அலுவலகத்திற்கு வந்துவிட்டது. ஏராளமான புகார்தாரர்கள். போலீசும் அமர்ந்திருக்கிறது. கேள்விகளுக்குச் சிலர் பதில் சொல்கிறார்கள்.)

பதில்: ஆம்! அவர் எங்கள் வக்கீல்!

கே: எப்படிப்பட்ட வக்கீல்?

ப: மிகத் திறமைசாலி - அவருக்கு எல்லாச் சட்டமும் தெரியும்.

கே: என்ன வழக்கில் நீங்களெல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீர்கள்?

ப: செக்ஷன் 302, 307 அப்புறம் 376.

கே: எதுக்காக?

ப: 376 ரேப்... 302 கொலை

இசுலாமியப் பெண்கள் நரவேட்டையாடப்பட்டிருக்கிறார்கள். வேட்டையாடிய இந்து ஓநாய்களின் வக்கீல் பிஜேபியின் பாராளுமன்ற உறுப்பினர். வக்கீல் → எம்பி → கலவரம் → பாலியல் வன்முறை → படுகொலை → வக்கீலிடம் குற்றவாளிகள் கூட்டம் → சிறந்த வக்கீல் → பாலியல் வன்முறை, படுகொலை வழக்குகள் → வெற்றிகரமான வக்கீல் தொழில் → மிகத் துல்லியமாக இந்த வலைப்பின்னலை அம்பலப்படுத்தியிருக்கும் இயக்குநர் பாராட்டப்பட வேண்டியவர்.

ஆவணப்படம் எனும் வடிவத்தில் இச்செய்தியை ராகேஷ் சர்மா வெளிக்கொணரக் கையாண்டிருக்கும் பொருத்தமான தொகுப்பும், உத்தியும், ஆவணப்பட உலகினர் கவனம் கொள்ள வேண்டிய ஒன்று. இந்தப் பொருத்தமும், தொகுப்பும் ராகேஷ் சர்மாவிற்குக் கனகச்சிதமாய் அமைந்ததற்கு, பிரச்சினையின் உண்மையை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பது தான் அடிப்படை.

குற்றங்களைச் செய்வதற்கான குற்றவாளிகளை உருவாக்கிப் பணமும் சம்பாதிப்பதற்கு, பிஜேபிக்கு பயன்பட்டிருக்கிறது வக்கீல் தொழில். மைக்கேல் மூரின் "பாரன்ஹீட் 9/11"-ஐ நினை

இயக்குனர் ராகேஷ் சர்மா



நாமும்
அதே 'பயம்'
எனும் ஆயுதத்தையே
எடுத்துக் கொள்வோம்.
பயம் என்பதை
"பயப்பட வைத்தல்"
என்று மாற்றிக் கொள்வோம்.
தேர்தலில் அல்ல,
தெருவில் திருப்பியடிப்போம்.
பயம் அறுப்போம்.
துணிச்சல்.
துணிச்சல் ஒன்று தான் வழி.

ஊட்டுகிறது இக்காட்சி. பணம் சம்பாதிக்க புஷ் குடும்பம் துவக்கிய ஈராக் போர். அங்கே அமெரிக்க 'அப்பன் புஷ்'; இங்கே பிஜேபி எம்.பி சோலங்கி.

இவ்வளவு குரூரமான கலவரத்திற்குப் பிறகும் பிஜேபி தேர்தலில் எவ்வாறு வெற்றியடைந்தது என்பதைப் படம் தெளிவாக விளக்குகிறது.

சங்பரிவாரக் குரங்குகளால் தாக்கப்பட்ட முசுலீம் பகுதியிலுள்ள ஒரு இந்துவின் வீடு. வீட்டைச் சீர் செய்து கொடுத்திருக்கிறது இசுலாமியக் கமிட்டி — இவற்றையெல்லாம் சொல்லும் அந்தப் பெண்ணிடம், "யாருக்கு ஓட்டு போடுவீர்கள்?" எனக் கேட்கப்படும் கேள்விக்கு அவர் சொல்லும் பதில் "பிஜேபிக்கு." காரணம்? பயம்.

"ஏன் மோடிக்கு ஓட்டுப் போடுவேன் என்கிறீர்கள்?" இதற்கு ஒரு இளைஞனின் பதில், "அப்பத்தாங்க டென்ஷன் இல்லாமல் இருக்கலாம்." டென்ஷன் என்பது பயம்தான்.

பயத்தை விதைத்து தேர்தல் வெற்றியை அவர்கள் அறுவடை செய்திருக்கிறார்கள். முசுலீம்களிடம் மட்டுமல்ல இந்துக்களிடமும் அந்தப் பயம் மிக அதிகமாகவே இருந்திருக்கிறது. இந்தப் பயம்தான் பாசிஸ்டுகளுக்குத் தேர்தலில் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது.

•••

நாமும் இங்கிருந்தே கற்றுக் கொள்வோம். தேர்தலில் தோல்வியடைய வைப்பதன் மூலம் பாசிஸ்டுகளுக்குப் பாடம் கற்பிக்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்திருக்கிற நாமும் அதே 'பயம்' எனும் ஆயுதத்தையே எடுத்துக் கொள்வோம். பயம் என்பதை "பயப்பட வைத்தல்" என்று மாற்றிக் கொள்வோம். தேர்தலில் அல்ல, தெருவில் திருப்பியடிப்போம். மதவெறிக் குரங்குகளைக் கட்டிவைத்து வாலில் தீ வைப்போம். பயம் அறுப்போம். துணிச்சல். துணிச்சல் ஒன்றுதான் வழி. மதவெறியர்களைப் பயப்பட வைக்கும் நடவடிக்கையில் இறங்கும் துணிச்சல் ஒன்றுதான் பாசிஸ்டுகளை ஒழித்துக் கட்டப் பயன்படும் முதல் ஆயுதம் என்பதை ***இறுதித் தீர்வு*** (Final Solution) எனும் இந்த ஆவணப்படம் முகத்தில் அறைந்து சொல்கிறது.

ஹிட்லர் தனது இறுதித் தாக்குதலுக்கு வைத்துக் கொண்ட பெயர் ***இறுதித் தீர்வு.*** படத்தின் தலைப்பாக இருக்கும் இந்த வார்த்தைகளுக்கு நாம் கொள்ளும் அர்த்தமும் இதுதான்.

குஜராத்திற்குப்பின் தமிழகம்தான் என்கிற கனவைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்திருக்கிறது காவிக் கும்பல். தேர்தலும் சட்டமன்றமும் பாராளுமன்றமும் பாசிஸ்டுகளை ஒழிக்காது. அவை பாதுகாக்கும், வளர்க்கும். குஜராத்தைவிட வேறு எடுத்துக்காட்டு இனித் தேவையே இல்லை.

இவர்களின் பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் எதிர்க்கும் துணிச்சலும், நேருக்கு நேர் சந்திக்கும், மோதும் துணிச்சலும்தான், பாசிஸ்டுகளை ஒழிக்கும், அழிக்கும். அதற்குத் தமிழகம் ஓர் எடுத்துக்காட்டு என்பதை புரட்சிகர அமைப்புகள் நிரூபித்தே தீரும்.

● குருசாமி மயில்வாகனன்


படிப்பகம்

www.padippakam.com



# போலீசு – மனித உரிமை – பார்ப்பனியம்: ரெட்டை நாக்கு அம்பிகள்!

"அவா அவா செய்த கர்ம வினையை அவா அவா அனுபவிச்சே ஆகணும்! போய் அம்பாளுக்கு நெய் தீபம் போடுங்கோ!" என்று 'மத்தவாளு'க்குத் தத்துவம் பேசும் பார்ப்பனக் கும்பல், செக்ஸ் அண்டு கிரைமாதிபதிகளான ஜெயேந்திரன், விஜயேந்திரன் விஷயத்தில் எவா எவாளப் பாத்தா டில்லியில காரியம் நடக்கும் என்று படைகட்டி வேலை செய்வதுடன் இந்தக் கயவர்களின் பாங்கனாக துக்ளக், தினமலர் வகையறாக்களை வைத்து இது பொய்வழக்கு, போலீஸ் ஜோடனை, மனித உரிமை மீறல் என்ற பிரச்சாரத்தை ஆரம்பித்து விட்டது.

ஏற்கெனவே வாயைத் திறந்ததற்கே வாய்தா மேல் வாய்தா என்பதால் 'பெரிசு' மவுன விரதம் சாதிக்கிறது. 'அட்சர சுத்தமாய்' புளூ ஃபிலிமை பூக்கூடைக்குள் போட்டு வாங்கத் தெரிந்த 'சிறுசோ' ஆயிரம் விளக்கு போலீசு நிலையத்தில் இடது கைப் பெருவிரலைக் கை நாட்டி வாரா வாரம் சட்டத்தின் முகத்தில் பீச்சாங் கையை வைத்து நக்கலாகச் சிரிக்கிறது. விளக்குக் கம்பத்தில் கட்டித் தோலை உரிக்க வேண்டிய இந்த இரண்டு சமூக விரோதிகளுக்காகவும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., பார்ப்பன ரவுடிகள் முதலாக, ஆர்.வி., சேஷன், சோ, தினமலர் கிருஷ்ணமூர்த்தி போன்ற கேடிகள் வரை "எப்படி எங்களவா மேல வழக்கை வைக்கலாம்?" என்று வரிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டனர். பின்னே, கதாநாயகர்களைக் கைது செய்தால் பாங்கர்களுக்குப் பதறாதா?

குறுந்தொகைப் பாடல் கூறுவதைப் போல –

*"பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே!*
*எழுதாக் கற்பின் நின் சொல்லுள்ளும்*
*பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்*
*மருந்தும் உண்டோ! மயிலோ இதுவே!"*

பிரிந்தோர் கூடுவதற்கான வேலைகளைச் செய்ய, ஊருக்குத் தெரியாமல் கூட்டிக் கொடுக்க பார்ப்பன மகனாம் பாங்கனை அழைப்பதே பழைய மரபு. இப்போது, "ஆமாம், நான்தான் சங்கர்ராமனைப் போட்டேன்! அனுராதா ரமணனை லுக்கு விட்டேன்! சொர்ணமால்யாவுக்குச் சொடக்குப் போட்டேன்! இப்ப என்னாங்குறே? ஆதாரம் இருக்கா?" என்று வக்கீலை வைத்து விவாதிப்பதோடு, துக்ளக், தினமலரை வைத்து "போலீசை நம்பமுடியாது" என்று புராணமும் பாட ஆரம்பித்து விட்டது பார்ப்பனக் கும்பல்.

தமிழகத்தில் பிற உழைக்கும் மக்களும், அரசு ஊழியர்களும், அரசியல் கட்சிகளும், புரட்சிகர இயக்கங்களும் போலீசு அராஜகத்தை எதிர்த்துப் போராடும் போதெல்லாம் போராடுபவர்களை நக்கலடித்தும், உள்நோக்கம் கற்பித்தும், 'அக்கார்டிங் டு லா (சட்டப்படி)' என்று வக்கணை பேசிய பார்ப்பனக் கும்பல், கேவலம் பொம்பளைப் பொறுக்கி காஞ்சி மடாதிபதிகளுக்காகக் கச்சம் கட்டிக் கொண்டு போலீசை எதிர்த்து கார்ட்டூன் போடுவதென்ன?

"பேச நா இரண்டு உடையாய் போற்றி!" என ஆரியமாயையில் அண்ணாதுரை சொன்னதுபோல, அவாளின் சாதிவெறி நாக்கை இழுத்து வைத்து அறுக்க வேண்டாமா?

**ஆழ்வார்ப்பேட்டை ஆளுடா! அண்ணா சாலை நூலுடா!**

இன்று சங்கராச்சாரியை, பெரிசையும் சின்னதையும் போலீசு காவலில் நடத்திய விதம் 'டூ மச்!' என்றும், மேலிடத்து உத்திரவு என்றும் புலம்பும் சோ பார்ப்பனக் கும்பல், சாதாரண மக்கள் போலீசாரால் சித்திரவதைக்குள்ளாகும்போதும், ஒரு குடம் தண்ணீருக்காகத் தடியடி நடத்தும் போதும் நியாய அநியாயங்களைப் பேசாமல், "எது தர்மம்" (துக்ளக், 16.1.2002) என்று "நதர்மா அதர்மௌ சரதி ஆவம் ஸ்வ இதி" என்று லத்திக்கம்பால் வேத வியாக்கியானம் காட்டியதோடு, "போலீசுக்காரர் என்ன ஸ்கவுட்டா? கூட்டத்தினரைப் பார்த்து, எல்லோரும் தயவு செய்து விலகிவிடுங்கள்; மகாத்மா காந்தி அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்; ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி சொல்லியிருக்கிறார், எல்லோரும் அமைதியாக விலகவேண்டும் என்று கூறிவிட்டு மூலையில் போய் உட்கார்ந்து கொள்ள முடியுமா? அதுதான் போலீசாரின் கடமையா? நாலு பேரையாவது பிடித்து அடி அடி என்று அடித்தால்தான் கூட்டமே சிதறி ஓடும். அது அவர்களுடைய தர்மம். போலீசு ஸ்டேஷனில் ஒருவனை சித்திரவதை செய்தார்கள் என்று செய்திவரும், உடனே எல்லோரும் பெரிய அட்டூழியம், போலீசு அராஜகம் என்று சொல்வோம். பிடித்தவனை நாலு அடி கொடுக்கட்டும், அப்படியாவது திருட்டுப் போன சாமான் கிடைக்கட்டும் என்பதுதானே நமது எண்ணமாக இருக்கும்?" என்று போலீசுக்கு வக்காலத்து வாங்கிய சோ இப்போது உள்ளே இருப்பது மகா அயோக்கியனாக இருந்தாலும் அவாளாக இருப்பதால் "அவருடைய


படிப்பகம்

www.padippakam.com

பெயரைக் கெடுக்கக் கூடிய வதந்திகளைச் சேகரிப்பதுதான் போலீசின் வேலையாகி வருகிறது... அதுமட்டுமல்ல போலீசுத் துறையின் ஒலிபெருக்கியாகி போலீசுதரப்புப் பிரச்சாரம், புலனாய்வு என்ற அந்தஸ்தைப் பெற்று பத்திரிக்கைகளை பிட் நோட்டீஸ் பிரசுரங்களாக மாற்றிவிட்டது'' (22.12.2004, துக்ளக்) என்று போலீசு சொல்வதை அப்படியே ஏற்க முடியாது என்று தனக்கொரு நியாயம் பேசுகிறது ஆரியக் கைத்தடி.

போலீசு அத்துமீறலை உழைக்கும் மக்கள் கேள்வியின்றி ஏற்க வேண்டும் என்பதற்குப் புராணத்தையும், வேதத்தையும் பிட்நோட்டீசாக்கி நம்மிடம் விநியோகிக்கும் இந்த 'நடுநிலைவாதி'க்கு, கொலைகாரப் பாவிக்கு லாடம் கட்டாமல், குற்றச் செயல்களை வெளியிடுவதே அத்துமீறலாகப் படவேண்டிய அவசியமென்ன? திருமூலரைப் போல, இந்த சாலத்தனத்தைப் பார்த்து ''நாதம் ஏது? வேதம் ஏது? நற்குலங்கள் ஏதடா; வேதம் ஓதும் வேதியா விளைந்தவாறு பேசடா!'' என்று நாம் தான் ஏடு கிளப்பியாக வேண்டும்.

கருணாநிதி, புராணங்களை எடுத்துப் பேசினாலே, 'இந்துக்களை இழிவுபடுத்துகிறார்' என்று நூல்விடும் தினமலரோ, தான் ஏற்றிப் போற்றும் விண்ணகக் கடவுளே பூமிக்கு வந்தாலும் ஜெயலலிதா போலீசு பொய்வழக்கு போட்டுவிடும் என்று பயந்து ஒளிவதாகக் கேலிச் சித்திரம் வரைகிறது. (பார்க்க: தினமலர் கேலிச் சித்திரம்) ஏழு லோகத்தையும் ஆட்டிப் படைப்பதால் ஏற்றி விடும் கடவுளை கேவலம் போலீசின் லத்திக் கம்புக்குப் பயந்தவனாய்க் காட்டுவது மட்டும் இந்துக்களுக்கு இழிவில்லையா? ஏற்கெனவே, பிட்டுக்குப் பிரம்படி வாங்கிய பெருமான் உங்கள் சங்கரமட 'பிட்டுக்கு' மட்டும் முதுகைக் காட்டமாட்டானா என்ன? ''தனக்கு ஆதாயம் இல்லை என்றால் பார்ப்பான் கடவுளைத் தூக்கிப் போட்டு விடுவான்'' என்று பெரியார் சொன்னது 'பெரியவா' விசயத்தில் விளங்குகிறது.

கடவுளைக் கடாசுவது கூட ஒரு பக்கம் இருக்கட்டும். தெருவில் அல்லல் பட்டுக் காய் விற்கும் ஒரு கூடைக் காரியிடம் கூட எதற்கெடுத்தாலும் சட்டவாதம் பேசும் பார்ப்பனக் கும்பல் கருணாநிதியை நள்ளிரவில் கைது செய்த போது இரட்டை நாக்குப் பேர்வழி சோ, ''சட்டத்தில் அவ்வாறு இடமுண்டு'' என்று பேசியதோடு, ''மத்திய அமைச்சர் மாறனும், டி.ஆர். பாலுவும் கடமையைச் செய்த போலீசாரைத் தடுக்க முனைந்தனர்... இதையெல்லாம் சாதாரணக் குடிமகன் செய்தால் சட்டப்படி குற்றம்? ஆனால் மத்திய அமைச்சர்கள் செய்தால்? அப்படி ஓர் உரிமை அவர்களுக்கு எந்தச் சட்டத்தில் தரப்பட்டிருக்கிறது?'' (11.7.2001, துக்ளக்) என்று சட்டவாதம் பேசும் சட்டாம் பிள்ளைகள், காமக் கொடூரன் ஜெயேந்திரனை ஜாமத்தில் பிடித்த போது டி.வி.யில் குமுறும் அம்பிகள் வரை, ''இட் இஸ் ஹியூமன் ரைட்ஸ் வயலேஷன்... தாட்... பூட்..'' என்று தாண்டிக் குதிப்பது ஏன்? சட்டப்படி சங்கராச்சாரி முன்வராமல், ஆறுமணி நேரம் அண்டர்கிரவுண்ட் வேலை பார்த்தது ஏன்? சோவின் முட்டைக் கண்ணுக்கு இந்த முறைகேடு தெரியாத மர்மம் என்ன?

> **சட்டக் கல்லூரி மாணவர்கள் மீது தடியடி நடத்தியதை சரி என்கிறார் சோ. அப்படியென்றால் சம்மனை வைத்துக் கொண்டு அரெஸ்ட் செய்யப் போன போலீசிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சங்கராச்சாரியையும், சுற்றியுள்ள பார்ப்பனத் தடியர்களையும் சட்டப்படியே வெளுத்திருக்க வேண்டாமா?**

20.3.2002, துக்ளக், அட்டைப்படத்திலேயே (பார்க்க: படம்) - ''என்ன இது? பந்தோபஸ்து அமர்க்களப்படுதே! ஜனாதிபதி, கவர்னர், பிரதமர் யாராவது வராங்களா?'' ''அதெல்லாம் ஒண்ணுமில்லே! ஒரு தீவிரவாதியை கோர்ட்டுக்கு அழைச்சிகிட்டுப் போறாங்க'' என்று அரசியல்வாதிகளை 'சட்டப்படி' நடத்துவதையே நக்கலடிக்கும் சோ அம்பிக்கு ஒவ்வொரு வாய்தாவுக்கும் கோர்ட் வளாகத்தில் பார்ப்பனத் தடியர்களும், பாரதிய ஜனதாக் கொடியர்களும் ஜெயேந்திரனுக்குப் புடைசூழ வருவதும், டி.எஸ்.பி. போலீஸ் படை என்று வாகனங்கள் புடைசூழ வருவதும், காஞ்சிபுரத்து வழக்கறிஞர்களே ''இது என்ன கோர்ட்டா? மடமா?'' என்று விரட்டுமளவுக்கு இந்தக் காவி உடைப் பாவிகளுக்குக் களேபர பந்தோபஸ்து நடப்பது மட்டும் கேவலமாகப் படவில்லையே, ஏன்?

''கோவைச் சிறையில் இசுலாமியத் தீவிரவாதிகளுக்கு செல்போன்?'' என கட்டம் கட்டி எழுதியது தினமலர்; வேலூர் ஜெயிலில் ஜெயேந்திரன் விளக்கு, பூ, பழம், பூசை வரை போட்டதையும், 'சின்னவன்' சென்னைச் சிறைக்கு நெய்யில் வறுத்த பாதாம் பருப்பு வாளியை நகர்த்திக் கொண்டு போனதையும் எந்தச் சட்டம் அனுமதிக்கிறது? ஏன் அண்ணாசாலைப் பூணூலுக்கு இந்தச் செய்தி அகப்படவில்லை? இதுமட்டுமல்ல, ஈழ அகதிகளுக்கும் சிறையிலிருக்கும் போராளிகளுக்கும் ஒரு பால் டின் தந்தால் கூட 'போலீசில் சில 'மால்' ஆட்கள்! அபாயம்!' என்று அலறும் தினமலருக்கு, ஜெயேந்திரனுக்கு போலீசு காவலில் தொடங்கி வேலூர் சிறை வரைக்கும் செய்து கொடுக்கப்பட்ட சிறை வசதிகள் பற்றி கட்டம் கட்ட ஏன் கை வரவில்லை?

சிறையில் அடைக்கப்பட்ட புலிகளை மொட்டைத் தலை முருகன் என்றெல்லாம் கேவலப்படுத்திய அவாள், 'மொட்டைத் தலை' விஜயேந்திரனையும், 'ஊத்தை வாய்' ஜெயேந்திரனையும் பற்றி மற்ற பத்திரிக்கைகள் செய்தி வெளியிடுவதைப் பற்றி மட்டும், ''சங்கராச்சாரியாரின் பெயரையும், மடத்தின் மதிப்பையும் நாசம் செய்துவிட வேண்டும் என்ற முனைப்பில் - தங்கள் செயல்பாடுகள் பெண்கள் பலரை அவமானப்படுத்துவதில் முடிகிறது என்பதைப் பற்றிக் கூட போலீசாரும், பத்திரிக்கை உலகமும் கவலைப்படவில்லை'' (22.12.2004, துக்ளக்) என்று அங்கலாய்க்கிறார்கள். ''வேலைக்குப் போகும் பெண்களிடம் 'சுத்தம்' கியைடாது'' என்று ஜெயேந்திரன் உழைக்கும் பெண்களை இழிவுபடுத்தியபோது நியாயம் பேசாத சோவும், தினமலரும் அனாதைப் பார்ப்பனச் சிறுமிகளையும் விட்டு வைக்காத அயோக்கிய மடாதிபதிகளுக்கு ஆஜராவது ஏன்?

### சூத்திரர் என்றால் தோலை உரி பார்ப்பான் கொன்றால் மனித உரிமை!

''நள்ளிரவில் சென்று கைது செய்திருக்கக் கூடாது என்ற அபிப்ராயமும் பேசப்படுகிறது'' (24.11.2004, துக்ளக்) என்று பேசும் சோ, சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் போலீசு தடியடி நடத்தியதைப் பற்றிய கேள்விக்கு - ''அந்தச் சூழ்நிலையில் அது தேவைப்படவில்லை என்று எப்படி நிச்சயமாக கூறுவது? அந்தத் தடியடி நடக்கவில்லை என்றால்

www.padippakam.com

பெரும் கலவரமே கூட வெடித்திருக்கலாம்..'' என்று மாணவர்கள் மீது தடியடி நடத்தியதைச் சரி என்கிறார். அப்படியென்றால் சம்மனை வைத்துக் கொண்டு அரெஸ்ட் செய்யப் போன போலீசிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சங்கராச்சாரியையும், சுற்றியுள்ள பார்ப்பனத் தடியர்களையும் சட்டப்படியே வெளுத்திருக்க வேண்டாமா? சோவின் 'எச்சரிக்கை' மூளை இந்த விசயத்தில் இயங்காதது ஏனோ?

இது மட்டுமல்ல. வீரப்பனுக்கு உதவியதாக சந்தேகத்துக்கு உள்ளான மலைவாழ் மக்களை சிறை, சித்திரவதை, பாலியல் கொடுமைகளை இழைத்து மைசூர் சிறையில் வாட்டியபோதும், குறிப்பாக, பல மலைவாழ் பெண்களைப் பாலியல் வன்புணர்ச்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தேவாரத்தைப் பாராட்டி, ''வீரப்பனைப் பிடிப்பதிலும் ஒரு புதிய தீவிரம் காட்டப்பட்டு வருகிறது. தேவாரத்தின் நியமனம் முன்பு பணியாற்றிய விஜயகுமார் என்ற போலீசு அதிகாரிகளின் நியமனம் ஆகியவை முனைப்புக்கு அத்தாட்சிகளாகத் தெரிகின்றன.'' (20.6.2001, துக்ளக்), என்று போலீசு நடவடிக்கைக்குத் தோரணம் கட்டிய பார்ப்பன சோவும், பிஜேபி கும்பலும், காஞ்சி மாவட்ட எஸ்.பி.யாக பிரேம்குமார் நியமிக்கப்பட்டவுடன் சங்கராச்சாரியை அவர் விசாரித்ததால், அவர் ஏற்கெனவே மனித உரிமை மீறியவர் என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

போலீசுக்கும் மனித உரிமைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது ஏழை மக்களுக்குத் தெரியும். ஆனால் மனித உரிமை பற்றி வாய்கிழியும் வக்கிரக் கண்ணன் சோவோ, வீரப்பன் வேட்டையில் நடந்த அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்களுக்காக என்ன சொல்கிறார்?: ''அநியாயம் நடந்துவிட்டது என்று குற்றம் சாட்டுகிற மனித உரிமைக்காரர்களிலிருந்து பலரும்.... மற்றபடி இதற்கு எந்த விதமான அங்கீகாரமும் கிடையாது. சுயவிளம்பர விசாரணைக் குழுக்கள் அளிக்கும் முடிவுகள் யாரையும் கட்டுப்படுத்தவும் செய்யாது. பத்திரிக்கைகள் அளிக்கிற முக்கியத்துவம், ஒரு பிரச்சார உத்தியை, நியாயத் தீர்ப்பாக மாற்றி விடாது'' என்ன ஒரு வக்கிரம்? நடந்தவைகளைப்




பற்றிச் சொல்வது உத்தியாம், பிரச்சாரமாம்!

''தர்மபுரியில் நக்சலைட் சிவா சுட்டுக் கொல்லப்பட்டதில் மனித உரிமை மீறல் உள்ளது என்று மனித உரிமை அமைப்பினர் குற்றம் சாட்டியுள்ளது பற்றி?'' என்ற கேள்விக்கு (18.12.2002, துக்ளக்) ''தீவிரவாதிகளையும், குற்றவாளிகளையும், சமூக விரோதிகளையும் மட்டுமே மனித உரிமைக்காரர்கள் மனிதர்களாகக் கருதுகிறார்கள். அவர்களால் பாதிக்கப்படுகிற அப்பாவிகளை மனிதர்களாகக் கருதுவதே இல்லை. அதனால்தான் இந்த மாதிரி வக்கிரமான புகார்கள் வருகின்றன'' — இது சோவின் பதில்.

சுட்டுக் கொல்லப்பட்டதற்கு விளக்கம் இல்லை. பொத்தாம் பொதுவாக இறந்தவர் மேலேயே தீர்ப்பை வக்கிரமாக எழுதும் இந்த 'அப்பாவி'தான் சுந்தரேச அய்யர், ரகு அய்யர் மீதெல்லாம் குண்டர் சட்டத்தில் வழக்கு போட்டது சரியா என ஆராய்ச்சி செய்கிறது. மேலும், ''சங்கராச்சாரியார் வாக்குமூலத்தை போலீசு காவலில் பதிவு செய்த போது அது வீடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படி வீடியோவில் பதிவு செய்ய போலீசார் நீதிமன்ற அனுமதியைப் பெற்றார்களா? போலீசு தன்னிச்சையாக வீடியோ எடுக்கும்போது அதை அவர்கள் சௌகரியத்திற்கு ஏற்ப எதுவும் செய்யலாம்.'' (15.12.2004, துக்ளக்) என்று துருவி ஆராய்கிறது.

இப்படி, அவாளுக்கென்றால் சட்டத்தையும், போலீசையும் நம்ப முடியாது; சாதாரண ஆளாய் இருந்தால் தகவல் தர மறுத்தாலே நீயும் ஒரு தீவிரவாதி என்று முத்திரை குத்தும் பொடா என்ற சட்டத்திற்கும், போலீசுக்கும் இதே சோ காவடி தூக்குகிறார்: ''தீவிரவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில், பொதுவாக என்ன நடக்கிறது? கைது நடக்கிறபோது ஓரிரு விதிமுறைகள் மீறப்பட்டன என்பதைக் காட்டி கைதே சட்டவிரோதமானது என்று வாதிடப்படும்... பயங்கரவாத தடுப்புச் சட்டமே கூடாது என்றால் நாட்டில் எந்த விதிமுறையும் இருக்க முடியாது.'' (7.11.2001, துக்ளக்). இப்படி எவனாயிருந்தாலும் தகவல் தராவிட்டால் தப்புதான் என்று தாவிக் குதிக்கும் பார்ப்பனக் கும்பல் சுதேசி ஜாக்ரண் மஞ்ச் குருமூர்த்தியிடம் விசாரணை மேற்கொண்டவுடனே 'ஏன் அடிக்கடி போலீசு விசாரணை?' என்று ஒரு சின்ன விசாரணைக்கே அண்ட சராசரத்திலும் அண்டர் கிரவுண்ட் வேலை ஆரம்பித்து விட்டது. குஜராத் பெஸ்ட் பேக்கரி வழக்கில் ஜஹீரா ஷேக் பின் வாங்கியதை வைத்துக் கொண்டு

தான் போற்றும் கடவுளே பூமிக்கு வந்தாலும் ஜெயலலிதாவின் போலீசு பொய்வழக்குப் போடும் என்று பயந்து ஒளிவதாகக் கேலிச் சித்திரம் வரைகிறது தினமலர். இது மட்டும் இந்துக்களை இழிவுபடுத்துவதில்லையா?



www.padippakam.com

"யார் சொல்வது உண்மை? ஜஹீரா ஷேக் மீண்டும் தனது சாட்சியத்தை மாற்றமாட்டார் என்பது என்ன நிச்சயம்? ....ஒருவேளை பொய் சொல்கிற உரிமையும் மனித உரிமைகளில் ஒன்றோ, என்னவோ!...." (17.11.2004, துக்ளக்) என்று வக்கணை பேசுகிறது. ஆனால் "கதிரவனும், சின்னாவும் மீண்டும் பல்டியடிக்க மாட்டார்களென்பது என்ன நிச்சயம்?" என்று துக்ளக் எழுதுமா?

தெருவில் ஒரு கிரிக்கெட் பந்து தொலைந்தாலே "கூப்பிடுறா போலீசை" என்பதுதான் பார்ப்பனர்களின் பொதுப்புத்தி. இன்று நேற்றல்ல, வரலாறு நெடுக. அரசனின் காவல் படையை வைத்துக் கொண்டே பிற சாதி மக்களை, குறிப்பாக, உழைக்கும் மக்களை ஒடுக்கிய கும்பல் பார்ப்பனக் கும்பல். தனது அதிகாரம் செல்லாத போது புஷ்யமித்திரனைப் போல தானே 'பிரம்ம சத்திரியனாகி' போர்த் தொழில் புரிந்ததும், பிற மக்களிடமிருந்த வளங்களைப் பிடுங்கித் தின்றதுமே வரலாறு.

கபிஸ்தலம் அருகே உத்தமதானபுரம் என்ற ஊருக்கு சரபோஜி வம்ச மன்னர் வந்தபோது வெற்றிலை பாக்கு போட்டானாம். ஏகாதசியில் தாம்பூலம் போட்டது மன்னனுக்கு நல்லதல்ல என்றும், இதற்குக் கழுவாயாக, "அங்கே ஓர் அக்கிரகாரத்தை அமைத்து 48 வீடுகளைக் கட்டி, இரண்டு வீடுகளுக்கு ஒரு கிணறு வைத்து, 48 பிராமணர்களை வருவித்து ஒவ்வொருவருக்கும் 12 'மா' நன்செய்யும், புன்செய்யும் தானம் தந்தால் பாபம் நீங்கும்" என பார்ப்பனக் கும்பல் கதை கட்ட, படை கொண்ட மன்னன் நடுநடுங்கி அவ்வண்ணமே இந்த "பிராம்மண உத்தமர்களுக்கு"த் தானம் செய்ததால் உத்தம தானபுரம் என்ற ஊரையே கொள்ளை அடித்தது பழைய வரலாறு.

பாவத்தின் கழுவாயாக இப்போது இந்த அம்மா தரப்போவது எத்தனை 'மா' நிலமோ? திரும்பத் திரும்ப, மற்றவர்கள் வெற்றிலை போட்டாலும், வெறும் வாயை அசைத்தாலும் கூட பாவம்! தானமாகவும், தாக்குதலாகவும் பிறரைக் கழுவிலேற்றியும், தனக்கென்றால் கழுவாய் தேடியும் ஆதாயம் தேடுவதும் அடுத்தவனை ஒடுக்குவதும் பார்ப்பன வரலாறு.

பஸ் ஊழியர் போராட்டத்தின் போது கூட, சோ, "போனஸ் பிரச்சினைக்காக முழு அடைப்பு தேவையா?" என்ற கேள்விக்கு, "இந்த ஸ்டிரைக்கிற்குத் தேவை - முழு அடைப்பு அல்ல - முழு உடைப்பு" (5.12.2001, துக்ளக்) என்று போலீசு தாக்குதலை ஏவிவிட்டும், இன்னொரு சந்தர்ப்பத்தில், "அரசுப் பணியில் கண்மூடித்தனமாகப் பலர் சேர்க்கப்படுவது என்று பல வருடங்களாக நடந்து வருகிறது. இந்த நிலையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கதே" (19.12.2001, துக்ளக்) என்று அரசுப் பணி ஆட்குறைப்புக்கு அரசு நடவடிக்கையை வரவேற்றும் வால் பிடிக்கிறார்.

தவிர, அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் குற்றவாளிகளாக அரசுத் தரப்பு வக்கீல் பேசியபோது, ஆகா ஓகோ என்று ரசித்த சோவின் பார்ப்பனக் காதுகளுக்கு ஜெயேந்திரன் விசயத்தில் மட்டும் "ஜெயேந்திரர் மிக மோசமான கிரிமினல்" என்று அரசு வழக்கறிஞர் கூறிய உடனே நாராசமாய் இருக்கிறது. பிராசிக்யூசன் வக்கீல், குற்றம் சாட்டப்பட்டவரின் நடத்தை பற்றி இறங்கலாமா என்று கேட்டு, "பப்ளிக் பிராசிக்யூட்டரின் கடமை - ஒரு விளக்கம் (15.12.2004, துக்ளக்)" என்று கட்டுரையே வரைந்து விட்டார்.

இப்படி, பஸ் ஊழியர் தொடங்கி, சாலைப் பணியாளர், சத்துணவுப் பணியாளர், ரேசன் கடைப் போராட்டம் என்று பல பிரிவு மக்கள் போராடும் போதெல்லாம் "போட்டு மிதி" என அரசை ஏவிவிடுவதே இந்தப் பார்ப்பனக் கும்பலின் வாடிக்கை.

வரலாறு நெடுக, மனித உரிமைக்கு முதல் எதிரி பார்ப்பனியமே:

- *சுரங்கத்திற்குள் போன பழனி போகர் திரும்ப வரவேயில்லை;*
- *அறைக்குள் சென்ற வள்ளலார் 'ஜோதி' மயமானார்;*
- *சிவனைப் பார்க்கப் போன நந்தனாரின் சவம் கூடத் திரும்பவில்லை;*

அனைவரையுமே ஆண்டவன் ஆட்கொண்டதாகப் பார்ப்பனர்கள் கூறுகிறார்கள். திரும்பத் திரும்ப நம் முன்னே நமக்கெதிராகப் பிரசன்னமாகிக்கொண்டிருக்கும் ஜெயேந்திரன் உள்ளிட்ட பார்ப்பனக் குற்றக் கும்பலை 'ஆட்கொள்ளும்' திறமை அந்த ஆண்டவனுக்கு வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம்; உழைக்கும் வர்க்கத்திற்குக் கட்டாயம் உண்டு.

**• துரை. சண்முகம்**

**"புதிய கலாச்சாரம்" உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி 8-இன் படி)**

| | |
|---|---|
| 1. வெளியிடும் இடம் | : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31. |
| 2. வெளியிடும் காலம் | : மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| முகவரி | : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், 63, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : வி. வல்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| முகவரி | : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31. |
| 5. ஆசிரியர் பெயர் | : வி. வல்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| முகவரி | : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31. |

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2005

(ஒ-ம்) வி. வல்லபேசன்.
வெளியிடுபவர்.

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (ஏப்'05) முடியும் சந்தா எண்கள்:**

**484, 751, 839, 844, 848, 858, 860, 861, 863, 864, 865, 866, 869, 999, 1012, 1125**

**அடுத்த இதழுடன் (மே'05) முடியும் சந்தா எண்கள்:**

**36, 126, 201, 204, 211, 236, 268, 493, 504, 506, 572, 578, 611, 872, 873, 874, 878, 879, 881, 882, 883, 884, 885, 888, 890, 892, 894, 901, 941, 955, 973, 977, 1270**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com





# பொம்பளை

சுனாமி பேரழிவுக்குப் பிறகு பட்டி னப்பாக்கம் பகுதியை அமைதி சூழ்ந்து கொண்டிருந்த ஒரு நாளின் மாலை; காற்றின் அசைவு கூட இன்றி அமைதி யாக இருட்டிக் கொண்டு வரும் மாலை. ஏனோ வானம் கொஞ்சம் மூட் டம் போட்டிருந்தது. கரையோரங்களி லிருந்து வெளியேறிய மக்கள் சாலை ஓரங்களிலும், சர்ச்சுகளுக்குள்ளும், தேநீர்க் கடைகளுக்கு அருகாமையி லும் கூட்டம் கூட்டமாய் ஒதுங்கியிருக் கிறார்கள். நான் கடற்கரையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன். தற்செய லாகத் திரும்பினேன். எனக்கு வலப்பக் கம் சாலையில் ஒரு பெண் நடந்து கொண்டிருக்கிறாள். இன்னொருமுறை திரும்பிப் பார்க்க வைத்த பெண்.

சுடிதாரின் துப்பட்டாவை இடுப் பில் இறுக்கிக் கட்டி நெஞ்சை நிமிர்த் திக் கொண்டு அவள் எடுத்து வைக்கும் அடிகள் அழுத்தமும், அதிர்வும் ஏற்ப டுத்துபவைகளாக இருந்தன. கைகால்க ளிலிருந்த உடைகளை வேகமாக மேல் நோக்கிச் சுருட்டி விட்டுக் கொண்டும், குனிந்து கைகளை படார், படார் என்று துடைகளில் அறைந்து கொண்டும் நடந்தாள். ஏதோ சில கோபமான வார்த் தைகள் தெளித்துக் கொண்டிருந்தன. அவளுடைய உயரம் நிச்சயமாக ஆறடி இருக்கும். கருத்த நிறம், கூர்மை யான மூக்கு பின்னிய கயிறு போன்ற நீண்டு தொங்கும் குதிரைச் சடை. அணிந்திருந்த சுடிதார், ஒரு ஆண் பேண்ட் சட்டை போட்டதைப் போலி ருந்தது. எலும்புகளாலான உடம்பு. ஆனால் இரும்பு போன்ற எலும்புகள், கைகளிரண்டும் வீச்சரிவாள் போல நீண்டு தொங்கிக் கொண்டிருந்தன. அவளுக்குப் பின்னால் வாலைப் போலத் தொடரும் இரண்டு குட்டிக் குழந்தைகளும் அவளுக்கு இணை யான வேகத்தில் வளைந்து துருதுரு வென்று நடந்து கொண்டிருக்கிறார்கள். அவள் நின்றதும் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். அலை ஓசையைத் தவிர சுற்றிலும் அமைதி.

அமைதியைக் குலைக்கும் விதமாக வந்தது அந்தச் சத்தம். சாலையின் வலப்பக்கமாக நடந்து கொண்டிருந்த அவளுக்கு பின்னாலிருந்து வெறித்தன மாய்க் கத்திக் கொண்டே வேகமாய் வந்த ஒருவன் வந்த வேகத்தில் அவள் மீது பாய்ந்து இரண்டு கையாலும் அவ ளுடைய குதிரைச் சடையை பிடித்து வட்டமாகச் சுழற்றினான். தலை கிறு கிறுக்கும்படி தரையில் பல சுற்று சுற்றி விட்டு பிறகு நேராக நிறுத்தி வைத்து அடி வயிற்றில் ஓங்கி ஒரு உதை விட்டான்.

அவளிடமிருந்து எந்தச் சத்தமு மில்லை. வயிற்றைப் பிடித்துக் கொண்டு நின்ற இடத்திலேயே உட் கார்ந்து விட்டாள். பிறகு ஏதோ திட்டி னாள். குழந்தைகள் இரண்டு பேரும் அவளை மிரண்டு போய்ப் பார்த்தார் கள். பிறகு அவள் பின்னால் போய் நின்று கொண்டார்கள். அவள் அடி வாங்கி நிலை குலைந்து போயும் குழந் தைகள் அழவில்லை. அவளும் வயிற் றைப் பிடித்து வலியை அடக்கிக் கொண்டாள்.

அடுத்த கணமே சற்றும் எதிர்பார்க் காதபடி வேகமாக எழுந்தவள் ஒரே பாய்ச்சலில் அவனுடைய சட்டையைச் சுருட்டிப் பிடித்தாள். ஒரு கை சட் டையைப் பற்றியிருக்க, மறுகையால் அவனுடைய வயிற்றிலும் மூக்கிலும் மாறிமாறிக் குத்தினாள். அவளுடைய நீண்ட கைகளின் வேகமான வீச்சு அவ னுடைய உடம்பில் கனமாக இறங்கி யது. இடைவிடாமல் குத்தியதில் நிற்க முடியாத நிலையில் துவண்டவனை கீழே தள்ளிவிட்டு இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு மூச்சிரைக்க நின்று திட்டிக் கொண்டிருந்தாள்.

சிறிதுநேர அமைதிக்குப் பிறகு மீண்டும் கத்திக் கொண்டே எழுந்தவன் வேகமாக அவளை நெருங்கி இரண்டு கைகளையும் பிடித்து முதுகுக்குப் பின் னால் வைத்துக் கொண்டு முரட்டுத்தன மாக முறுக்கினான், முறுக்கிய நிலையி லேயே வைத்துக் கொண்டு நடு

www.padippakam.com

முதுகிலேயே ஓங்கி ஓங்கிக் குத்தினான். அவள் தாங்க முடியாத வலியால் பச்சை பச்சையாகத் திட்டிக் கொண்டே கத்தினாள். அவனோ எதையும் கண்டு கொள்ளாமல் வெறி பிடித்தவன் போலப் பல்லைக் கடித்துக் கொண்டு மீண்டும் மீண்டும் குத்திக் கொண்டேயிருந்தான்.

அவள் உடலை ஒரு சுழற்று சுழற்றி தன் கைகளை விடுவித்துக் கொண்டாள். என் முகத்தில் 'சப்' பென்று துப்பியது போலிருந்தது. விடுபட்ட அதே வேகத்தில் அவனைக் கீழே தள்ளியவள் வயிற்றிலேயே குடல் கூழாகும் படி மிதிமிதியென்று வெறி தீரும் வரை மிதித்துத் தள்ளினாள். மீண்டும் எழமுயன்றவனை நிமிர்த்தி வைத்துக் கொண்டு தன் காலுடைகளை மேலே சுருட்டி விட்டுக் கொண்டாள், பிறகு அவனுடைய நடு நெஞ்சிலேயே ஓங்கி ஒரு உதைவிட்டுவிட்டுக் கராத்தே வீரர்கள் நிற்பது போல ஒரு காலை முன்னாலும், பின்னாலும் அதே போல கைகளையும் வைத்துக் கொண்டு நின்றாள். கூட்டம் இரண்டு பேரையும் சுற்றி பாதுகாப்பு வளையம் போல வட்டமாகக் கூடிவிட்டது.

அரசுக் குடியிருப்புகளின் மாடிகளில் நின்றுகொண்ட வாய் பிளக்கப் பார்த்துக் கொண்டிருந்த குடும்பப் பெண்மணிகள் அதிர்ச்சியால் மிரண்டு போயிருந்தார்கள். இருவருக்கும் என்ன பிரச்சினை - ஏன் சண்டை என்று கூட அறிந்து கொள்ள முடியவில்லை. அவனை யாரும் இப்படி அடித்து விட முடியுமா என்றெண்ணி எல்லோரும் மலைப்பாகப் பார்த்தனர். கீழே விழுந்தவன் அதே நிலையில் அசைவின்றிக் கிடந்தான். அவனை வாய் ஓயுமளவுக்குத் திட்டித் தீர்த்துவிட்ட பிறகு கலைந்து போயிருந்த தலைமுடியை வாரி முடிந்து கொண்டாள் அப்பெண். பிறகு அவனை அலட்சியமாக ஒரு எத்து எத்தி விட்டு நகர்ந்தாள். குழந்தைகளும் ஓடிப் போய் அவளோடு ஒட்டிக் கொண்டு நடந்தன.

காற்று வேகமாக வீசியதில் சாலைப் புழுதியும் பழைய குப்பைகளும் சுழன்றடித்தன. லேசான தூறலும் விழுந்து கொண்டிருந்தது. தரையில் கிடந்தவன் அசைந்தான். எதையோ எதிர்பார்த்து நின்ற கூட்டம் நகரவில்லை. கண்களைத் திறந்து பார்த்து விட்டு மீண்டும் அதேநிலையில் கிடந்தவன் சில நொடிகளில் எழுந்தான். சுற்று முற்றும் பார்த்துவிட்டு சாலை



யின் மூலையில் கொட்டிக் குவிக்கப் பட்டிருக்கும் கருங்கற் குவியலை நோக்கி நடந்தான். குனிந்து கைகளுக்கு அடக்கமும் கனமுமான ஒரு கருங்கல்லை தேடி எடுத்தான். பிறகு அவளை நோக்கிக் கத்திக் கொண்டே ஓடினான்.

அங்கிருந்து சற்று தூரம் கூட கடந்திடாதவள் சத்தம் கேட்டுத் திரும்பினாள்; அவன் கல்லுடன் நிற்பதைக் கண்டு தயங்கித் தயங்கி முன்னால் வந்தாள். அவன் அடிக்கப் போவது போல கைகளை உயர்த்தி ஓங்கியதும் குழந்தைகளைத் தனக்குப் பின் மறைத்தபடி மேலும் முன்னே வந்து நின்றாள்.

''தோ பார் நீ ஆம்பளின்னா ஒத்தக்கி ஒத்த நில்லு். ''பொட்ட மேரி கல்லெடுத்துனு வர்றாத'' என்று கைகளால் மார்பில் அறைந்து கொண்டு சவால் விட்டாள்.

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவளை நெருங்கியவன் அடிப்பதற்கு வாகாக மிக அருகிலேயே நின்று கொண்டு அவருடைய கண்களுக்குக் கீழேயும் மூக்குக்கு மேலேயுமான நடு இடத்தில் வசமாக கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஓங்கி ஒரே இறுக்காக இறுக்கி விட்டான். ''சத்'' என்ற ஒரே ஒரு சத்தம் தான், கூழுக்குள் கல்லைப் போட்டால் விலகுவது போல கருங்கல்லின் கூர்மை சதையை பிளந்து கொண்டு இறங்கியது.

கூட்டம் எவ்வித அதிர்ச்சிக்கும் ஆட்படாமல் அதேபோல பார்த்துக் கொண்டிருந்தது. இவ்வளவு பேரில் யாருக்குமே தடுக்க மனம் வரவில்லையா, இப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களே. அடுத்த கணமே அவன் ஓடிவிட்டான்.

கைகளால் முகத்தைப் பிடித்தபடி உட்கார்ந்தவளின் வேதனை முகக் கோணலிலும், லேசான அனத்தலிலும் மட்டுமே தெரிந்தது. கண்கள் லேசாகக் கலங்கியிருந்தாலும் சொட்டுக் கண்ணீர் கூட வெளியேறவில்லை. குழந்தைகளும் விழித்தபடி கூட்டத்தையும் அவளையும் பார்த்தனவே தவிர அழவில்லை. நானும் கூட்டத்தோடு கூட்டமாய்க் கலந்திருந்தேன். இந்தக் குழந்தைகளுக்கு அழவே தெரியாதா என்று அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

இரண்டே நிமிடம்தான் அவளுடைய அமைதி, பிறகு கடுங்கோபத்தோடு எழுந்தவள் ஊற்றைப் போல் பெருக்கெடுக்கும் இரத்தத்தை வழித்து வழித்து உதறினாள், முகத்தில் கைகளைக் கொண்டு காயத்தை தொடும் போது வெள்ளைச் சதை வெளியே தொங்கியது. பொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தாமல் எப்படி இவளால் கல்லைப் போல் இருக்க முடிகிறது?

தொடர்ந்து காயத்திலிருந்து வெளியேறி முகத்தின் வழியே இறங்கும் இரத்தத்தால் அவளுடைய பற்களெல்லாம் சிவப்பாகிப் போயிருந்தன. இரண்டு கைகளிலும் உள்ளங்கையிலிருந்து முழங்கை வரை இரத்தம் நீளமான கோடுகளை இழுத்திருந்தது. சுற்றிலும் தெறித்து விழுந்த இரத்தத் துளிகள் குழந்தைகளின் முகத்திலும் தெளித்திருந்தன. இரத்தங்கலந்த எச்சிலைக் காறித் துப்பிவிட்டு எழுந்தவள், அவன் ஓடிய பக்கம் ஓடினாள்.

அம்மா அருகில் இல்லை என்றாலே அழத் துவங்கி விடும் குழந்தைகளைப் போல அவர்கள் அழவில்லை, ஏதோ புரிந்து கொண்டதைப் போல அமைதியாகி நின்றார்கள். ஓடியவள் சில நிமிடங்களிலேயே கோபமாகத் திட்டிக் கொண்டே திரும்பி வந்தாள்.

''பொட்ட பாடு பையா, நீ சீனிவாசபுரத்துக்கு வராமலா பூடுவ. வா உனுக்கு அங்க வச்சிக்கிறேன்'', ''ஆம்பிளியாடா நீ கல்லெடுத்துனு அடிக்கிறயே தூ, பாடையில பூடுவ நீ'' என்று மீண்டும் காறித் துப்பிவிட்டு உடைகளைச் சரிசெய்து கொண்டாள். பிறகு உட்கார்ந்து குழந்தைகளின் முகத்தில்

www.padippakam.com

உட்கார்ந்து குழந்தைகளின் முகத்தில் தெறித்திருந்த இரத்தத் துளிகளைத் துடைத்து விட்டு அவளைத் திட்டிக் கொண்டே நடந்தாள். நான் அங்கேயே நின்று கொண்டிருந்தேன். இப்போது கூட்டம் ஓரளவு கலைந்து போயிருந்தது. அவள் பக்கம் எந்தக் குற்றமிருப்பதாகவும் உணரமுடியாமல், அவள் பக்கம்தான் ஏதோ நியாயம் இருப்பதாகவும் நினைத்து மீதிக் கூட்டம் மனம் கனத்து நின்றது.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று இதுவரை சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த நான்கைந்து பேர் கொண்ட கும்பலிலிருந்த ஒருவன், ''யார்ரா அவ, அவ பாட்டுக்கும் அட்சினு போயினேருக்கா, கொரலுக்குடு அவளுக்கு'' என்றான். உடனே கும்பலிலிருந்த இன்னொருவன் பலமாகக் கையைத் தட்டி கத்தினான். ''ஏய்... இங்க வாம்மே'' அந்தக் கும்பல் நன்றாக குடித்திருந்தது. அவர்களில் சிலருக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. ஆடி ஆடி நேராக நிற்க முயன்று கொண்டிருந்தார்கள்.

போய்க் கொண்டிருந்தவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.


''ஒன்னத்தாம்மே, இங்க வா'' என்று கத்தினான்.

''இன்னா'' என்றபடி அங்கேயே நின்று கொண்டு கேட்டாள்.

''இன்னாவா'' என்றபடி அவளை நோக்கி நடந்தவர்கள், ''இன்னா இன்னான்ற, அறிவில்ல உனக்கு, யார் மேலன்னா கல்லு பட்டிச்சின்னா இன்னா பண்ணுவ'' என்றான். அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் இன்னமும் லேசாக வழிந்து கொண்டேதானிருந்தது. அதைத் துடைத்துவிட்டுக் கொண்டே சொன்னாள்.

''ஐய நானா மொதல்ல கல்லெடுத்துனு அட்சேன், என்னான்ட கேக்குற, அவன போயி கேளு'' என்று சாதாரணமாகக் கூறிவிட்டுக் கிளம்பினாள். உடனே கூட்டத்திலிருந்த இன்னொருவன் ''நீதாண்டி மொதல்ல கல்லெடுத்துனு அட்ச, பொம்பளியா நீ பஜாரி, பஜாரி'' என்றான். நடந்தவள் வேகமாகத் திரும்பி ''தோ பார் வாடி போடின்றதெல்லாம் ஒன் வீட்டாண்ட வச்சிக்க. என்னான்ட வாணாம் மர்ரியாத்த கெட்டுடும்'' என்றாள். அம்பு போன்று வந்த அவளுடைய வார்த்தைகளைச் சீரணித்துக் கொள்ள முடியாத கும்பல்,

''ங்கோத்தா பொம்பளன்னு பாத்துனுகீறோம். மொவளே அட்சா கண்ணுமுழி பேந்துடும். எங்கள இன்னா ஒம் புருசன் மாரி பொட்டப்பயன்னு நெனச்சினியா போடி... போடின்னா...'' என்று அடிக்கப் பாய்ந்து கொண்டு வந்தார்கள். அவள் பாதுகாப்பாக கைகளை முகத்துக்கு குறுக்கே வைத்துக் கொண்டாள். அந்தக் கும்பலைச் சிலர் தடுக்கவும் அமைதியானது. பிறகு கூட்டத்திலிருந்த சிலர் ''இன்னாம்மா நீ பொம்பளியாட்டமா கீற பத்ரகாளியாட்டம் ஆடுறியே'' என்றார்கள். அந்த நிலையிலும் அவள் அதைக் கிண்டல் செய்தாள். ''இன்னாது? அப்போ பத்ரகாளி



பொம்பள இல்லியா இன்னா'' என்றாள்.

''எப்பா, பொம்பளைக்கு இருந்தாலும் இவ்ளோ வாயி இருக்கக் கூடாதுப்பா'' என்றும். ''என்னா திமிரா பேசுறா'' என்றும் திட்டினார்கள். மீண்டும் குடிகார கும்பலிலிருந்த ஒருவன், ''பொம்பளியா இவ பஜாரி... பஜாரி ஆம்பளிய அடிக்கிறாள்னா இன்னா கொயுப்புடா இவளுக்கு'' என்றான். நெருப்பாய் தகித்துக் கொண்டு கிளம்பும் அத்தனை ஓங்கிய குரல்களுக்கும் மத்தியில் அவள் குரல் சற்று கம்மிப் போயிருந்தது.

''யோவ் இன்னாய்யா பெரிசா நாயம் பேசுற? அவன் என்ன அட்சான், நானும் அட்சேன், உங்களுக்கு இன்னாத்துக்கு இம்மாங்காண்டாக்கீது.'' அவள் பேசி முடித்த அடுத்தகணமே குடிகார கும்பலிலிருந்த ஒருவனுக்கு கடகடவென்று சூடு மண்டைக்கு ஏறி விட்டது.

''ங்கொம்மாள இன்னாடி உனுக்கு இவ்ளோ திமிரு, தேவிடியா வுட்டா எங்களியே அட்சிடுவ போலிருக்கே'' என்று கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வேகமாகப் பாய்ந்து காயம்பட்ட இடத்திலேயே முட்டியைக் குவித்து ஓங்கி ஒரு இறக்கு இறக்கினான்.

அய்யய்யோ... எம்மாஆ... என்று வீறிட்ட அவளுடைய அலறல் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த உணர்ச்சிகளை மொத்தமாகக் கட்டவிழ்த்து விட்டது, அழுகை பீறிட அப்படியே தரையில் விழுந்தாள். உப்புக் காற்றில் உறைந்து கொண்டிருந்த இரத்தம் சூடாகி மறுபடி வெளியேறி முகம் முழுவதும் வழிந்தோடியது. அழுகை அவளுடைய கட்டைக் குரலிலிருந்து வெறித்தனமாக வெளிப்பட்டு ஒலித்தது. அவள் யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. விரிந்த தலைமுடியும், சிவப்புச் சாயத்தில் முக்கி எடுத்தது போல முகமும் தோற்றத்தைப் பயங்கரமாக்கியிருந்தது.

முதுகு குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். முகத்திலிருந்து இரத்தமும், உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டை இழந்து சுரக்கும் கண்ணீரின் கரிப்பும் கலந்து ஓடி தரை மணலில் விழுந்து நிலத்தைச் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. மழை நின்ற பிறகு குடிசையிலிருந்து சொட்டும் நீரைப் போல கொட்டிக் கொண்டிருந்தது இரத்தம். அவள் துடைத்து விட்டுக் கொள்ளவில்லை.

அடித்துவிட்டுப் போனவர்களை வெறிகொண்டு வாங்கடா என்று அழைப்பது போல ஆவேசத்துடன் அழுதாள். அம்மாவின் அழுகையைப் பார்த்தவுடன் குழந்தைகளும் அலறி அழ ஆரம்பித்தன. அழுகையானாலும் அவர்கள் குரல் நிற்கவே இல்லை.

குழந்தைகளுடைய முகத்தில் தெறித்திருந்த இரத்தத் துளிகளை துடைத்து விட்டபோது அவள் முகத்தில் இரத்தம் இழுத்து விட்டிருந்த சிறு சிறு கோடுகளின் வழியே கண்ணீர் வழிந்தோடியது. அதை தங்களுடைய பிஞ்சுக் கரங்களால் துடைத்து விட்டுக் கொண்டே அந்தக் குழந்தைகள் அழுதன.

● பாண்டியன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05




# ஒரு சுனாமி

இப்பொழுதெல்லாம் சுனாமி பற்றிய நிகழ்ச்சி எதுவானாலும் பிறந்த நாள் கேக் வெட்டும் 'மூடில்' கலந்து கொள்கிறார் 'நமது நடிகரும் மாபெரும் மனிதாபியுமான' விவேக் ஓபராய். அப்படி அவர் பிப்ரவரி 15-இல் ஆஜரானது, ஓவியர் ரமேஷ் சென்னை லலித்கலா அகாடமியில் நடத்திய சுனாமி நிவாரண நிதிக்கான ஓவியக் கண்காட்சி திறப்பு விழாவில். அநேகமாக ஓவியர் ரமேஷ் அவர்களுக்கு விவேக் ஓபராய் வந்து போன கண்காட்சியின் தருணங்கள் தன் வாழ்வின் 'ஆட்டோகிராஃப்' ஆக மிளிர வாய்ப்புண்டு. விவேக் ஓபராயின் புகைப்படங்களே வரவேற்பறையில் போட்டிருந்த மேசையின் மேற்பரப்பு முழுவதையும் 'தத்து' எடுத்திருந்தன. கண்காட்சிக்குள் அதிநவீன மேட்டுக்குடிப் பெண்களின் மெல்லிய சிரிப்பொலிகளின் சிதறல்கள், ஏதோ ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்குள் நுழைந்துவிட்ட உணர்வைத் தோற்றுவித்தன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி வழங்குகிறோம் என்ற பெயரில் மக்களின் நிதியைத் தாங்களே சுருட்டிக் கொள்ளும் மோசடித்தனம், விளம்பரங்களுக்காக அலையும் போலிகளின் அருவெறுப்பு மிகுந்த நிகழ்வுகள், அகதிகளைப் போல மீனவர்களைத் துரத்தும் அரசின் திமிர்த்தனம், இதை எதிர்க்கும் மக்களின்மீது அடக்குமுறை-ஆகியவை பற்றி ஒரு சின்னக் கோடுகூட இல்லாமல் பார்த்துக் கொண்டு, நெட்-தொலைக்காட்சி - செய்தித்தாள்களில் வந்த செய்திப் பதிவுகளை மட்டுமே, பாலித்தீன் கவருக்குள் திணித்த 'மலர்க்கொத்தாக', வண்ணங்கள் நிரப்பி நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட அழகிய சட்டங்களாக நம் பார்வைக்குப் படைத்திருந்தார் ஓவியர் ரமேஷ்.

சுமத்ரா தீவு, நிகோபார் தீவுகள் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தது தெரிந்தும் இரண்டு மணி நேரமாக சுனாமி பற்றித் தகவல் தராத அரசின் அலட்சியம், 5 நாட்கள் ஆகியும் அழுகிய பிணங்களைக் கூட அப்புறப்படுத்த வராத அரசின் திமிர், பேரழிவு மிகுந்த நேரங்களில் அரசின் துளி உதவியுமின்றி மக்களுக்கு மக்களே உதவிக் கொண்ட ஜீவ மரணப் போராட்டம்.... என்று சுனாமியின் நிகழ்வுகள் இன்றும் நம் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நிஜங்கள் பற்றிக் கவலைப்படாத ஓவியர் ரமேஷ், இலங்கைத் தடுப்பு அரணாக இருந்ததனால்தான் 'திருச்செந்தூரில் செந்தில்நாதனின் அரசாங்கம்' அழியவில்லை என்ற பூகோள அறிவு கூட இல்லாமல், திருச்செந்தூர் முருகனின் அருளால் தான் திருச்செந்தூர்ப் பகுதியில் பாதிப்பு ஏற்படவில்லை என்று விளக்கம் கூறி, அதற்காக ஓர் ஓவியமும் வரைந்து பார்வைக்கு வைத்திருந்தார். திருவாளர் ரமேஷ் இந்த ஓவியத்தை இந்து முன்னணிக்கு வழங்கினால் 'உலகப் புகழ்மிக்க' ஓவியமாக அவர்கள் அதை மாற்றிக் காண்பிப்பார்கள்.

''இக்கண்காட்சி நடத்துவதற்கு உங்களுக்கு யாராவது உந்துதலாக (இன்ஸ்பிரேசனாக) இருந்தார்களா?'' என்ற கேள்விக்கு (சுனாமியில் நடந்த வீர நிகழ்வுகள் ஆயிரமிருக்க) ''மனிதாபிமானத்தோடு பார்த்திபன் வீதியில் இறங்கி சுனாமிக்கு நிதி வசூல் செய்தது என்னை நெகிழச் செய்துவிட்டது'' என்றார் ஓவியர் ரமேஷ்.

தன் 'கிறுக்கல்கள்' நூல் வெளியீட்டு விழாவில் ஆயிரம் பேர் பார்த்திருக்க, அனாதைக் குழந்தைகளுக்கு மேடையிலேயே விருந்திட்டு (விளம்பரமிட்டு) 'விருந்தோம்பலின்' புகழ் நிறுத்தியவர் மனிதாபிமானி பார்த்திபன்.

''ஓவியங்களுக்கு நடுவே விவேக் ஓபராய் நடித்த சினிமா ஸ்டில் ஒன்று வைக்கப்பட்டுள்ளதே'' என்று அதிர்ச்சியோடு பார்த்தால், ''அதுவும் ஓவியம் தான்'' என்று கூறி தேவனாம்பட்டின ஹீரோவுக்கு 'டைட்டில்' பாட்டு பாடினார் ரமேஷ்.

''சுனாமியில் ஏற்பட்ட துயரத்தையும், போராட்டத்தையும் சில நேர்த்தியான, உக்கிரமான கோடுகள் மூலம் பதிவு செய்திருக்கலாமே, ஏன் இவ்வளவு வண்ணங்கள்'' - என்று தொடர்ந்து ரமேஷின் முன் கேள்வியை நிறுத்த, ''பெயிண்டிங்குகள் எல்லாம் 3000 ரூபாய்க்கும் மேல; வாங்கிட்டுப் போயி வீட்ல மாட்டுறவங்களுக்கும் கொஞ்சம் திருப்தியா இருக்கணும்; கோடுகள்ல இருந்தா அவ்வளவு நல்லா இருக்காது, அதான் வாட்டர் கலர்ஸ் அதிகமாக 'யூஸ்' பண்ணி, 'கலர் ஃபுல்லா' வரைஞ்சுட்டேன்'' என்றார் அலட்டலாக.

யார் லலித்கலா அகாடமியில் நுழைந்து இந்த பெயிண்டிங்குகளை வாங்கிச் செல்வது? அடித்தட்டு மக்களா? நிச்சயம் இல்லை. ஏனெனில் விரிசல் விழுந்த அவர்களின் வீட்டுச் சுவர்களே ஆயிரம் பெயிண்டிங்குகளுக்கு சமம். அதன் மீது எதற்கு இன்னொரு பெயிண்டிங்? பிறகு யார்தான் இவ்வளவு பணம் கொடுத்து வாங்குவது? இருக்கிறார்கள். அவர்கள்தாம் 'நம்' கலை அபிமானிகள், தம் வீட்டு பங்களாச் சுவர்களின் காலி இடங்களை வண்ணாங்களால் நிரப்பக் கூடிய வல்லமை படைத்தவர்கள். தங்களுக்கு எதிரே கழிப்பறைச் சுவர்களில் மோனோலிசா ஓவியம் இருந்தால்தான் மலம் கழிப்பது கூட ரசனைக்குரிய விசயமாக இருக்கும் என்று கருதும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குப் பணம் ஒரு பொருட்டல்ல. படைப்புதான் முக்கியம், அதுவும் இவர்களின் 'டேஸ்ட்'டிற்குத் தகுந்தாற் போல் இருக்க வேண்டும்.

அதனால்தான் இங்கே கண்ணீர் துளிகளைக் கூட கலர்ஃபுல்லாகத் தர வேண்டிய வக்கிரம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

● முகிலன்

**ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை**
*- பி. இரயாகரன், சமர் வெளியீடு*

சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்புலத்தில் இலங்கையில் தீவிரமடைந்து வரும் மறுகாலனியாக்க நடவடிக்கைகளை ஆதாரங்களுடன் விவரிக்கிறது இந்நூல். யுத்தச் சிதைவிலிருந்து மீள்வதற்கான உதவி என்ற பெயரில் பொதுக் கழிப்பிடம் கட்டுவதற்குக் கூட சிங்கள அரசு உலகவங்கியிடம் கையேந்துவதையும், புலிகளின் மாவீரர் தின விழாவிலேயே கோகோகோலா விளம்பரம் மின்னுவதையும் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். சிங்கள அரசு மட்டுமின்றி புலிகளின் 'தமிழ்த் தேசியமும்' ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்குச் சரணடைவதை நிறுவுகிறது இந்நூல்.




**விலை:ரூ. 70**

**கிடைக்குமிடம் :**

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 28412367.

படிப்பகம்